Registered as a News Paper in Sri Lanka
அறிமுக விலை : ரூபா 20.00


# தினச்செய்தி வாரமலர்

என்றும் உங்களுடன்

அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் தினந்தோறும் இணையத்தில் அறிந்து கொள்ள
www.thinacheithi.com

பக்கம் 24 | ஒக்.04–10, 2015 | செய்தி – 01

# ஐ.நா தீர்மான நிறைவேற்றம் — வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு



இலங்கை தொடர்பாக ஐ.நா. வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜெனிவாவில் அவர் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவரது உரையில் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த தீர்மானமானது மிகவும் கஸ்ரமான பேச்சுவார்த்தை மத்தியில் விளக்கப்பட்ட ஒரு வரைபாக இருக்கின்றது. இதிலே ஈடுபட்ட நாடுகளுக்கு எம்முடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தத் தீர்மானமானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. ஏனெனில் இதுவரை இலங்கை அரசு இவ்வாறான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளாமல் கடந்த காலங்களில் புறந் தள்ளி சர்வதேசத்தின் நியாயமான கரிசனைகளைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் செயற்பாடுகளில் இருந்து மாறுபட்டு புதிய முயற்சிகளை செயற்படுத்தியது.

ஆனால் இந்தத் தீர்மானமானது வெறும் வார்த்தைகளாகவும், எழுத்துக்களாகவும் இல்லாமல் சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தி நிறைவேற்றவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னர் இருந்ததைவிடவும் பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வலுக்குறைந்ததாகக் காணப்பட்டது உண்மை. ஆனால் வேறு சில பகுதிகள் முன்னேற்றமாக முன்பிருந்ததை விடவும் வலுக்கூடியதாக வந்திருந்ததை நாம் காண்கின்றோம். எனவே, எமது மக்களுக்காக அவற்றில் சில மாற்றங்களை நாங்கள் விரும்பி ஏற்றுக்கொண்டாலும் இது ஒரு முன்னேற்றமான முக்கியமான அடிக்கல். இதில் நாம் பயணமாவதற்கு தயாராக வேண்டும்.

அவர்களோடு சேர்ந்து இந்த கஸ்ரமான பாதையில் நாங்கள் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம். எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாமலும் எங்களுடைய மக்களுக்கு முழுமையாக நீதி கிடைக்கவும் எங்களுடைய அரசியல் பிரச்சினைக்கு அபிலாசைகள் பூரணமாக நிறைவேறக்கூடிய வகையிலே ஒரு தீர்வு வருவதற்கு இதையொரு சந்தர்ப்பமாக சொல்லிக் கொள்கின்றோம்.

→ பார்க்க பக்கம் 3இல்












தினச்செய்தி

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com

# விளைவுகளை உருவாக்குமா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாரிய விளைவுகளை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை சம்பந்தப்பட்ட தீர்மானம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியுள்ளது.

பேரவையின் 30ஆவது அமர்வில் 40 ஆவது கூட்டத்தொடரின் அங்கமாக இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

47 உறுப்பு நாடுகள் இதனை அங்கீகரித்துள்ளன.

இந்தத் தீர்மானத்தை ஆரம்பத்தில் அமெரிக்கா பிரேரிக்க முன்வந்தது.

அதையடுத்து இலங்கை இணைப் பிரேரணையாளராக இணைந்து சமர்ப்பித்தது.

இலங்கையில் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் , மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.. இந்தத் தீர்மானத்தை இலங்கை உட்பட 25 நாடுகள் அங்கீகரித்தன.

இந்த தீர்மானத்துக்கு அல்பேனியா, அவுஸ்ரேலியா, ஜேர்மனி, கிறீஸ், லத்வியா, மொன்ரெனிக்ரோ, போலந்து. ருமேனியா, மசிடோனியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

இந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வரவேற்றுள்ளார்.

அவர் குறிப்பிடுகையில், இலங்கையின் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்டு ஐ.நா.மனித உரிமை உயர்ஸ்தானிகர் கொண்டு வந்த தீர்மானம் மிகவும் சுதந்திர முக்கியம் வாய்ந்தது எனக் குறிப்பிட்டார்.

எனினும் இந்தத் தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துவதை ஐ.நா.சபை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் பல அரச தலைவர்களும் அரசியற் கட்சிகளும் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் கொலைகள் சம்பந்தமான விசாரணை செய்ய சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தக் கருத்தினை கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் போன்றோர் தொடர்ந்தும் வற்புறுத்தி வருகின்றனர்.

இதே கருத்தை வடமாகாண சபைத்தலைவரும் முன்னாள் நீதியரசருமான விக்னேஸ்வரனும் வலியுறுத்தி வருகின்றார்.

இலங்கை அரசாங்கம் ஆனது இந்தக் கருத்தினை வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசையும் மக்களையும் உற்சாகப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மனித உரிமை சட்ட நீதிமுறை ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக ஜெனீவாவிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான ரவிநாத் ஆரியசிங்க இந்தத் தீர்மானம் சம்பந்தமாக ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் ஒக்டோபர் 1ஆம் திகதி பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது வரவேற்கத்தக்க நிகழ்வல்ல. ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் பல நாடுகள் பற்றி நிறைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வியட்நாம், இஸ்ரேல், சிரியா, சூடான், வடகொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டதெல்லாம் நிலுவையில் கிடப்பிலுள்ளது.

ஆனால் இலங்கை இந்தத் தீர்மானத்தை பிரேரிக்கும் நாடாக மாறி அமுல்படுத்த முன்வந்தது பாரதூரமான விளைவுகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழரின் பேரழிவிற்கு வன்முறையே காரணம்




தமிழினத்திற்கு பெரும் அழிவு ஏற்பட்டது வன்முறையின் காரணமாகவே. நாங்கள் ஏன் வன்முறையைப் பின்பற்றினோம் என்ற கேள்வி இன்று வரை இருந்து கொண்டே உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் அகிம்சைதினம் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவரது உரையின் முழு வடிவம் வருமாறு.

நாங்கள் இன்று சர்வதேச அகிம்சை தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த தினம் மகாத்மா காந்தியினுடைய பிறந்த தினத்தில் நடைபெறுகின்றது. ஐ.நா. சபையினுடைய ஒரு தீர்மானத்தின் அடிப்படையிலேயே மகாத்மாகாந்தியினுடைய பிறந்த தினம் ஐப்பசி மாதம் 02ஆம் திகதி சர்வதேச அகிம்சை தினமாக அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.



அவர் பின்பற்றிய முதல் தத்துவம் சத்தியம். சத்தியம் என்றால் உண்மை. அதுதான் அவர் பின்பற்றிய முதல் தத்துவம். சத்தியாக்கிரக விரதம் அவருடைய மற்றைய தத்துவம் அகிம்சை எவ்விதமாக சத்தியத்தை வெளிக்கொணர்வது அதை வெளிக்கொணர்வதற்கு அகிம்சை பயன்படுத்த வேண்டும. அகிம்சை ஊடாகத்தான் சத்தியம் வெளிக்கொணரப்படலாம். அகிம்சை என்பது மன்றாடல். அகிம்சை அவர். பயன்படுத்திய போதே அவர் 03 கருமங்களைப் பின்பற்றினார். ஒன்று பிரார்த்தனை.

பிரார்த்தனை ஊடாகவும் விரதத்தின் ஊடாகவும்தான் அவர் தனது அகிம்சையைப் பின்பற்றினார். அதன் மூலமாகத்தான் அவர் உண்மையை அடைந்தார். மகாத்மாகாந்தி ஐக்கிய இராச்சியத்துக்கு சென்று அங்கு ஒரு சட்டத்தரணியாகக் கல்வி கற்று சித்தியடைந்து திரும்பவும் இந்தியாவுக்கு வந்து சில வருடங்கள் தொழில் பார்த்தார். அதற்கு பிறகு தென்னாபிரிக்கா சென்றார். தென்னாபிரிக்காவில் நீண்ட காலமாக தொழில் பார்த்தார். இவர் தென்னாபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் கறுப்பு நிற மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளைக் கண்டு அதை அவர் நிறுத்துவதற்கு தான் முயற்சிக்க வேண்டும் என்று சத்தியாகிரகத்திலும் அகிம்சையிலும் ஈடுபட்டார். கறுப்பு நிற மக்கள் சார்பாக வெள்ளையர்களின் அட்டூழியங்களுக்கு மாறாக அந்த போராட்டங்கள் அமைந்தன. அக்காலகட்டத்தில் தென்னாபிரிக்காவில் ஓடிய புகையிரதத்தில் வெள்ளை நிற மக்களுக்கு மிகவும் சிறப்பான அறைகளும், கறுப்புநிற மக்களுக்கு தரம் குறைந்த அறைகளும் இருந்தது வழக்கம். மகாத்மா காந்தி அதிலே பயணம் செய்த பொழுது வெள்ளை நிற மக்களுக்குரிய ஒரு அறையில் தங்கினார். வேண்டுமென்றே அந்த சட்டத்தை மீறுவதற்காகவே அந்தப் பகுதியில் ஏறி அவர் அமர்ந்தார்.

ஆனால் பலாக்காரமாக வெளியேற்றப்பட்டார்.தூக்கி வீசப்பட்டார் எனக்கு ஞாபகமாக இருக்கின்றது சில வருடங்களுக்கு முன்பதாக அமெரிக்காவின் ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்கள் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். அந்த உரை யின் போது அவர் இந்தச் சம்பவம் பற்றி பேசினார். மகாத்மாகாந்தி எந்த விதமாக தனது சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டார் எந்தவிதமாக வெள்ளை ஆட்சியாளர்கள் அவரைத் தூக்கி அந்த வண்டியிலிருந்து வெளியே வீசினார்கள் நான் கறுப்பினத்தைச் சார்ந்த ஒரு பிரஜை இன்றைக்கு அமெரிக்காவினுடைய ஜனாதிபதியாக முதல் கறுப்பின ஜனாதிபதியாக நான் இருக்கிறேன். வெள்ளை மாளிகைக்கு எனது பயணம் ஆரம்பித்தது நேற்று இன்றைக்கு அல்ல மகாத்மாகாந்தி என்றைக்கு அந்த புகையிரத வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டாரோ வெளியேற்றப்பட்டாரோ அந்தத்தருணத்தில் தான் எனது பயணம் வெள்ளைமாளிகைக்கு ஆரம்பித்தது என்று அவர் கூறினார்.

அவருடைய அர்த்தத்தை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விதமான அநீதியை எதிர்த்துப் போராட வேண்டியது எம்முடைய கடமை அதிகமான கடமையை நாங்கள் நிறைவேற்றுகின்ற போது அந்தப்பிரச்சினையை மாத்திரம் நாங்கள் தீர்ப்பதில்லை. பல்வேறு அநீதிகளுக்கு முடிவு கட்டுகின்ற நிலைமையை ஏற்படுத்தப் போகிறோம் ஒரு வழியை நாங்கள் காட்டுகின்றோம்அது எங்களுடைய முக்கிய பங்களிப்பாக அமைய வேண்டும்.

மகாத்மாகாந்தி இந்தியாவுக்கு திரும்பி வந்தார் என்னுடைய பல நண்பர்கள் விசேடமாக ஆபிரிக்க நாட்டில் நீண்ட காலமாக இருந்தவர்கள் எனக்கு கூறுவார்கள் மகாத்மாகாந்தி தென்னாபிரிக்காவுக்கு ஒரு சாதாரண சட்டத்தரணியாக வந்தார். அவரை நாங்கள் தான் மகாத்மாவாக திருப்பி இந்தியாவுக்கு அனுப்பினோம் என்று. அந்தளவிற்கு அவர் அந்த மக்களுடைய உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டார். அந்த காரணத்தின் நிமிர்த்தம் தான் அவரை தென்னாபிரிக்காவிலிருந்து வெளியேறிய போதே அவரை மகாத்மா என மக்கள் அழைக்கின்றார்கள். இந்தியாவிற்கு வந்து அவர் ஆற்றிய பங்களிப்பு பற்றி எல்லோரும் அறிந்த விடயம் அவர் நாட்டினுடைய சுதந்திரத்துக்காக மட்டும் போராடவில்லை நாட்டில் வாழ்கின்ற மக்களுடைய சமத்துவத்துக்காகவும் போராடினார். சமூகத்தில் சமத்துவம் இருக்க வேண்டும். தீண்டாமை சாதி ஒழிக்கப்படல் வேண்டும். மதங்கள் மத்தியில் இருக் கின்ற வேற்றுமைகள் இனங்கள் மத்தியில் இருக்கின்ற வேற்றுமைகள் எல்லாம் நீக்கப்படல் வேண்டும். எல்லா இந்தியர்களும் ஒருமித்து ஒரு தேசமாக இருக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் அவர் பெரும் பங்காற்றினர்.

இந்திய மக்களை ஒருமைப்படுத்துவதில் ஒற்றுமைப்படுத்துவதில் ஒரே வழியில் செல்ல வைப்பது அவருடைய பங்களிப்பு ஆகும். அதே நேரத்தில் தனது தத்துவங்களின் அடிப்படையில் சத்தியத்தின் அடிப்படையில் பிரார்த்தனை மூலமாக விரதங்களின் மூலமாக வெள்ளையர்களுக் கெதி

(தொடர்ச்சி 03இல் ...)

# ஐ.நா. தீர்மான நிறைவேற்றம்...

இந்தத் தீர்மானத்தில் ஓரிரு விடையங்களை கோடிட்டுக் காட்ட விரும்புவது என்னவெனில் முதலாவதாக ஐ.நா. மனித உரிமைப் பேரவை உயர்ஸ்தானிகருடைய பரிந்துரைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என முதலாவது பந்தியில் சொல்லப்பட்டுள்ளது. அதை வைத்துத்தான் அதன் பின்னர் வருகின்ற சிபாரிசுகளை நாங்கள் அவதானிக்க வேண்டும்.

அதிலும் முக்கியமான பரிந்துரையாக கலப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டு போர்க்குற்றங்களும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களும் விசாரிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்படவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கலப்பு நீதிமன்றில் பொதுநலவாய நீதிபதிகள் மற்றும் சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் என சொல்லப்பட்டிருந்தது. இம்மாற்றத்தை நாம் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம்.

சர்வதேசம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தால் இலங்கையைச் சேர்ந்தவர்களும் சர்வதேச சட்டத்தில், சர்வதேச மன்றில் அனுபவம் பெற்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போதிருக்கின்ற வரைபில் வெளிநாட்டவர்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமை முன்னேற்றகரமானது என்பதை நாம் காண்கின்றோம். எங்களுடைய நாடு பொதுநலவாய நாடுகளின் கூட்டில் இணைந்தநாடு. நாட்டின் ஜனாதிபதிதான் இப்போதும் பொதுநலவாய நாடுகளின் தலைவராக உள்ளார். எங்களுடைய சட்ட திட்டங்கள் அதற்கு அமைந்ததாக இருக்கின்றது.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பது அத்தியாவசியமானது. எனவே இலங்கையர்கள் அல்லாதவர்கள் நீதிபதிகளாகவும், வழக்குத்தொடு நர்களாகவும், இந்தச் சட்டப்பொறி முறைக்குள் பங்கேற்பது மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது.

இலங்கையிலுள்ள நீதிமன்ற முறை நம்பிக்கையிழந்த காரணத்தினால்தான் ஐ.நா. இப்படியான பரிந்துரையை வரைந்துள்ளது. இதற்கான தீர்மானம் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துகின்ற போது இப்படி யான முறைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து பலருக்கும் பல சந்தேகங்கள் உண்டு.

ஆனால் பாதிக்கப்பட்ட சமூகம் சார்பாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாக எம்முடன் தொடர்ச்சியாகக் கலந்தாலோசித்துத்தான் எல்லா நடைமுறைகளும் செய்யப்படவேண்டும் என்பது எங்களது வெளிப்பாடு. இதற்கு தொடர்ந்து அழுத்தத்தைக் கொடுப்போம். அத்துடன் சர்வதேச சமுகத்தின் முழுமையான ஆதரவு எமக்குக் கிடைக்குமென நம்புகின்றோம்.

தமிழ்மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றவர்களாகவுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இணக்கப்பாடின்றி எந்தவிதமான ஒரு பொறிமுறையையும் செயற்படுத்தக் கூடாது. எங்களுடைய முழுப்பங்குபற்றுதலுடனேயே அதைச் செய்யவேண்டுமென வற்புறுத்த விரும்புகின்றோம்.

அதேபோல் அரசியற் தீர்வு தொடர்பாக ஒரு முக்கியமான பகுதி இந்தத் தீர்மானத்தில் அடங்கியிருக்கிறது. எங்களுடைய நீண்டகாலப் பிரச்சினை இதுவாகும். இது எல்லாவற்றுக்கும் ஆணிவேராக இருக்கின்ற மூலப்பிரச்சினை.

புதிய ஒரு அரசியலமைப்பு உருவாக்கப்படுவதன் மூலம் இது தீர்க்கப்படவேண்டுமென வெளியுறவுத் துறை அமைச்சர் தன்னுடைய பேச்சில் கூடச் சொல்லியிருக்கிறார். அதிகாரப் பகிர்வின் மூலமாக அரசியல் பிரச்சியை தீர்க்கப்படவேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்திலும் ஒரு புதிய அரசியலமைப்பு பொறிமுறைமூலம் அரசியல் பிரச்சினைக்கு முடிவு காணப்படவேண்டுமென சொல்லப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது விடயமாக இதனைத் தொடர்ந்து மீளாய்வு செய்வது சம்பந்தமாக கூறப்பட்டிருக்கிறது. இது ஆரம்பத்தில் வரைபில் இருக்கவில்லை. ஆனால் 9 மாதத்தில் இதுகுறித்த முன்னேற்றம் குறித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும். அதைத்தொடர்ந்து 18 மாதங்களில் முழுமையான கலந்துரையாடல் இங்கு நடைபெறுமென்று இங்கு சொல்லப்பட்டுள்ளது. ஐ.நா. மனிதஉரிமை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் நான் கேட்டுக்கொள்வது தொடர்ந்தும் உங்களது ஈடுபாடு இதில் இருக்கவேண்டும். குறிப்பாக இந்த 18 மாத காலப்பகுதியில் முழுமையான ஈடுபாடு இருக்கவேண்டும். எங்களுடைய கருத்துக்களையும் நீங்கள் உள்வாங்கவேண்டும் என இலங்கை அரசாங்கத்திடமும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது மாற்றத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அந்த மாற்றம் உண்மையாகவே நடைமுறையில் எமது மக்களுக்கு விசேடமாக பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்கக் கூடிய வகையில் இனப்பிரச்சினைத் தீர்வு அரசியல் அபிலாசைகள் முற்றிலுமாக நிறைவேறத்தக்க வகையில் செயற்படுத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். உண்மைத் தன்மையுடன் நாங்கள் செயற்படுவோம்.

நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படவேண்டும், இராணுவம் பொதுமக்களுடைய வாழ்க்கையில்



ஈடுபடாமல் விலகவேண்டும். அவசரகாலச் சட்டம் மீளாய்வு செய்யப்படவேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்று தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்படும் பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்குமென நாங்கள் நம்புகின்றோம். அதனையும் உடனடியாகச் செய்யவேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

உள்நாட்டிலே தான் சட்டங்கள் திருத்தப்படவேண்டும். இங்கே கலப்பு நீதிமன்றங்கள் இருக்கின்ற நாடுகளைப் பார்த்தால் அந்தந்த நாடுகளிலேயே சட்டங்கள். இயற்றப்படுகின்றன. இலங்கையில் சட்டங்கள் இயற்றப்படுவதை ஒரு நாட்டிற்கான தனித்தன்மை என்று அவர்களால் வர்ணிக்க முடியும். ஆனால் இன்றைக்கு சர்வதேச நீதிமன்றத்தில் கலப்பு நீதிமன்றம் எப்படியானது என்ற விளக்கம் யாருக்காவது இருக்குமானால் இந்த தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பது கலப்பு நீதிமன்றம் தான்.

சாட்சிகள் பாதிக்கப்பட்டவர்களுடைய பாதுகாப்பு சம்பந்தமான சட்டமும் மீளாய்வு செய்யப்படவேண்டும் என சொல்லப்பட்டிருக்கின்றது. சட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதில் பல துறைகள் இருக்கின்றன. அதை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இந்தத்தீர்மானத்தில் அது நிறைவு செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது செய்தாலும் கூட சாட்சியங்களுடைய பாதுகாப்பு அவர்கள் இருக்கும் இடங்களிலும் பாதுகாப்புத்தரப்புத்தான் அந்த பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் எங்களின் அனுபவத்தில் எங்களுடைய மக்கள் துணிகரமாக சாட்சியங்களை கொடுக்கின்றனர்.

மிகவும் பயங்கரமான சூழ்நிலையிலும் சாட்சியங்களை வழங்குகின்றனர். ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் இன்னும்கூடுதலாக சாட்சியங்கள் கொடுக்கின்றார்கள். இப்பொழுது ஒரு சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குத்தொடுநர்கள் சேர்ந்து இயங்குகின்ற நீதிமன்றில் அவர்கள் துணிந்து சாட்சியங்கள் கொடுப்பார்கள் என்று ஒரு நம்பிக்கை. அப்படியான சூழ்நிலை அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமென்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால் இதுவொரு முக்கியமான விடையம். அப்படியான பாதுகாப்பு நடாத்தப்படுகின்ற போது எமது உண்மை யான பங்களிப்பை நாங்கள் கொடுப்போம்.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாண்மையாகப் பெண்களே உள்ளனர். உள்நாட்டில் விசாரணை நடைபெறும் போது அவர்கள் சாட்சியம் அளிப்பதற்கான ஒழுங்குமுறைகளை நாம் செய்வதற்கு நாம் எத்தனிப்போம். முன்னர் கூட டாக்டர் மனோகரன் சாட்சியமளிக்க முற்பட்டவேளை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் அது நிறுத்தப்பட்டது.

எனவே தற்போது வீடியோ எடிற்றிங் மூலமாக சாட்சியமளிக் கின்ற முறை இலகுவாக இருக்கு மென நாம் நம்புகின்றோம்.

---

ராக தனது போராட்டத்தை ஆரம்பித்து தீவிரமாக நடாத்தி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்.

பாகிஸ்தான் என்ற நாடு உருவாவதை அவர் விரும்பவில்லை. ஆனால் அவர் அதில் வெற்றி காணவில்லை. நாடு பிரிக்கப்பட்டது. பாகிஸ்தான் உருவானது. இரண்டு பிரிவாக உருவானது. கிழக்கிலும், மேற்கிலும். ஆனால் அந்த ஒவ்வொரு பிரிவிலும் வாழ்ந்த முஸ்லிம் மக்களுடைய எண்ணிக்கை பிரிக்கப்பட்ட பிறகு இந்தியாவில் வாழ்ந்த முஸ்லீம் மக்களிலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டது. அதன் பிறகு பாகிஸ்தான் பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் இரண்டு நாடுகளாக இருக்கின்றன.

எமது தலைவர் தந்தை செல்வா அவர்களை எமது நாட்டில் வாழ்கின்ற மக்கள் மாத்திரமல்ல ஏனையவர்களும் கூட ஈழத்தின் காந்தி என வர்ணித்து வருகின்றார்கள்.

தந்தை செல்வா அவர்களும் அவருடைய காலத்தில் சத்தியத்தையும் அகிம்சையையும் பின்பற்றியவர். 1962ஆம் ஆண்டு நாங்கள் பாரிய சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

வடக்கிலும் கிழக்கிலும் ஆரம்பித்து கச்சேரி வாசலுக்கு முன்பாக நாங்கள் மறியல் செய்து அதாவது அரசாங்க அதிபருடைய அலுவலக வாசலுக்கு முன்பாக நாங்கள் மறியல் செய்து பிரார்த்தனை யில் ஈடுபட்டு விரதத்திலீடுபட்டு அரசாங்க அதிபரோ அவருடைய ஊழியர்களோ கச்சேரிக்குச் செல்வதை நாங்கள் தடுத்தோம்.

பலவாரமாக வெற்றிகரமாக இந்தப் போராட்டம் வடக்கிலும், கிழக்கிலும் நடைபெற்று வந்தது.

அந்த நேரத்தில் ஒருகால கட்டத்தில் சில வாரங்களுக்குப் பிநு எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. அரசாங்கம் ஒரு அரச கட்டளைச் சட்டத்தை செய்யப் போகின்றது.

ஒரு ஊரடங்குச்சட்டத்தைப் பிரகடனம் செய்யப் போகின்றது. அதற்குப் பிறகு எவரும் வெளியே வர முடியாது. சத்தியாக்கிரகம் செய்ய முடியாது என்ற தகவல் எமக்குக் கிடைத்தது.

அப்போது நாங்கள் எல்லோரும் ஒன்று கூட வேண்டும் என்ற தந்தை செல்வா அவர்களின் கட்டளையின் பேரில் வவுனியாவில் இரகசியமாக ஒன்று கூடினோம். உரையாடினோம்.

திடீரென சொன்னார்கள் அமிர தலிங்கம் உட்பட, ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால் அதை நாங்கள் மீறவேண்டும். நாங்கள் வெளியே வரவேண்டும். நாங்கள் போராட வேண்டும் என்று சொன்னார்கள்.

தந்தை செல்வா அவர்கள் எல்லாவற்றையும் மிகவும் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு இறுதியில் சொன்னார் அவ்விதமாக நாங்கள் செயற்பட்டால் அது வன்முறையில் முடியும். வன்முறைக்கு நாங்கள் இடம் அளிக்கக் கூடாது. எமது மக்களைத் தியாகம் செய்வதற்கு நான் தயாராக இல்லை. ஆகையினால் அவ்விதமாக ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டால் எமது போராட்டத்தை நாங்கள் நிறுத்தி பின்னர் ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறினார்.

தந்தை செல்வா அவர்கள் வன்முறையை விரும்பவில்லை. அவர் வன்முறையை எதிர்த்தார்.

தந்தை செல்வாவினுடைய சத்தியம் உண்மை பின்பற்றக் கூடிய தத்துவம் தன்மை, ஒழுங்கு, ஒழுக்கம் .

ஏன் நமது இனம் வன்முறையைக் கையாண்டது என்பது கேள்வி. எமது இனம் வன்முறையை பின்பற்றியது. அதன் காரணமாக எமது இனத்திற்குப் பெரும் அழிவு ஏற்பட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் இருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் ஏன் வன்முறையைப் பின்பற்றினோம் என்பது பெரிய கேள்வி .

1976ஆம் ஆண்டு எமது இறைமையை நாங்கள் பெற வேண்டும் பெறுவதற்கான விருப்பத்தை நாங்கள் செய்தோம். அதைத் தொடர்ந்து வன்முறை நமது சமூகத்தில் ஏற்பட்டது. அந்த வன்முறையை நாம் ஏன் தேர்ந்தெடுத்தோம் என்ற கேள்வி இன்னமும் உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

# சிங்கள இனம் சிறப்பாக வாழ பாடுபட்டு வரும் தமிழர்

இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகியோர் பூர்வீக இனமாக இருந்தபோதிலும் தொகையில் குறைவான தமிழர் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அரச இயந்திரத்தை இயக்குபவர்களாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னான காலகட்டத்தில் தமிழரின் முக்கியத்துவம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்ட போதிலும் தமிழர் தமக்காக வாழாது சிங்கள இனம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதற்காகவே பாடுபட்டு வருகின்றனர்.

இலங்கை வரலாற்றில் வாழ்ந்த தமிழ் மன்னர்களில் எல்லாளனுக்கு முதன்மையான இடமுண்டு. இது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து சங்கதியாகும். எல்லாளன் துட்டகைமுனு என்ற சிங்கள இளவரசனால் தோற்கடிக்கப்பட்டாலும் சிங்கள மக்கள் மத்தியில் எல்லாளனுக்கு தனியிடம் இருந்தது.

எல்லாளனை வெற்றி கொண்டதை சிங்கள இனம் பெருமையாகக் கருதியது என்பது சிங்கள இனத்திற்கு எதிராகவே செயற்படுகின்ற கருத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கும் பணியை மகாவம்சம் ஆரம்பித்து விட்டது.



போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் தமிழர் வெள்ளைக்காரர்களுடன் இணைந்து நின்றது போல சிங்கள மக்களைப் பாதிப்பதாக்க முற்பட்டதையும், அவனை ஒரு மானமுள்ள சிங்களவனாக சிங்கள மக்கள் வர்ணித்ததையும் காண முடிந்தது.

இவற்றைவிட தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழருக்குச் சார்பாக நடாத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களும் சிங்கள மக்களை சிந்திக்க வைத்தது. தமிழர்கள் சிங்கள மக்களை அழிப்பார்கள் என்ற அச்சம் எப்போ

30இற்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் விடுதலைப் புலிகளால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் கிழக்கு மாகாணத்தில் பாரிய அதிர்வலையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

கெப்பிட்டிக்கொல்லாவ பஸ் குண்டுத் தாக்குதலின் போது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த இடத்தைப் பார்க்கச் சென்றிருந்த போது தனது பிள்ளையை பறிகொடுத்த ஒரு தந்தை 'இன்றுமா இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்' என்று கதறியழுது சிங்கள இனத்தை உடனடியாகக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறே கதறியழுதார்.

கொழும்பில் புலிகள் விமானக் குண்டுகளை வீசியதுகூட இவ்வாறே நோக்கப்பட்டது. அதாவது சிறுபான்மை இனமொன்று பெரும்பான்மை இனத்துக்கு கைநீட்டும் அளவிற்கு வந்துவிட்டதா? என்பதே சிங்கள மக்களின் அங்கலாய்ப்பும் அதற்கு எதிராக அணி திரண்டு செயற் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற தமிழரின் சபதம்கூட வெளிநாட்டுச் சக்திகளுடன் இணைந்து சிங்கள மக்களை பழிவாங்கப் பார்க்கிறார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் ஒன்றாகி நின்றனர்.

புலம்பெயர் தமிழர்களின் புலி பிரசாரம் கூட சிங்கள மக்கள் தமக்குள் மிகவும் இறுக்கமாக ஒன்று குவியவும் அதிலிருந்து

**தமிழர் தமது இனப்பிரச்சினை விடயத்தில் நேர்வே ஊடாக சிங்கள மக்களை பழி வாங்கப் பார்க்கிறார்கள் என்பதில் சிங்கள மக்கள் இணைந்து நின்றனர்.**

எவ்வாறு தப்பிக் கொள்வது என்ற விடயத்தில் சிங்களப் புத்திஜீவிகள் எதிரும் புதிருமாக நின்ற சிங்களத் தலைவர்கள், கட்சிகள் எல்லாம் ஒன்றாகிவிட்டன. அல்லது அவ்வாறு இணையும் வாய்ப்பை தமிழர் கொடுத்துள்ளனர் என்பதுதான் உண்மை.

வட்டுக்கோட்டை தீர்மானம் என்பது தமிழினத்திற்கான பிரகடனமே. அதன் ஓர் அம்சமாகவே இந்திய மீன்பிடிக் குழுவினரையும் சிங்கள மக்கள்

கள இனத்தை ஆபத்தில் இருந்து காத்தவன் என்ற நன்றியுணர்வுடன்தான்.

இதன்பின்பு அவ்வப்போது தமிழ் மன்னர்களின் படையெடுப்பு தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போதிலும் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்புடன் மீண்டும் சிங்கள இனம் தமது அழிவையும் தம் மீதான அச்சுறுத்தலையும் உணர்ந்து கொண்டது. இதன்

**இலங்கை வரலாற்றில் வாழ்ந்த தமிழ் மன்னர்களில் எல்லாளனுக்கு முதன்மையான இடமுண்டு. இது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து சங்கதியாகும். எல்லாளன் துட்டகைமுனு என்ற சிங்கள இளவரசனால் தோற்கடிக்கப்பட்டாலும் சிங்கள மக்கள் மத்தியில் எல்லாளனுக்கு தனியிடம் இருந்தது.**

பின்னணியில் தமது எதிர்ப்புணர்வைக் காட்டினாலும் கி.பி 1070இல் சோழ சாம்ராச்யம் இந்தியாவில் நிலைகுலையத் தொடங்கியவுடன் இலங்கை மீதான சோழரின் பிடி தளர்ந்து போனது. சோழருக்கு எதிராக சிங்கள மன்னர்களும், மக்களும் இணைந்து செயற்பட்டார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

விஜயன் வருகையுடன் ஆரம்பித்த சிங்கள இராசதானி அல்லது இரஜரட்டை இராசதானி சோழர்களால் நிர்மூலமாக்கப்பட்டது என்பதை சிங்களவர் தமிழர் மீதான எதிர்ப்புணர்வாகவும் தென்னிந்தியா எப்போதும் பதாகவே இருந்தது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் அதை எதிர்க்க முடியாதிருந்தவர்கள் வெள்ளைக்காரர் இந்நாட்டை விட்டு வெளியேறியதும் தமிழருக்கு எதிராக திரண்டு கொண்டனர்.

பிரதேசம், மொழி, மதம், அந்தஸ்து, கல்வி, வேலை வாய்ப்பு என எல்லா விடயங்களிலும் தமிழருக்கு எதிரான எதிர்ப்புணர்ச்சி மேலோங்கியது. 1977, 1983 இனக் கலவரங்கள் விசேடமாக தமிழரை புறம்தள்ளுவதற்காக திட்டமிட்டுச் செய்யப்பட்டவையே.

1983 ஆம் ஆண்டின் விடுதலை இயக்கங்கள், தென்னிந்தியாவில் அவற்றுக்கான பயிற்சிகள் போன்றன ஜே.ஆர் தலைமையில் சிங்கள மக்களை அணிதிரள வாய்ப்பளித்தது. இந்தக் கட்டங்களில் தமிழர் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்தனர். அதற்கான நிவாரணம்எதுவுமின்றி அத்துமீறியவர்கள் அப்பாவிகள் மீது பழியைத் தள்ளிவிட வாய்ப்பாக அமைந்தது.

இதன்பின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் 1987 யூலை 29 இல் கைச்சாத்திடப்பட்டபோது சிங்கள இனம் கொதித்தது என்பதற்கு படைப் பிரிவில் அணி வகுப்பில் நின்ற விஜிதமுனி துப்பாக்கியால் இந்திய பிரதமரான ரஜீவ்காந்தியை தும் ஒரு கொதி நிலையில் இருந்து வருகிறது.



விடுதலைப் புலிகளால் அநுராதபுர புனித வெள்ளரசு மரம், பௌத்த விகாரை என்பன தாக்கப்பட்ட போது அப்போதிருந்த சிங்களத் தலைவர்களின் பின்னாலும், சிங்கள மக்கள் உணர்வுபூர்வமாக இணைந்து நிற்க வாய்ப்பளிக்கப்பட்டது.

தலதாமாளிகை குண்டு வெடிப்பு, புத்தபகவான புனித தந்தம் உள்ளதாக சிங்கள மக்கள் பெரிதும் போற்றப்படுகின்ற அவ்வணக்கஸ்தலத்தை புலிப் பயங்காரவாதிகள் தாக்கி அழிக்க எடுத்த முயற்சியாக இன்றுவரை சிங்கள மக்களும் பௌத்த துறவிகளும் அர்த்தப்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அறந்தலாவ பகுதியில் படவும் ஏதுவாய் அமைந்தது.

மஹிந்தராஜபக்ச புலிகளை தோற்கடித்ததற்குப் பழி வாங்கும் வகையிலேயே 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராக தமிழ் மக்கள் வாக்களித்தனர். இதுகூட பல சிங்களவருக்கு பிடிக்கவில்லை. ஒரு சிறுபான்மை இனம் எவ்வாறு சிங்கள மக்களின் வாழ்வியலைத் தீர்மானிக்க முடியும்? என்பதே அவர்களின் கேள்வியாகும்.

தமிழர் தமது இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே ஊடாக சிங்கள மக்களை பழி வாங்கப் பார்க்கிறார்கள் என்பதில் சிங்கள மக்கள் இணைந்து நின்றனர்.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது இனப்படுகொலைதான் இதற்கு சர்வதேசம் தீர்ப்புச் இந்தப் பின்னணியில்தான் பார்க்கின்றனர்.

சுருக்கமாகக் கூறுவதானால் தமிழர் தமது பிரச்சினையில் என்னவென்று தேடி அதன் மையக்கருவை தொடுவதற்கிடையில் ஒவ்வொரு கட்டத்திலும் சிங்களத் தலைவர்கள் தமது கருத்துக்களாலும், தமக்கு

அருணன்

ஏற்படப்போகும் அழிவுகள் பற்றியும் குறிப்பிட்டு தமக்குள் இணைந்து செயற்படுவதற்கான சூழலையும் அதற்கான வீரியத்தையும் தமிழர்களே கொடுத்தார்கள் என்பதை திடமாக நம்பமுடியும்.

# என்ன செய்யப் போகிறோம்?

வரும் என்று எதிர்பார்த்த பிரேரணை வெளிவந்துவிட்டது. ஜனவரி 08இல் ஆட்சி மாற்றம் தான் பிரேரணையின் காரத்தை 1000 மடங்கு குறைத்திருக்கிறது என்று எமது ஜனாதிபதி மைத்திரி மார் தட்டியிருக்கிறார். ஆனால் தமிழர் தரப்பு தலைவர்களோ மிகவும் ஒரு நெருடலான கட்டத்தினுள் இருப்பதாகத் தெரிகிறது. மெல்லவும் முடியாமல் கக்கவும் முடியாமல் இருப்பதைக் காண முடிகிறது.



இன்று உலகளாவிய ரீதியில் (இலங்கை உட்பட) அரசியலைப் பொறுத்தவரையில் மனிதாபிமானம் தொலைந்து இராஜதந்திரம் கோலோச்சுவதனைக் காண முடிகின்றது. பூகோள நிலைப்பட்ட அரசியலில் இன்று ஆட்சியாளர்கள் தமது இருப்பை நிலைநாட்ட எதுவும் செய்யக்கூடிய நிலையில் இருப்பதைக் காண முடிகின்றது. இதனால் இன்று எங்கும் இரத்தவாடை மீண்டும் மேலெழுவதைக் காண முடிகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இக்கால கட்டத்தை விளக்க, அசோகனின் கதையை சொல்வது சாலச் சிறந்ததாக இருக்குமெனக் கருதுகிறேன். பிந்துசாரன், சந்திரகுப்தன் மரபில் வந்த அசோகன் தனது ஆளுகைக்கு கீழ் அனைத்து தேசத்தையும் கொண்டு வர நினைத்தான்.

அவ்வாறு தனது எத்தனத்தை போரின் பால் கொண்டு வந்த நிலையிலே அகோரமாகப் போரிட்டு ஒவ்வொரு தேசத்தையும் தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்து கொண்டிருந்த வேளையில், இறுதியாக கலிங்க தேசத்தின் மீது போர் தொடுத்தான் முள்ளி வாய்க்கால் களத்தைப் போன்று பெருவாரியான உயிரிழப்பு இரத்தவாறு அங்கும் பெருக்கெடுத்து ஓடியது. நகமும், சதையுமாக உடையின்றிய உடல்கள், பண்பாடு தொலைக்கப்பட்ட தேசமாக அக்களம் மாறியிருந்தது.

அக்காட்சி போர் உள்ளம் கொண்ட அசோகனை வாட்டி வதைத்தது, உள்ளம் கரைந்தது, அவன் போரை விட்டான், தனது ஆளுகைக்கு உட்பட்ட, உட்படாத தேசமெங்கும் தான் தழுவிய பௌத்த தர்மத்தைப் பரப்பினான். தனது மகனையும், மகளையும் பௌத்த துறவிகளாக மாற்றினான். தன் தேசம் மட்டுமல்லாது, உலகெங்கும் இரத்த ஆறு ஓடக் கூடாது என்று விரும்பியே அவன் பௌத்தத்தைத் தழுவினான். இன்று மீண்டும் வரலாறு அப்படியாய்ப்பட்ட களத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. பஞ்சசீலக் கொள்கை கொண்ட பௌத்தம் மலிந்த எம் தேசத்திலே பௌத்தத்தின் கொள்கை பின்பற்றப்படுகிறதா என்றால் அது வாசகராகிய நீங்கள் உங்களை நீங்களே கேட்க வேண்டிய கேள்வி.

ஆனால் இன்று யுத்தத்தை வழி நடத்தியவர்களிற்குத் துணையாய் இருந்தவரும், இன்று சாத்வீகவாதி என்று சொல்லப்படுபவருமான எமது ஜனாதிபதி, சாந்தியும், சமாதானமும், நல்லிணக்கமும் நிறைந்த தேசமாக இலங்கை இருக்க நீதியை நிலைநாட்ட வழிவகுப்பாரா என்பது காலம் பதில் சொல்லும் கேள்வியாக இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க தீர்வு பெற்றுத் தருவோம் என்றுரைத்த எமது அரசியல் தலைவர்கள் என சொல்லிக் கொள்ளப்படுபவர்கள் எவ்வாறான அர்த்த புஷ்டியான தீர்வை எமக்கு வழங்கப் போகிறார்கள் என்பது தமிழ் மக்களது கேள்விக் குறியாக இருக்கிறது.

இந்த ஜெனீவா நிகழ்வை யதார்த்த பூர்வமாக நோக்கும் அரசியல் நோக்கங்கள் யாவரிற்கும் தெரியும் இது அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையே நிகழும் "மேலெழுகை" போராட்டம் என்றும். இங்கு நிகழும் பிரச்சினை கொன்று ஒழிக்கப்பட்ட தமிழனிற்கு தீர்வைப் பெற்றுத் தருவது இவர்களதோ, அல்லது மைத்திரி அரசின் நோக்கமோ அல்ல, இந்தப் பிரேரணை மூலம் எவ்வாறு இலங்கை அரசைக் காப்பாற்றலாம். அதன் மூலம் தனது கரத்தை இலங்கையில் பலமாக ஊன்றுவதன் மூலம்தனது அரசியல் இலாபத்தைத் தேடிக் கொள்ளலாம் என்பது அமெரிக்காவின் நிலைப்பாடு, அதனோடு சீனாவின் எழுச்சியை இல்லாமல் செய்வது அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் உள்ள முதலாவது விடயம் என்பது மக்கள் அறிய வேண்டிய உண்மை.



இது ஒரு புறமிருக்க தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில் 78 கால கட்டத்தில் எதிர்கட்சித் தலைவராக இருந்தவர் அமிர்தலிங்கம். அதனையண்டிய காலகட்டங்களில் பொலிஸ்மா அதிபராக, நீதியரசராக இருந்தவர்கள் தமிழர்கள். அவ்வாறான ஒரு காலகட்ட பிரதிமையை ஆளும் அரசு இப்போது வலுக்கட்டாயமாக உண்டுபண்ணி இருக்கிறது. மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜீனா மகேந்திரன் இங்கு வைக்கப்பட்டிருப்பதன் காரணம் இலங்கையின் பொருளாதாரத்தின் கேந்திர மையமான மத்திய வங்கியின் ஆளுநரே தமிழராகத்தான் இருக்கிறார். இலங்கையின் தலையெழுத்தை தீர்மானிப்பது தமிழர் தான் என்ற தோற்றத்தை ஆளும் அரசு உண்டுபண்ணியிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க நாட்டின் மூன்றாவது அதிகாரமிக்க பதவியாக எதிர்கட்சித் தலைவர் பதவி இருக்கிறது. அப்பதவி தமிழர் சம்பந்தனைச் சேர்ந்திருக்கிறது.

இதன்மூலம் நாட்டின் பலமுள்ள ஆகர்ஷனச் சக்தியாக தமிழர் தரப்பினர் சேர்த்திருக்கிறது அரசு. புதிய அரசு தமிழரிற்கு நல்ல வழிகளைக் காட்டியிருக்கிறது. அரசு நல்லிணக்கத்திற்குத் திரும்பி இருக்கிறது. என்றவாறான எடுகோள்கள் உலகெங்கிலும், மூத்த அரசியல்வாதியும், வெளிவிவகாரங்களை இலாவகமாகக் கையாள்பவருமான இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவினால் எடுத்துக்காட்டப்பட்டு வரும் நிலையில், தமிழ் அரசியல்வாதிகளின் வகிபாவம் எவ்வாறு இருக்கப் போகிறது என்பதை கட்டாயமாக நாம் நோக்க வேண்டியது அவசியமாகும்.

நாட்டில் குறிப்பாக வட, கிழக்கில் 80,000 இற்கும் மேற்பட்ட விதவைகள் இருக்கிறார்கள் என உறுதிப்படுத்தப்படாத தரவுகள் தெரிவிக்கின்றன. இது ஒருபுறமிருக்க போதைப்பொருள் கலாசாரம், கலாசார சீரழிவு என்பன தமிழ் இனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறன. இதனைவிட இளைஞர்களிடையே ஒரு முறையற்ற வாழ்வியல் தொடங்கி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இன்று மக்களிடையே பணப்புழக்கம் அதிகரிக்கிறது என்பதை வைத்து மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் மக்களது வாழ்வியல் சீர்நிலைப்பட்டதாக இருக்கிறது என்று மதிப்பிட்டுவிட முடியாது. இன்று எமது சமூகம் ஆற்றுப்படுத்த வேண்டிய சமூகமாக இருக்கிறது. வன்புணர்வுகளும், பொறாமை, வஞ்சகம் நிறைந்த சமூகமாக மாறியுள்ளது.

யுத்தம் தந்த வலுவான பாதிப்பும் தொடர்ச்சியாக நிலவிய அடக்குமுறைகளும் எமது இளைஞர்களையும், யுவதிகளையும் இன்றைய சுதந்திர சூழலில் கட்டுப்பாடுகளை உடைக்கக் கற்றுக் கொடுத்து இருக்கிறது. இன்று அனைத்திலும் மேற்கத்தய வாக்கம் எம்மை கட்டிப் பிடித்து இருக்கிறது.

இன்று எமது சமூகம் எமது பண்பாட்டிலிருந்து விலகிச் செல்வதை நோக்க முடிகிறது. இன்று தமிழ்ச் சமூகம் சமூகத்திற்குத் தெரிந்து பண்பாட்டுடன் வாழ விரும்புகிறதே தவிர சமூகத்திற்குத் தெரியாமல் பண்பாட்டு உடைவுகளை செய்யத் தொடங்கிவிட்டது. இன்று சமூகத்திற்கு தெரிந்து சமூக உடைவுகளைச் செய்ய இளைஞர் மற்றும் யுவதிகள் துணிந்து விட்டனர். இன்றைய எமது சமூகம் நல்லவற்றைவிட அதிகமாகக் கெட்டவற்றைக் கற்றிருக்கிறது. இன்று எமது சமூகத்தில் பிள்ளைக்குப் பயந்த பெற்றோர்களும், மாணவர்களிற்குப் பயந்த ஆசிரியர்களும் வடக்கின் கல்விக் கேந்திரமாக இருக்கும் பல்கலைக் கழகத்தில் கூட அதிகமான அடக்குமுறைகளும் மாணவர்களின் அட்டகாசமும் கூட அதிகரித்திருக்கிறது. மனிதனை மனிதன் மதிக்காத சமூகமாக எமது சமூகம் மாறி இருக்கிறது.

ஒரு கட்டுக்குள் கிடந்த சமூகம் வெளி வந்த சூழ்நிலையில் தனது மனதில் அடக்கப்பட்ட ஆசைகளை, கோபங்களை, வெறுப்புக்களை வெளியே காட்டியிருக்கிறது. அதனால் எமது சமூகம் பெற்ற பெயரை மக்களே அறிந்திருப்பர். இனியாவது சமூகம் ஏமாற்றப்படாமல் இருக்க எமது அரசியல் தலைவர்கள் தமது சுய நலம் நிறைந்த மனதை மக்கள் நலத்திற்காக விரிவுபடுத்த வேண்டும், மக்களை ஏமாற்றுவதை விடுத்து அர்ப்பணிப்புடன் எமது சமூகத்தை வழிப்படுத்தத் தொடங்க வேண்டும்.

எந்தவொரு சமூகம் தனக்கான மொழி, பண்பாட்டு அடையாளங்களை தொலைக்கிறதோ அந்த சமூகத்தின் இருப்பு கேள்விக்குறியாக மாறுகிறது என பிரபலமான வாசகம் இருக்கிறது. இன்று தமிழைப் பேச வெட்கப்படும் சமூகமாக எம் சமூகம் இருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் திட்டமிட்டு எமது அடையாளங்கள் மறைமுகமாக அழிக்கப்பட்டு வரும் நிலையில் எமது வாழ்வியலை தொலைக்க நாமே உடந்தையாக இருக்கிறோம். எமது அடையாளங்கள் இல்லாமலே அழிந்து போகின்றன. எமது அடையாளங்கள் சமய நம்பிக்கைகள் இல்லாதொழிக்கப்படுகின்ற வேளையிலே அதன்வழியாக கட்டப்பட்ட பண்பாடு உடையப் போகின்றது. தமிழைப் பேச வெட்கப்படும் நாம் மொழியையும் இழக்கப் போகிறோம். அதன்வழி தமிழ் இனம் எனும் அடையாளம் அழிந்தவர்களாக உழலப் போகிறோமா? என்பது வினாவாக இருக்கிறது. அதேவேளை தமிழரது சனத்தொகை விருத்தி குறைவாக இருப்பதையும் அண்மையில் வைத்தியர்ஒருவர் சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வாறான ஒருநிலையில் தான் எமது தமிழ் இனம் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் தமிழ் இனத்தை கட்டிக் காப்பவர்கள் என்று சொல்லப்படும் அரசியல் தலைமைகள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் என்போர் என்ன செய்யப் போகின்றனர். காலக்கனதி இயந்திரம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஒரு காலத்தில் வழிகாட்டிகள் என்று சொல்லப்பட்ட சமுதாயத்தினர் வாழ்விழந்தவர்களாக மாறியிருக்கிறார்களே என்பது இங்கு எவரும் அறிந்த உண்மை. தமிழர் செல்நெறிப்பாதையின் வேறொரு பரிணாமமா? இந்த தமிழர் வாழ்வியல் என்று நோக்க வேண்டியிருக்கிறதா? என்பது இங்கு எழும் மிகப்பெரும் வினாவாகும். இதற்கு யார் பதில் உரைப்பவர்கள்? அல்லது பொறுப்பாளிகள் யார்? இதன் விடை தமிழர் ஒவ்வொருவரதும் சிந்தனையின் பாற்பட்டதே.



அன்பு வழியூர் சு.திருச்செந்தூரன்
திருகோணமலை

# வரம்பிட்டு வாழ்வோம் விரும்பியதை அடைய ...

## வாரமொரு வாழ்வியற் சிந்தனை

பூவுலக மாந்தரின் புனித மான வாழ்வியலில் பூகம் பத்தை உருவாக்குவது மோகத்தில் ஒரு வகையான காமமேயாகும். மனித வாழ்வில் மோகங்கள் பல வகையில் ஏற்படுகின்றன. அதில் காமத்தில் வருகின்ற மோகத்தை எவ்வாறு கையாள் வது என்பது தொடர்பாக இந்த வாரம் நோக்குவோம்.

"காமம்" என்பது ஒரு புனிதமான கருப்பொருள். இறைவன் உலகத்து உயிர்க ளிற்கு கொடுத்த பேரின்ப பெருவாழ்வுப் பொக்கிஷம். மகரந்தச் சேர்க்கையில் இருந்து மனித உடலுறவு வரை அது விரிவு படுத்தப் பட்டுள்ளது. ஓரறிவு மரங்களில் இருந்து ஆறறிவு மனிதர்கள் வரை அறிவிற்கேற்ப ஆயு தமாக இறைவன் கொடுத்த வரமிது. வரம்பு மீறி வக்கிரம் கொண்டால் எம்மையே அழிக்கும் வச்சுராயுதமாகவும் இது மாறும்.

எமது சமூகத்தில் "கலாசாரம்" என்கின்ற போர்வையில் இது தொடர்பாக எவரும் பேசுவ தில்லை. ஆனால் வளர்முக நாடுகளில் இதனை ஓர் பாடமாகக்கூடக் கற்பிக்கின் றார்கள். இன்றைய எமது சமூகத்தில் பெரியோர் முதல் சிறியோர் வரை துஷ்பிரயோகம் என்கின்ற பெயரில் அதிகரித்து வரும் அசம்பாவிதங்களிற்கு அடிப்படைக் காரணம் இது பற்றிய ஓர் அறிவின்மையாக வும் கூட இருக்கலாம். ஆகவே இது தொடர்பாக



வெளிப்படையாகப் பேசிப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டியது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றாகும்.

ஆறாவது அறிவை எதற் காக இறைவன் மனிதர்க்குப் படைத்துள்ளான் என்பது தொடர்பான சிந்திப்பு மாத்தி ரமே இதற்கான தீர்வினைக் கொண்டுவரும். பகுத்தறிகின்ற பக்குவமான அறிவினை அனைவருக்கும் இறைவன் படைத்தும்கூட பாதை மாறி நடப்பது எந்த வகையில் நியாயமானது?.. எமது உடலுக்குள் ஊறுகின்ற உணர்வுகளிற்கு விருந்தளிப் பதற்கு ஒரு காலம், ஒரு நேரம், ஓர் இடம் உள்ளது. கண்ட இடத்தில் நின்றதை யும் ரசித்தால் தெருவோர ஐந்தறிவு நாய்களிற்கும் எமக்கும் என்ன வேறுபாடு?.... இந்து மதத்தில் இல்லறம் என்ற ஒன்றைப் படைத்த இறைவன் அறங்களில் ஒன்றாக இக்காமத்தை உருவகித்து அதன் தெய்வீக அணுகு முறைகளைக் காமசூத்திரத் தில் வடிவமைத்துள்ளான்.

எப்படியும் வாழலாம் என்ப தற்கப்பால் இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற சில வரையறைகள் மனிதனிற்கு உண்டு. இரண்டு விடயங்கள் ஓர் தனிமனிதனின் வாழ்வில் சவாலாக இருக்கும்

* சமூக கௌரவம் (சமூக அந்தஸ்து)
* உணர்வு நிலை மேம்பாடு

இவை இரண்டும் ஒரு தராசின் இரு பக்கத் தட்டுக் கள். காம உணர்வுநிலை ஒரு தனி மனிதனின் வாழ்வில் கனதியாகும் போது சமூக கௌரவம் கனம் குறைகிறது. மாறாக சமூக கௌரவம், சமூக அந்தஸ்து என்கின்ற விடயங்கள் கனதியாகும் போது உணர்வு நிலை மேம் பாடு கனம் குறைகின்றது. இதில் உணர்வு நிலை கனமாகும் மனிதர்களைத் தான் நாம் கெட்டவர்கள் என்கின்றோம். மாறாக சமூக கௌரவம் அதிகரிக்கும் மனிதர்களைத்தான் நாம் நல்லவர்கள் என்கின்றோம். இந்த இடத்தில் தான் இளம் பிள்ளைகளின் திசை மாற்றம் ஏற்படுகின்றது. முன்பாலியல் பருவம், பாலியல் பருவம் என்கின்ற வயதுப் பிரிவில் இவர்கள் இருக்கின்றபோது சமூக கௌரவங்கள் சமூக அந்தஸ்துப் பற்றி இவர்களு க்குத் தெரியாது உணர்வு நிலை மேம்பாடு மாத்திரமே உத்வேகம் பெறும். இதனால் இவ்வயதுப் பிரிவில் தவறுகள் நடைபெற அதிக சந்தர்ப்பம் உண்டு. இந்த இடத்தில் சமூக கௌர வம், சமூக அந்தஸ்துக்களை ஏதோ ஒரு வழிகளில் புகுத்த எத்த னிக்க வேண்டும். இதன் மூலம் உணர்வுகள் அடக்கப்படும் என்பது பெருளல்ல திசை மாற்றம் ஏற்படும் என்பதே யாகும்.

எந்தவோர் மனித உணர்வு களையும் அடக்கக் கூடாது ஏனெனில் அது வேறு வடிவத் தில் விஸ்வரூபமெடுத்து மனித வாழ்வை சீர் குலைக்குமென உளவியலாளர்கள் முன் மொழிகின்றனர். இதனால் தான் மேலைத்தேய நாடுக ளில் பாதுகாப்பான உடலுற வுகள் அனுமதிக்கப்படுகின் றன. இதனால்தான் அம்மக் களிற்கு உடலிறுக்கம் தளர்ந்து அதற்கப்பால் அறிவியல் சிந்தனைகளெல்லாம் விருத் தியடைகின்றதெனவும் எம்ம வர்கள் கலாசாரம் என்கின்ற பெயரில் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதனால்தான் அதைவிடுத்து அப்பால் சிந்திக்க முடியாத கட்டங்கள் உருவாகின்றது எனவும் வாதிடு கின்றனர். இந்த இடத்தில் வேறு துருவத்தில் சிந்தித் தால் உணர்வுகளைப் படை த்த இறைவனிற்கு அன்றே உளவியல் தெரிந்தமையால் தான் சுயஇன்பத்தை சுதந்திர மாய் விட்டுள்ளான். சமூக கௌரவத்துடனும் கட்டுப்படுத் தல் எதிர்விளைவின்றியும் இதன்மூலம் வாழலாமே!...

எது எப்படி இருப்பினும் இது இப்படித்தான் என்கின்ற வரம்போடு வாழ்வோம்.

ஆர்.கே.மேனன்

---

# வெளிநாட்டு வரனுக்கு அடம்பிடிக்கும் பெண்களே!



லக்ஷா

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப் பெதற்கு என்ற காலம் மலையேறிப் போய் இன்று பெண்கள் கல்வித்துறை யில் ஆண்களை விட மிஞ்சிவிட்டனர். பெண்கள் இன்று விண்வெளிக்குப் பய ணம் செல்லுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளனர். இது சாதாரணமாக அனைத்து நாட்டிலுமுள்ள பெண்களுக் குமே பொருந்துகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத் தமட்டில் பெண்கள் எவ்வளவுதான் வேலை செய்தாலும் திருமணம் செய்வ தென்றால் வெளிநாடுதான் போகவேண் டும். அங்குதான் அவர்களால் வாழ முடியும் என்று பெற்றோர் மட்டுமல்ல பெண்பிள்ளைகளும் நினைக்கிறார் கள்.

இது எதுக்காக எண்டு தெரியாது. அதுதான் உண்மை. இவ்வாறுவெளி நாடு போகவேண்டும் எண்டதற்காகவே எவ்வளவு சீதனம் கொடுத்தாலும் பர வாயில்லை எண்டு புதுஷா ஒரு புரோக் கரைப் பார்த்து படத்தையும் குடுத்து என்ர மகளுக்கு மாப்பிள்ளை பார் எண்டு பெற்றோர் சொல்லுவினம். அவையளும் 2 நாளுக்குள்ள ஒரு மாப்பிள்ளையின்ர படத்தைக் கொண்டுவந்து பெண் வீட் டில அவையளின்ர மனதக் கவரக்கூடிய மாதிரி கதையச்சொல்லி கலியாணத் துக்கு சம்மதிக்க வைச்சிடுவினம் ஏனெ ண்டா புரோக்கருக்கு வருமானம். அது தான் அவர்களின்ர குறிக்கோள். பெண் வீட்டில வெளிநாட்டு மாப்பிள்ளைய கட்டினா சரி வெளிநாடு போயிடலாம் என்ற சிந்தனை. ஆனா மாப்பிள்ளையைப் பற்றி அனேகமானோர் விசாரிப்பது கிடையாது.

ஒரு மாதத்தில மாப்பிள்ளை வந்து கலியாணமும் முடிஞ்சு 3 கிழமையால நான் போய் உன்னைக் கூப்பிடத் தேவையான அலுவலச் செய்து என்ர நாட்டுக்குக் கூட்டிட்டுப்போறன் எண்டு சொல்லிக் கொழும்பில விட்டிட்டுப் போயிடுவார்.

அங்கிருந்து வீட்டுக்கு வந்த பெண் ஒரு வருசத்தால கூட்டிட்டுப்போவார், ஒண்டரை வருசத்தால கூட்டிட்டுப் போவார் எண்டு சொல்லிக்கொண்டு இருப்பார்.

இந்த வாழ்க்கை 75 வீதமானவர்க ளுக்கு சரியாகத்தான் இருக்குது. ஆனால் மிகுதி 25 வீதமானவர்க்கு அதோ கதிதான். அவையளின்ர மாப் பிள்ளைமார் கைபேசியில கதைக்கிறது. வைபரில கதைக்கிறது, பணம் அனுப்பி றது, வருசத்தில ஒருக்கா லீவில வந்திட் டுப் போறதெண்டு அவங்கட வாழ்க்கை போகுது. கூட்டிட்டு மட்டும் போகமாட் டினம். அதிலயும் ஒரு சிலருக்கு குழந் தையும் பிறந்திடும். வெளிநாடுதான் வேணுமெண்டு பிடியாப் பிடிச்சிட் டிருந்த பெற்றோரும், பொம்பிளை யும் அதுக்குப்பிறகுதான் மாப்பிள் ளையப்பற்றி விசாரிக்க ஆரம்பிப் பினம். அதில அவர்களுக்குக் கிடைக் கிற பதிலோ அவர்களின் எதிர்காலத் தையே நிலைதடுமாற வைத்துவிடு கிறது.

என்ன நான் கூறுவது கதை தானே எண்டு நினைக்கிறியளோ? இது கதையல்ல உண்மை. என்ர வாழ்க்கையில நான் பார்த்த அனு பவம் மட்டுமல்ல உண்மைச் சம்பவமும் தான். என்ன ஆச்சரியமா இருக்குதா?

பயப்பட வேண்டாம். ஆச்சரியப்பட வேண்டாம். தொடர்ந்து நான் சுறும் கதையைக் கவனமாகக் கேளுங்கள்.

8 வருடங்களுக்கு முன்னர் என் நண்பி திருமணம் செய்வதென்றால் வெளிநாட் டில் தான் செய்வேன். அதுவும் ஐரோப் பிய நாடாகத்தான் இருக்க வேண்டும். அப்பதான் நான் நல்லா, வசதியா இருக்க முடியும் என்று பெற்றோருக்கு சில விதிமுறைகளை வகுத்தார். வெளி நாடு என்றால் பெற்றோரும் விட்டு விடு வார்களா? பிள்ளை யைத் தட்டிக் கொடுத்து பாராட்டி வெளிநாடு பற்றிய கனவை வளர்க்க ஆரம்பிச்சது மட்டு மல்ல வெளிநாட்டு மாப்பிள்ளையையும் தேடிப்பிடிச்சுக் கொண்டுவந்து விட்டனர். பேச்சுக்கால் முடிஞ்சு சீதனம், நகை எல்லாம் கொடுத்து கலியாணமும் நல்ல ஆடம்பரமா முடிஞ்சுது.

ஒரு மாதத்தில மாப்பிள்ளை வெளி நாடு போயிட்டார். அடுத்த மாதம் பொம் பிள கர்ப்பிணி. மாப்பிள்ளைக்கு அறி விக்க அவரும் சந்தோசத்தோட குழந்தை பிறந்த பிறகு உன்னை அழைச்சிட்டுப் போறன் குழந்தையக் கவனமா பெற் றெடு என்று அன்பாகக் கூறி தினமும் கதைத்து வந்தார்.

(தொடர்ச்சி 21 இல்...............)

# சட்டம் இவர்களுக்கு மட்டுமா ...?



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட புதுக்காடு மாவடியம்மன் பிரதேசத்தின் எல்லையில் (இரணைமடு விமான நிலையத்திற்கு செல்லும் பாதைக்கருகில்) 15 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மீள்குடியேற்றம் தொடக்கம் வாழ்ந்து வருகின்றன.

ஆதிகால மனிதர்களின் வாழ்க்கையை ஒத்ததாக இவர்களின் வாழ்க்கையும், வாழ்விடங்களும் காணப்படுகின்றன.

கிழிந்த துண்டுகளாக உள்ள தகரங்கள், கிழிந்த தறப்பால்கள், மற்றும் துணிகள் உள்ளிட்ட கழித்துவிடப்பட்ட பொருட்களால் அமைக்கப்பட்ட குடிசைகளில் வாழ்க்கை.

கிழிந்த ஆடைகளுடன் அப்பாவித்தனமாக வறுமையின் வடிவமாக சிறுவர்களும் சிறுமிகளும்.

கல்மடுநகர், அழகாபுரி, அல்லது இராமநாதபுரம் பாடசாலைகளுக்கு தினமும் நடந்து செல்ல முடியாமலும் பேருந்தில் சென்று வருவதற்கு தினமும் பத்து ரூபா கொடுத்து பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்ப முடியாத பெற்றோர்கள்.

எதிர்காலம் பற்றியோ அல்லது மறுநாள் பற்றியோ எவ்வித ஏக்கமும் கவலையும் அற்ற வாழ்க்கை.

மறுவேளை உணவைப் பற்றிய சிந்தனையும் அதற்கான போராட்டமும்.

வனவளத்திணைக்கள காணிகளில் குடியேறி விட்டதாகக் கூறி இவர்களை எழுப்பி துரத்தி விட நாளும் துடிக்கும் வனவளத் திணைக்கள அதிகாரிகள். காரணம் சட்டத்தை மீறி காட்டை அழித்துவிட்டார்களாம். எனவே சட்டத்தைக் காப்பாற்ற துடிக்கின்றார்கள் இந்த அதிகாரிகள்.

ஆனால் ஒரு சில கிலோமீற்றர்கள் தொலைவில் இரணைமடுகுளத்தின் பின் புறமாகவும் விமான நிலையத்தை அண்டிய பிரதேசங்களிலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளது அது இந்த அதிகாரிகளின் கண்களுக்கு தெரியவில்லை. 15 குடும்பங்களைச் சேர்ந்த ஏழைகள் பற்றைகளை வெட்டியது வனவள சட்டத்தை மீறிய குற்றம் என்றால் நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகளை அழித்தது சட்டத்தை மீறிய செயல் இல்லையா? ஏன் அதற்காகவும் இந்த அதிகாரிகள் சட்டத்தை பயன்படுத்தாதது எந்த வகையில் நியாயம்?

உண்மையில் கூறப் போனால் அந்த மக்களிடம் பெரிய மரங்களை வெட்டுவதற்கு அதற்குரிய குறைந்த பட்சம் கோடரிகள் கூட இருப்பதே சந்தேகம்.

இது ஒருபுறமிருக்க தங்களிடமும் திருடர்கள் வருவதாக சிரித்துக் கொண்டே வேதனைப்படும் பெண்கள்.

குரங்குகள், பாம்புகள், சில வேளை யானைகள் எனத் தொடரும் அச்சுறுத்தல்கள். பிச்சை எடுக்குமாம் பெருமாள் அதை பறிக்குமாம் அனுமார் என்ற கதையாய் உணவுப் பொருட்களை திருடிச்செல்லும் குரங்குகள்.

பெரும்பாலும் ஒய்வில் இருக் கும் அடுப்புக்கள் நாள் ஒன்றுக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோ எரிகின்றன. விறகுகள் ஏராளம் ஏராளம் இருந்தும் என்ன பயன்..?

நடந்த முடிந்த கொடிய யுத்தத்தின் பசிக்கு இந்த 15 குடும்பங்களிலும் சிலர் இரையாகியுள்ளனர். சில குடும்பங்களில் உழைக்கும் பிள்ளைகளை போர்க்களம் வலிந்து இழுத்து இரையாக்கிக்கொண்டது.

கூலித்தொழில் இவர்களின் பிரதான வருமானம் தற்போதைய தொழில்நுட்ப உலகில் இயற்திரசாதனங்கள் இவர்களின் நாளாந்த வருமானத்திற்கும் ஆப்பு வைத்து




விட்ட நிலை. இருப்பினும் கிடைக்கின்ற தொழிலை செய்து கிடைக்கின்ற வருமானத்தை கொண்டு தள்ளாடிச் செல்கிறது இவர்களது வாழ்க்கை.

இதற்குள்தான் குகேஸ் குடும்பமும் வாழ்கிறது மனைவி றினோசா மகள்கள் சாகிதா வயது 10, பாத்திமா வயது 8, மகன் நிசார் வயது 5, மற்றுமொரு கைகுழந்தை ஐந்து மாதம் மூத்த மகன் தந்தையுடன் இணைந்து கூலித் தொழில் செய்து வருகின்றார்.

இதில் சாகிதா வாய் பேச முடியாதவர் இதனால் எப்பொழுதும் தாயுடன் வீட்டில். மாற்றுவலுள்ளோருக்கு கற்றலுக்கான பல நவீன வசதிகள் கொண்ட நிலையங்கள் உள்ள போதும் இது இவர்களுக்குத் தெரியவில்லை. எங்கு எப்படி தொடர்புகொள்வது என்பதும் இந்த ஏழை அப்பாவிகளுக்கு தெரியாது. ஒரு நாள் வேலைதேடிச் சென்று கூலியை பெறாவிட்டால் மறு நாள் வீட்டில் அடுப்பு எரியாது.

வாய்பேச முடியாத தனது அக்கா சாகிதாவை பார்த்து பார்த்து வாழ்ந்த தம்பி நிசார் நான்கு வயது வரை பேசியவர் தற்போது பேச முடியாதவராகிவிட்டார். நிசாரின் வாயிலிருந்து நான்கு வயது வரை வந்த வார்த்தைகள் எதுவும் தற்போது வரவில்லை என தாய் றினோசா ஏக்கத்துடன் கூறுகின்றார்.

ஆனால் பல அரச அலுவலகங்களில் இவர்களின் பெயரால் பல அலுவலர்கள். சமூகசேவைகள் உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், கிராம அலுவலர், சமூர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், இப்படி பல பல பெயர்களில் மக்கள் சேவைக்காக உத்தியோகங்கள் இருந்தும் என்ன? இவர்களுக்கு அவர்களை தெரியவில்லையே!



நல்லாட்சி, மாற்றம், அபிவிருத்தி என இந்த அழகான சொற்கள் வெறும் சொற்களாக மட்டும் இருக்கக் கூடாது. இந்த மக்களின் விடயம் மனிதாபிமானத்தோடு அணுக்கப்பட வேண்டுமே தவிர தனியே சட்டத்தோடு மட்டும் நோக்கப்படக் கூடாது என்பது பலரின் அபிப்பிராயம். சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு வேளை கஞ்சிக்காக போராடுகின்ற இவ்வாறான மக்களை பாதிக்காத வகையில்.

# குடா நாட்டு சந்தைகளும் விவசாயிகளின் திண்டாட்டமும்

யாழ். குடாநாட்டில் தற்போது வலிகாமம் பகுதியில் திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளும் தென்மராட்சியில் சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளும் வடமராட்சியில் நெல்லியடி பருத்தித்துறை சந்தைகளும் இயங்கி வருகின்றமை அனைவருக்கும் தெரிந்த விடயமே.

இச்சந்தைகளில் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவரும் விவசாயிகள், சந்தை வியாபாரிகளால் சுரண்டப்படும் கொடுமை சொல்லிமாளாது. தமது விவசாய நிலங்களில் அன்றாடம் வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து தமது உடலை வருத்தி பயிர்களை நாட்டி அவற்றைப் பராமரித்து அவை விளைந்தவுடன் அவற்றை பக்குவமாக பறித்து சந்தைக்கு கொண்டுசெல்லும் விவசாயிகள், மிகவும் தந்திரமாக சந்தை வியாபாரிகளால் நாளாந்தம் ஏமாற்றப் படுதனை யாரிடம் சொல்லி முறயையிடுவது. இதனை எந்த நிர்வாகத்திடம் சொல்வதென விவசாயிகளும் அங்கலாய்க்கின்றனர்.



சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்போரும் இலாபம் ஒன்றையே குறியாக வைத்து இயங்குகின்றனரே தவிர அவர்களுக்கு வேறெதுவும் கண்ணில் படுவதில்லை.

குறிப்பாக சந்தைக்கு மரக்கறிகள் கொண்டு சென்றால் அங்கு பத்து கிலோவிற்கு ஒரு கிலோவே கழிவாக அறவிடப்படுவது நியதி என்பதுடன் பத்து கிலோவிற்கு கீழ் உள்ள மரக்கறிகளுக்கு பொதுவாக கழிவு கழிக்கப்படுவதில்லை. ஆனால் குடாநாட்டு சந்தைகளில் பத்து கிலோவிற்கு குறைவாகக் கொண்டு செல்லப்படும் மரக்கறி வகைகளும் கட்டாயமாக சந்தை வியாபாரிகளால் ஒரு கிலோ கழிக்கப்படுகின்றது. இது எந்த வகையில் நியாயம் என விவசாயிகள் கேட்பது எவரின் காதிலும் விழுதாகத் தெரியவில்லை.

அத்துடன் கொண்டு செல்லப்படும் மரக்கறிகளை தராசில் நிறுக்கும் வேளை அவை கிலோவுடன் மிகுதியாகவும் இருந்தால் அந்த மிகுதி வியாபாரிகளாலும், சந்தைக் குத்தகை பெறுபவர்களாலும் கணக்கில் எடுக்கப்படுவதில்லை மாறாக அந்த மிகுதியுடன் சேர்த்து கழிவு ஒரு கிலோ கழிக்கப்படும். உதாரணமாக விவசாயி ஒருவர் சந்தைக்கு பயற்றங்காய் கொண்டு சென்று வியாபாரி ஒருவரால் அது கேள்வி கோரப்பட்டு தராசில் நிறுக்கப்படும் வேளை அங்கு பயற்றங்காய் 20 கிலோவும் 900 கிராமும் இருந்தால் 900 கிராம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. மாறாக வரி அறவிடுவோர் அதனை 20 கிலோ எனவே பதிவர் என்பதுடன் கழிவாக இரண்டு கிலோ வழமை போன்று கழிக்கப்படும். அவ்வாறானால் ஒரு விவசாயிகளிடமிருந்து மூன்று கிலோ மரக்கறிகளை வியாபாரி கொள்ளை இலாபமாகப் பெறுவதுடன், அவர் அதனை விற்பனை செய்யும் போது எவ்வித கழிவிற்கும் இடம் வழங்கமாட்டார். இதனால் பாதிக்கப்படுவது விவசாயியே ஆவார்.

அத்துடன் மரக்கறி வகைகளைக் கொண்டு சென்று வைத்தால் அங்கு கேள்வி கோரப்படும். அதில் கூடிய விலையை எந்த வியாபாரி கேட்கிறாரோ அவருக்கே அது வழங்கப்படும். அதன் பின்னர் தான் வியாபாரியின் சுயரூபம் வெளிப்படும். தனது இடத்திற்கு குறித்த மரக்கறியை எடுத்துச் செல்வார் வியாபாரி அவருடன் விவசாயி கூடவே மரக்கறி கெடுத்த படிவத்தைப் பெறச்செல்வார். அங்கு வியாபாரி எல்லோர் முன்னிலையிலும் கேட்ட விலைகளுக்கான பணத்தினைக் கொடுக்க மாட்டார். மாறாக அது சும்மா கேட்டது. இது இந்த விலை போகாது இதுதான் போகுமென தனது இடத்தில் நின்று வியாபாரியுடன் வாக்குவாதம் செய்வார் அதன்பின் கேட்ட விலையையும் விட குறைவாகவே பணத்தைக் கொடுப்பார். இதில் இன்னுமொரு பணச்சுரண்டலையும் வியாபாரி மிகவும் தந்திரமாக மேற்கொள்வார் அது என்னவெனில் வரிக் காசை நான் கட்டுகிறேன் என்று கூறுவர்ர அதிலும் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் வெட்டு விழும்.

பாருங்கள் எங்களது விவசாயிகள் எமது ஊர்ச் சந்தைகளில் எவ்வாறான முறையில் ஏமாற்றப்படுகின்றார்கள், சுரண்டப்படுகிறார்கள் இதையெல்லாம் கண்காணிப்பது யார்?

முன்பொரு தடவை எமது வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், நிலத்திற்குக் கீழ் வியைளயும் பொருட்களுக்கே பத்திற்கு ஒன்று கழிவு எனவும் மற்றையவைகளுக்கு இல்லை எனவும் ஒரு அறிவிப்பை விடுத்திருந்தார். அது அறிவிப்பாகவே மட்டுமே இருந்தாலும் உண்மையில் அவர் ஒரு வாய்ச்சொல்வீரர். எந்தவொரு விடயமாக இருந்தாலும் முன்பின் யோசிக்காமல் அறிவித்தலை விடுவதில் வல்லவர். ஆனால் அவர் விடும் அறிவிப்புக்களை செயற்படுத்த மறந்து விடுவதிலும் அவரை விட வல்லவர் வேறொருவரும் இல்லை.

இப்படித்தான் முன்பொரு தடவை வடக்கில் பரவியுள்ள பாதீனியங்களை அழிக்க பாதீனியப் படையொன்றை உருவாக்கி அவர்களுக்கு மருந்து விசிறும் பம்பிகள், மருந்துகள் எல்லாவற்றையும் கொடுத்து அதனைப் படமும் எடுத்து ஊடகங்களில் வெளிவரச் செய்தார். ஆனால் பாதீனிய ஒழிப்பு நடந்ததாகத் தெரியவில்லை. அது மேலும்ம வேகங்கொண்டு முளைக்கிறதே தவிர ஒழியவில்லை.

அது போலத்தான் விவசாயிகளின் உற்பத்திகளுக்கான கழிவு விடயமும் பெயருக்கு விவசாய சுற்றுச்சூழல் அமைசசுப் பொறுப்பை வைத்திருப்பதால் மட்டும் பிரயோசனமில்லை. விவசாயிகள் படும் வேதனைகளையும் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே எதிர்காலத்திலாவது விவசாயிகளிடம் நூதன மான முறையில் அடிக்கப்படும் கொள்கை தவிர்க்கப்படுமா?

— கந்தசாமி —

# இறைமை என்கின்ற பெயரில் இணக்கப்பாடுகள் சீர்குலையுமா?....

“போர்குற்ற விசாரணை என்கின்ற பெயரில் இலங்கையின் இறைமைக்குள் சர்வதேசம் தலையிட அரசு இடமளிக்கக்கூடாது” என சிங்கள பேரினவாத கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இந்த விடயத்தில் தேசிய அரசுக்குள் அங்கம் வகிக்கும் சிங்களக்கட்சிகள் உட்பட பெரும்பாலான கட்சிகள் ஒற்றுமைப்பட்டு கருத்து வெளியிடுகின்றனர். காரணம் இறமைக்குள் சர்வதேசம் தலையிட அனுமதிப்பதை தேசவிரோத செயற்பாடாக அவர்கள் நோக்குகின்றனர்.

இவ்வாறு நோக்கும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக ஏன் சிந்திக்க மறுக்கின்றனர்?.. இன்று இனங்களிற்கிடையில் ஓர் இணக்கப்பாடு இலங்கையில் இருக்கின்றதென்றால் நியாயமான தீர்வினைத் தமிழ்மக்களிற்குப் பெற்றுக்கொடுக்க இவர்கள் முன் நிற்க வேண்டுமல்லவா!.....எத்தனையோ உயிர்களைக் காவுகொண்ட போர்குற்றங்களிற்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதைவிட சர்வதேச தலையீடு என்பது பெரிய விடயமா?... புதிய அரசு இன்று சர்வதேச விசாரணைக்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது என்பதற்காக அது தமிழ்மக்களிற்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கத் துடிக்கின்றது என்று முற்று முழுதாக அரசை தமிழ் மக்களும் நம்பிவிட முடியாது. ஐ.நா வின் அறிக்கை வரும் வரை சர்வதேச விசாரணையை நிராகரித்த தற்போதய தேசிய அரசு ஐ.நா வின் அறிக்கையில் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட்ட பின்பு அதற்குப் பச்சைக் கொடி காட்டுவதற்கு பல காரணங்கள் உண்டு.

* சர்வதேச தடைகளில் இருந்து இலங்கையைப் பாதுகாக்க
* அமெரிக்காவின் ஆதரவிற்கூடாகத்தான் அரசியல் நிலைப்புக்களைத் தக்கவைக்க முடியும் என்பதற்காக
* சர்வதேச பார்வையில் இலங்கை தொடர்பாக இருக்கும் எண்ணக்கருவை மாற்றவேண்டிய தேவை இலங்கையரசுக்கு உள்ளமை
* உள்ளூர் சிங்கள மக்கள், மற்றும் இராணுவத்தின் எதிர்ப்புக்களிற்கப்பால் சர்வதேச ஆதரவு இன்று தேசிய அரசுக்கு அவசியம் தேவைப்படுகின்றமை.




இதனால் தான் இன்று ஐ.நா வின் விசாரணைக்கு அரசு பச்சைக்கொடி காட்டியுள்ளதே தவிர தமிழ் மக்களின் இழப்புக்கு நியாயம் தேடிக் கொடுப்பதற்காகவல்ல. அவ்வாறான சிந்தனை அரசுக்கு முன்பே இருந்திருந்தால் சர்வதேசவிசாரணைய்யை அரசு முன்பே வலியுறுத்தியிருக்கும். இது ஒரு புறமிருக்க இவ்வாறான சில சிக்கல்களால் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் தற்போதய தேசிய அரசுக்கும் இடையில் இருக்கின்ற இணக்கப்பாடுகள் எதிர்காலத்தில் சீர்குலையுமா?.... என்கின்ற எதிர்வு கூறல்களும் உள்ளன.

அதாவது எமது இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தண்டனைகளைப் பெற்றுக் கொடுத்தேயாக வேண்டும். இதிலிருந்து என்றுமே தமிழ் தேசிய கூட்டமைப்பு பின்வாங்கக் கூடாது. இதய சுத்தியோடு இவர்கள் தொழிற்பட வேண்டும். அவ்வாறு தொழிற்படுவார்களேயானால் அரசு சர்வதேசத்தைச் சாந்திப்படுத்த முன்னெடுக்கும் விசாரணைகளால் இவர்களிற்கும் அரசுக்கும் முரண்பாடுகள் ஏற்பட ஆரம்பிக்கும். அவ்வாறு ஆரம்பித்தால் எதிர்கால தீர்வின் திசை முகங்கள் பாதிக்கப்படும்.

நடந்து முடிந்த போர்குற்ற விசாரணைகளிற்காக நடக்க இருக்கும் தீர்வின் திசை முகங்களை நிராகரிப்பது ஏற்புடையதா? என்கின்ற வாதப்பிரதி வாதங்களும் பின்பு மக்கள் மத்தியில் எழலாம். ஆகவே சர்வதேச விசாரணை என்பது தேவைதான் ஆனால் அது தற்போது இலங்கையில் இனங்களிற்கிடையில் இருக்கின்ற இணக்கப்பாடுகளை சீர் குலைக்காமல் இருப்பதை ஒவ்வொரு தரப்புக்களும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். என்பதே இன்றைய அரசியல் தேவையாகும்.

வெண்கட்டியன்

# கடுப்பாயிட்டேன்

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றொரு பழமொழி ஆரோ அறிஞர் சொன்னது நான் நினைக்கிறன் அவ்வையார்தான். அந்த மனிசிக்குத் தான் தேவையில்லாத ஆராய்ச்சிகள் போகட்டும், இப்ப ஆருக் கெண்டாலும் கோயிலுக்கு அருகில் வாழ விருப்பமோ எண்டு கேட்டுப் பாருங்கவன்.

ஐயோ... ஆளை விடுங்க சாமி எண்டு தான் குழறுவினம். பின்ன என்னங்கோ, விடியக் காத்தால அசந்து துங்குகிற நேரம் துவங்கிடுவாங்க பாட்டுப் போட எட பத்திமுத்தி போடு கினம் எண்டா கடவுளை தங்கட வாயால பாடிக் கும்பிட்டா மன்னிக்கலாம். இதென்னடா, சீடீயத்துக்கி பெட்டியில் போட் டிட்டு அவை பிரண்டு படுத்திட்டு ஆறுதலா எழும்பி வேலை பார்க்க, இஞ்ச சுற்றாடல்ல உள்ள சனம், பிள்ளையள் படிக் கிறதோ, தன்தன் பிரார்த்தனை செய்யிறதோ என்ன ஏலும்.

அதிலயும் இப்ப திருவிழா சீசன்தான். நாலு பக்கமும் நாலு விதமான கோயில்கள். இதுமுடிய அது. அது முடிய இது. சில நேரம் ரெண்டும் மோதுற அள வுக்கு இசுபீக்கர்கள் வெளுத்து வாங்கிதுகள். அதிலயும் இந்த ஐயர்மார் பண்ணுற அட்டகாசம் இருக்கே, அய்யய்யய்ய்யோ தாங்க முடியலடா?

ஆமிக்காறன்டா பொலிசுக் காறரிட்ட அலுவலுக்கு போனா சிங்களம் தெரிஞ்சவனக் கூட் டிக்கொண்டு போறமாதிரி கோயி லுக்கு போறவை சாமியோட கதைக்க ஐயரத்தான் பிடிக்க வேணும். ஏனென்டா 'தேவபாடை' எண்டு கம்பன் சொன்னானே. அந்தப் பாசைதான் கடவுளுக்குத் தெரியும். அதால கோயில்ல போய் அவர் மூலமா கடவுளட்ட தெரியும். அதால கோயில்ல போய் அவர் மூலமா கடவுளிட்ட கதைக்க அனுமதிச் சீட்டு எடுக்க வேணும். அதிலயும் எங்கட சனம் உச்சிப்போடும். ஒரு சீட்டு வாங்கினா அதிலயும் எங்கட சனம் உச்சிப்போடும். ஒரு சீட்ட வாங்கினா அதில ஒராளின்ர பேர்தான் எழுத வேணும். எழுத வேணும். எழுதாம அதைக்கொண்டு போய் ஐயாவின்ர கையில குடுத்திட்டு தன்ர பேர் புரியன்ர பேர் பிள்ளையள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் எண்டு எல்லாற்ற பேரும் நச்சேத்திரத்தோட, பாடமாக்கி ஒப்புவிச்சு அவற்றை வாயால் சொல்லுவிக்கிறதில பேர் பெற்றவை இருக்கினம். நியாயமா ஒரு சீட்டை வச்சுக் கொண்டு நான் பின்னால நிக்கிறன்.

முன்னால நிக்கிறவ வியாசம் வாசிச்சு முடிய, அடுத்தவர் பின்னப்பார் என்ர கெட்டித்தனத்தை எண்டு, குடும்ப விபரப்பட்டியல நச்சேத்திரம் ராசியோட ரைப்படிச்சு.... லெமனேற் பண்ணி ஒரு மட்டையாத் தூக்கி குடுக்க, ஐயா அதுக்கடியில வச்சுத்தந்த 50 ருவாக் காசை லாவமாக சின்னிவிரலிடுக்கில விட்டு இழுத்து இடுப்பில செருகிக் கொண்டே கடைவாய் கசிய வேதம் ஓதி எல்லோரையும் திருப்தி செய்வார்.

இந்த திருவிழா வந்திட்டா பாட்டுப் பெட்டி பதறும், வெளியில நாலா பக்கமும் குழாய் கட்டுவினம். அப்படியே தெருவிலும் நீளமா கயிறுபோல வயரப்போட்டு குழாய் கட்டுவினம். சனம் வாயால பாடி மனத்தால சிந்திக்க அய்யாமார் விடாயினம். மாரித்தவக்கை மாதிரி மைக்க முன்னால வச்சுக் கொண்டு புத்தகத்தில பார்த்து ஒரு ஐயா மந்திரம் சொல்ல பூத்தட்டை கையில வச்சுக் கொண்டு மற்ற ஐயா பூ போடுவார்.

சனத்துக்கு இப்ப கோயில் நோட்டீஸில அபிசேகத்துக்குரிய பால், பழம், தயிர், இளநீர் இதுகளோட கலாச்சார மான ஆடைகளை அணிந்து வரும்படி ஒரு கோரிக்கை போடுகினம்.

உங்க யாழ்ப்பாணத்தில தான் முதல் உந்த கதை வந்தது. இப்பயிப்ப வன்னியிலும் துவங்கீட்டுது. இந்த கலாசாரம் எண்டா முழுவதையும் திறந்து போட்டு தலை விரி கோலமாக வாறது. பிறகு புழுக்கம் தாங்காம மயிரை ஒதுக்கி முதுகை ரீலீஸ் பண்ணுறது. என்ன றிலீவ்.'.வோ என்னவோ ஒண்டு.


கலாசாரம், ஒழுக்கம், ஒருமைப்பாடு எல்லாத்தையும் கோயில்கள் தான் வளக்கிறது. அதால கோயிலுக்குப் போகவேணும் எண்டு என்ர பூட்டி என்ர விரலப்பிடிச்சு கூட்டிக்கொண்டு போன கோயிலுகள்ள அது இருந்தது தான். ஊரே கூடி ராராவா மோதகம் அவிச்சு, வடை சுட்டு, கடலை சுண்டி,அவல் குழைத்து, பொங்கல் வைச்சு. பழங்கள் தேன் சேர்த்து ஜிஞ்சாமிர்தம் ஸோஸோறி. பஞ்சாமிர்தம் எல்லாம் செய்வினம். விடிய பெரிய மடை பரவி கற்பூரங் கொழுத்தி கும்பிட்டு தேவாரம் பாடிமுடிய, ஊர் கூடி பங்கிட்டு அதில உப்பு காணாது. இதில சக்கரை கூடிட்டுது. பொங்கல் நல்லாயிருக்கு, எண்டு

---

**விடியக் காத்தால அசந்து துங்குகிற நேரம் துவங்கிடுவாங்க பாட்டுப் போட எட பத்திமுத்தி போடு கினம் எண்டா கடவுளை தங்கட வாயால பாடிக் கும்பிட்டா மன்னிக்கலாம். இதென்னடா, சீடீயத்துக்கி பெட்டியில் போட் டிட்டு அவை பிரண்டு படுத்திட்டு ஆறுதலா எழும்பி வேலை பார்க்க, இஞ்ச சுற்றாடல்ல உள்ள சனம், பிள்ளையள் படிக் கிறதோ, தன்தன் பிரார்த்தனை செய்யிறதோ என்ன ஏலும்.**

---

தர விமர்சனம் செய்து கூடி உண்டு மகிழ்ந்து பின் பாத்திரங்களையும் கூடியிருந்து அடிப்பிடிச்ச பானைய சுரண்டி சுரண்டி கோயிலடிப் புதினங் கள் நாள் முழுக்க இருக்கும். நாட்டுப்புறக் கோயிலுகள்ள அன்னதானம் எண்ட பேரில கூடி சமைச்சு சாப்பிடுவினம்.



அதோட போச்சா, காவடியாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், கூத்துகள் எண்டு ஒரு பக்கம் களைகட்டும்.

இண்டைக்கும் கோயில்ல திருவிழாதான். சனம் கூடுறதுதான். விதவிதமா அலங்கரிச்சுக்கொண்டு வந்திடுவினம். கூடிச் சமைச்சதோ, கூடி உண்டதோ போயே போச்சு. விடிய விடிய கியாம், மியாம் எண்டு ஐயர் ஸ்பீக்கரில கத்திறார். அன்னதானம் கூட ஒரு ஆள் வைச்சு சமைக்கிறாங்க. பொங்கல், மோதகம், வடை இத்தியாதி எதுவும் கிடையாது சாமியும் பட்டினி சனமும் பட்டினி.

முன்னம் கும்பாபிஷேகம் செய்யாத கோயிலுக்கு பிராமணி பூசை செய்ய மாட்டார் எண்டு பூட்டி சொல்லுவா. இப்ப கோயில் எண்டு ஒரு மரத்தடியில கொட்டில் போட்டாலும் ஐயர் வருவார். ஏன்டா முந்தி வேதமோதுறது கடமை. இப்ப வேதமோதுறது தொழில். ஆர் கூப்பிட்டாலும் எங்க கூப்பிட்டாலும் போகினம். இந்த இடங்களில சனம் சமைச்சத படைக்க மாட்டான் எண்டு ஐயர் சொல்லமாட்டார்.

பெரிய பெரிய கோயிலுகள்ள ஐயர்மார் சுவாமிய யந்திரத்தில கட்டி மூலஸ்தானத்துக்க பூட்டி வச்சிட்டினமாம். அதால அந்த சுவாமிகள் கோயிலை சுத்தி சுத்தி வந்து திரும்பவும் குளிச்சிட்டு உள்ளுக்கயே போய் இருக்கினமாம்.

முதல் பழைய சாமிகளுக்கு திருவிழா வரமுதல் வடக்கன் மாடு பூட்டின வண்டில்ல வைச்சு கிராமத் தெரு முழுக்க கொண்டு சுத்துவினம். ஒவ்வொரு கடவைக்கும் சுவாமிய வரவேற்க கும்பம் வச்சு அவல் கடலை எண்டு ஊர்வலத்தில வாறவைக்கு கை நிறைய குடுப்பினம். இதைச்சாட்டி எல்லா தெருக்களும் பற்றைவெட்டி கூட்டியள்ளி, கோலம் போட்டு, பிரதான சந்தியெல்லாம் அலங்கார வளைவுகள் கட்டி ச்சா... ஊரே சுத்தமாக்கப்பட்டிருக்கிறத பாக்க வேணும்.

இப்ப தெருவில பற்றை வெட்டவும் கூட்டவும் கவுண்மேந்து வர வேணுமெண்டுமெல்லே காத்திருக்கினம். கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் காப்பாற்றி வைச்சிருந்த சனம் ஊரை விட்டே ஓட வேண்டிய நிலை வந்ததும் இந்த சுவாமிகளையும் கொண்டு போயிட்டினர். முன்னர் யார் பூசை செய்தாலும் கூட்டுப் பிரார்த்தனை பஜனை எண்டு மக்கள் கூடிப் பாடுவினம். அதுக்கொரு நேரம் இருக்கும். அனைத்து மக்களும் அமர்ந்துபாருங்கள் இன்றும் அந்தப் பஜனை நடைபெறுகிது. சில இடங்களில் அதிலும் அய்யாமார் வந்து பாடிக் கொண்டாடி மக் கள் கடவுளைப் பாடவே கூடாது என்று முடிவெடுத்துட்டி னம். ஒருவேளை சனம் இப்படி தின மும் பாடப்போக சுவாமிக்கும் தமிழ் விளங்கிக் கிளங்கி சனத் தோட நேர கதைச்சிட்டா தங்கட பாடு அதோகதியாப் போகும் எண்டு பயமோ.

என்ன எங்கட காதுதான் மோசமா பாதிக்கப்படுது. பகல் முழுக்க பாடிப் பாடி மந்திரம் பேசி அப்பிடியே பிடிக்க ஒலி வாங்கிய கீழ வைக்கமாட்டாம, பூசையில மந்திரஞ் சொல்லி குறையில் விட்டிட்டு சொற் பொழிவு துவங்கி, துவங்கினதை முடிக்கமாட்டா.... இழு இழு இழு எண்டு இழுத்து மாரித்தவக் களையள் கூடின மாதிரித்தான் எல்லா மதங்களும் சொல்லுற ஒண்டுதான். அன்பு அகிம்சை, கொல்லாமை எண்டெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். அதெல்லாம் உந்த ஒலிபெருக் கியளுக்கு விளங்குமோ அது எங் கட நிம்மதிய தின்னுது கோயில் கதையள் இப்பிடி போக,

இப்பத்தையில் பிள்ளைய ளுக்கு அதாவது இந்த தலை முறைக்கு காது செவிடாத்தான் இருக்கோ.... எண்டொரு சந்தேகம் எனக்கிருக்கு. சாதாரணமா ரேடியோப் பெட்டியில் சத்தம் இவையளுக்கு போதவே போதாது.

## தமிழ்க்கவி

அயலட்டையில் வாழுறதெல்லாம் மிருகசாதியன் எண்டு தான் நினைப்பினமோ தெரியாது. சும்ம அதிரும் எது? அயல் வீடுகள் அதிரும். பாட்டைப் போட்டவை பாடைக்க பேசாமக் கிடப்பினம்.

இது பரவாயில்லை பக்கத்துக் கோயில் இசுபீக்கர் துவங்க, பக்கத்து

(தொடர்ச்சி 14 இல்...............)

# இலங்கை அரசியலில் முன்னோடி குமாரசுவாமி முதலியார்

***இலங்கை நாடாளுமன்ற ஆட்சிமுறைக்கு முன்னோடியாக சட்ட நிர்வாக சபை அமைந்தது. நாட்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் யாவுமே இந்த சபையில் ஆலோசிக்கப்பட்டே சட்டங்களாகின.***

***எனவே இந்த சட்ட நிர்வாக சபைக்கான உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களை அன்றைய தேசாதிபதியான சேர் வில்மட் ஹோர்ட்டன் 1835 மே 30ம் திகதி நியமித்தார். குமாரசுவாமி முதலியார் முதன்முதலாக அமைக்கப்பட்ட சட்ட நிர்வாக சபையின் முதல் தமிழ் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பெருமையுடையவராவார்.***

முதன் முதலில் இந்தியாவில் இருந்து பிரிட்டிஷ் கிழக்கு இந்தியாக் கம்பனியினரின் படை திருகோணமலைக்கு கேர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவாட் என்ற தளபதியின் தலைமையில் 1775ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி வந்து இறங்கிற்று. அப்பொழுது திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய நகரங்களை உள்ளடக்கிய இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு கீழ் இருந்தன.

திருகோணமலைக்கு வந்து சேர்ந்த பிரிட்டிஷ் கம்பனிப் படையினர், துறைமுகநகரத்தை முற்றுகையிட்டனர். ஒல்லாந்தர் பணிந்தனர் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி திருகோணமலை பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்டது. தொடர்ந்து மட்டக்களப்பு துறைமுகத்தையும் கிழக்குப் பிராந்தியத்தையும் கைப்பற்றுமாறு மேஜர் பிறேசரின் தலைமையிலான 72ஆம் படைப் பிரிவை அனுப்பிவைத்துவிட்டு, கேர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவாட் வடபகுதியை நோக்கி கடல் மார்க்கமாக தனது படைகளுடன் சென்றான்.

**ஒல்லாந்தர் ஆட்சியை விடுத்து கொழும்பைக் கைப்பற்றிய போது, 2 யுத்த வீரர்கள் கொல்லப்பட்டனர். 15 வீரர்கள் காயமடைந்தனர்.**

கேர்ணல் ஸ்ருவாட்டும் அவனது படைகளும் செப்டம்பர் மாதம் 27ம் திகதி பருத்தித்துறைத்துறை முகத்தை வந்து அடைந்தனர். அந்தப் படைகள் வரவும், ஏற்கனவே ஒழுங்கு செய்த மாதிரி நாகபட்டினத்திலிருந்தும் பிரிட்டிஷ் கம்பனிப்படையினரின் 52ம் படைப்பிரிவு பருத்தித்துறை வந்து சேரவும் சரியாக இருந்தது.

அன்று மாலையே கேர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவாட் தனது படைகளை நடாத்திக்கொண்டு யாழ்ப்பாண நகர் போய் சேர்ந்தான். பிரிட்டிஷாரின் படையைக்கண்ட ஒல்லாந்தர் எந்த விதமான எதிர்ப்பும் இன்றி சரணடைந்தனர்.

யாழ்ப்பாண பட்டிணம் கைப்பற்றப்பட்டதை அடுத்துகப்டன் பார்புட்டின் தலைமையில் ஒரு படைப்பிரிவு மன்னார் துறைமுகத்தையும் அந்தப் பகுதியையும் கைப்பற்றுமாறு அனுப்பி வைக்கப்பட்டது. அதே சமயம் திருகோணமலையிலிருந்து வரும் வழியில் பிரிட்டிஷ் கம்பனிப் படையினர் முல்லைத்தீவு துறை முகத்தையும் அந்த பிரதேசத்தையும் கைப்பற்றினர்.


தோமஸ் மெயிற்லண்ட்


றோபேட் பிறவுண்றிக்

தமிழ் பகுதிகளை எந்த விதமான எதிர்ப்புமின்றி கைப்பற்றிய பிரிட்டிஷ் கம்பனிப்படையினர் கொழும்பு நகரத்தையும் ஏனைய தென்னிலங்கைக் கரையோரப் பகுதிகளையும் கைப்பற்ற திட்டமிட்டனர். எனவே, பிரிட்டிஷ் படைகள் நீர்கொழும்பில் 1776ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி ஒன்று கூடின. அங்கிருந்து கொழும்பை நோக்கி நகர்ந்த பிரிட்டிஷ் படைகள் பெப்ரவரி 14ஆம் திகதி கொழும்பைக் கைப்பற்றின.

ஒல்லாந்தர் ஆட்சியை விடுவித்து கொழும்பை கைப்பற்றிய போது 2 யுத்தவீரர்கள் கொல்லப்பட்ட னர். 15 வீரர்கள் காயமடைந்தார்கள் என்று பிரிட்டிஷ் காலனி ஆட்சியினரால் எழுதப்பட்டுள்ள "இராணுவச் சரிதம்" என்ற கையெழுத்து உத்தியோக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பிரதேசத்திற்கு தேசா திபதியாக சேர் பிரட்ரிக் நோர்த் என்ற ஆங்கிலேயர் முதன்முதலாக 1798 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அதை அடுத்து இங்கிலாந்து நாட்டுக்கும் ஒல்லாந்து நாட்டுக்குமிடையில் 1802ஆம் ஆண்டு 'ஏமியன்ஸ் ஒப்பந்தம்' என்ற பிரபலமான ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது. ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை கரையோரப் பிரதேசங்கள் இங்கிலாந்து மன்னரின் முடியாட்சிக்குட்பட்ட முடிக்குரிய காலனி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அதே காலத்தில் மலைநாடு முழுவதும் அடங்கிய பிரதேசம் கண்டி இராசதானி தனியாக ஸ்ரீவிக்கிரம இராசசிங்க மகாராசாவின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியினை நிர்வகிப்பதற்கென்று பெரும் தொகையான தமிழ் தெரிந்த நிர்வாக உத்தியோகத்தர்களை சென்னையிலிருந்து பிரிட்டிஷார் கொண்டு வந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலம் தெரிந்த இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புள்ளது என்பதை உணர்ந்த வாரித்தம்பி என்ற பெரியவர், தனது தம்பியாரை கொழும்பு வரச் செய்தார்.

தம்பியார் பெயர் குமாரசுவாமி. வடமராட்சியைச் சேர்ந்த கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகநாதபிள்ளையின் இளைய மகனே குமாரசு வாமி. இவர், கெருடாவிலில் 1783ஆம் ஆண்டு பிறந்தவர்.

தமையனாரின் கட்டளைக் குட்பட்டு குமாரசுவாமி. தனது பதின்மூன்றாம் வயதில் கொழும்பு போய்ச் சேர்ந்தார்.

கொழும்பு வந்து சேர்ந்த தனது சகோதரரை கொழும்பில் 1799ம் ஆண்டு ஒக்டோபர் 28ம் திகதி தேசாதிபதி சேர் பிரட்ரிக் நோர்த்தின் சிபார்சை அடுத்து உருவாக்கப்பட்ட செமினரிப் பாடசாலையில் சேர்ந்து படிக்க வைத்தார் வாரித்தம்பியார். இப்பாடசாலை வூல் வெண்டால் வீதியில் (ஆட்டுபட்டித்தெரு) அமைந்திருந்த தேவாலயத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்தது.

பாடசாலை படிப்பையடுத்து 1805ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகப் பிரதேசத்துக்கான மஜிஸ்ரேட் நீதிமன்றத்தின்


**மதிப்பீட்டின் படி நாடு பூராகவும் 28 ஆயிரம் கொத்தடிமைகள் இருந்தார்கள். அதில் 22 ஆயிரம் கொத்தடிமைகள் யாழ்ப்பாணம், திருகோணமலைப் பிரதேசத்தில் இருந்தனர்.**

மொழிபெயர்ப்பாளராக குமாரசுவாமி நியமனமானார். தொடர்ந்து 1808ஆம் ஆண்டு, அன்றைய தேசாதிபதியான ஆசர் தோமஸ் மெயிற்லண்டின் மொழி பெயர்பாளராகவும் அதை அடுத்து 1810ஆம் ஆண்டு தேசாதிபதியின் பிரதம தமிழ்மொழி பெயர்ப்பாளராகவும் முதலியாராகவும் அவரது 26 ஆவது வயதில் நியமிக்கப்பட்டார். அன்று தொடக்கம் அவரது பெயருடன் முதலியார் பட்டமும் ஒட்டிக் கொண்டது.

அதற்கிடையில் பிரிட்டிஷ் படைகள் கண்டி இராச தானியின் மன்னனான ஸ்ரீவிக்கிரம இராசசிங்கனின் ஆட்சியை முறியடித்து இலங்கையில் எஞ்சியிருந்த ஒரே இராசதானியையும் கைப்பற்ற முன் வந்தனர். பிரிட்டிஷாருக்கு அரசனின் பிரதானிகளில் முதல்வனாக எஹலப்பொல அதிகாரியும் அவனைச் சேர்ந்த பிரதானிகளும் ஒத்துழைத்தனர். யுத்தம் இருபகுதிக்குமிடையில் நடைபெற்றது. கண்டி இராச்சியம் மலைப்பாங்கான பகுதியாதலால் நாற்பது நாட்களாக யுத்தம் நடைபெற்றது. அரசனின் பிரதானிகளின் ஒத்துழைப்புடன் பிரிட்டிஷ் படைகள் கண்டி நகரை சுற்றிவளைத்துக் கொண்டன. துப்பாக்கி, பீரங்கி போன்ற நவீன ஆயுதங்களைக் கொண்டு பிரிட்டிஷார் மன்னனின் படைகளைத் தாக்கினார்கள். பிரிட்டிஷாரின் படைவலிமையை தாக்குப்பிடிக்க முடியாமல் ஸ்ரீவிக்கிரம இராசசிங்க மன்னன் தலைநகரை விட்டு வெளியேறினான்.

**குமாரசுவாமி முதலியாரின் இராசதந்திர ஆலோசனைகளின் பலனாக ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனையும் அவனது மனைவியார் குடும்பத்தினரையும், உறவினர்களையும் பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் உள்ள வேலூருக்கு தேசப் பிரஷ்டம் செய்தது.**


பிரெடெரிக் நோர்த்


எட்வேர்ட் பார்ண்ஸ்

மன்னனும் அவனது நான்கு மனைவிமார்களில் இருவரும் கண்டியிலுள்ள தொம்பறை பகுதியை சென்றடைந்த போது அதிகாரி எஹலப் போலவின் தலைமையிலான சிங்களக் கூலிப்படைகளும், பிரிட்டிஷ் சிப்பாய்களும் அவர்களைக் கைது செய்தார்கள். அதை அடுத்து மன்னனின் ஏனைய இரு மனைவியரையும் தாயாரையும் கைது செய்தார்கள் என்று 1815ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி அரச உதவிச் செயலாளரின் ஒப்பமிடப்பட்ட அரசாங்க அறிவித்தல் பெப்ரவரி 22ஆம் திகதி வெளியான விசேட அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளிவந்தது.

ஸ்ரீவிக்கிரம இராசசிங்க மன்னனின் கைதை அடுத்து அன்று தேசாதிபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் றோபேட் பிரவுன்றிக் குமாரசுவாமி முதலியாரையும் ஏனைய முக்கியமான அரச ஊழியர்களையும் கண்டிக்கு உடன்போகுமாறு அனுப்பிவைத்தார்.

அன்று கண்டிக்கு செல்லும் பாதை மிகவும் கரடு முரடானதாகவும் பள்ளம் மேடு நிறைந்த மலைப்பாங்கான காட்டுப்பாதையாகவும் இருந்தது. கண்டி நகர் சென்ற குமாரசுவாமி முதலியார், அங்கு இருந்த அதிகாரி எஹலப் பொல போன்ற பிரதானிகளைச் சந்தித்து சிங்கள பிரதானிகளுக்கும் பிரிட்டிஷ் அரசுக் குமிடையிலான ஒப்பந்தம் பற்றிய ஆலோசனைக் கூட்டங்களில் பங்குபற்றினார். அன்றைய கண்டி இரச்சிய பிரதானிகள் தமிழ்மொழி பேசும் சிங்களவர்களாகவே இருந்தனர். எனவே அவர்களுக்கு குமாரசுவாமி முதலியாரின் சேவை இன்றியமையாததாக இருந்தது.

கண்டி பிரதானிகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குமிடையில் கண்டி நகரில் அமைந்த ஸ்ரீவிக்கிரம இராசசிங்கனின் அரச மாளிகையில் 1815 ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி ஓர் ஒப்பந்தம் நிறைவேறிற்று. இந்த ஒப்பந்தமே 'கண்டிய ஒப்பந்தம்' என்று இன்றும் அழைக்கப்படுகின்றது.


அடுத்து குமாரசுவாமி முதலியார் கைது செய்யப்பட ஸ்ரீவிக்கிரம இராசசிங்க மன்னன், அவனது குடும்பத்தாருடன் சேர்ந்து கொழும்பு வந்தார். பிரிட்டிஷ் அரசுக்கும் கைது செய்யப்பட்ட மன்னனுக்கு மிடையில் தூதுவராக இயங்கி சமரசப் பேச்சு வார்த்தையில் பெரிதும் பங்குபற்றினார். குமாரசுவாமி முதலியாரின் இராசதந்திர ஆலோசனைகளின் பலனாக

**கே. ரி. இராசசிங்கம்**

(தொடர்ச்சி 14 இல்......)


# அழிவுகளில் இருந்து மீண்டெழும் மாவிட்டபுரக் கந்தன்

சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் விஸ்தீரணமாக எழுந்தருளியுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கடந்த கால யுத்த காலத்தில் பல்வேறு



அழிவுகளைச் சந்தித்து, பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்து இன்று அடியார்களின் பங்களிப்புடன் மீளவும் பழைய நிலையை அடைவதற்கு ஆலய திருப்பணிச் சபையினரால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மாருதப்புரவீகவல்லி முனிவரொருவரின் சாபத்தினால் குதிரை முகம் அடைந்தாள். தனது இந்தநிலை மாறுவதற்காக கீரிமலையில் நீராடிய வேளை அவரது குதிரை முகம் நீங்கி பழைய நிலையை அடைந்தாள் என்பதுவும், தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கப் பெற்றதால் அதற்குப் பிரதியுபகாரமாக மாவிட்டபுரத்தில் முருகன் ஆலயத்தைக்



கட்டுவித்து அந்த ஆலயத்தைப் பராமரி ப்பதற்காக பல்வேறு தொழில்களையும் சேர்ந்தவர்களை கோவிலின் அருகிலு ள்ள ஊர்களிலே (அதாவது சோழ குடியேற்றம்) குடியேற்றினாள் என்பது வும் வரலாறு.

ஈழமணித் திருநாட்டிலே மூன்று வீதிகள், கொண்டதும் மஹோற்சவ காலத்தில் 5 தேர்கள் இழுப்பதுமாக இருந்த மாவிட்டபுரக்கந்தனுக்கு 1990ஆம் ஆண்டு வந்தது சோதனை. இது தொடர்பாக மாவை ஆதீன இளவரசரும், மென்பொருள் பொறியியலாளருமான து.ஷ.இ ஞானஸ்கந்த சர்மா விளக்குகிறார்.

கடந்த 20.10.1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஆலயத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டோம். அங்கிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மல்லாகத்தில் இருந்த போதிலும் ஐந்து ஆண்டுகளாக எம்பெருமானைத் தரிசிக்க அனுமதி கிட்டவேயில்லை. எனினும் 18.05.1996 அன்று ஆலயத்தைப் பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டது. 5 வருடங்களுக்குப் பின்னர் ஆலயத்திற்குச் சென்றவேளை ஆலயத்தைப் பார்க்க முடியாத வகையில் மரங்களும், புதர்களுமாகக் காணப்பட்டன. எனினும் படையினர், அடியார்களின் உதவியுடன் ஆலயம் துப்புரவு செய்யப்பட்டது.

ஆனால் ஆலயத்தின் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் தவிர ஏனைய மண்டபங்கள், உள்வீதி, வசந்த மண்டபம், கூரைகள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஆதீன கார்த்தாவின் கார், ஆலய நகைகள், பிள்ளையார், சிவன் அம்பாள், வள்ளி தேவசேனா, சண்டேஸ்வரர், சந்தான கோபாலருடன், எண்பது கிலோ எடையுள்ள தங்க விக்கிரகம், வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி 180 கிலோ எடையுள்ள கொடிஸ்தம்பம், கவசம், செம்பு, குடம், கெண்டி, தீபங்கள், உபசாரங்கள், பழனியாண்டவர் விக்கிரகம், ஓலைச்சுவடிகள் யாவும் சூறையாடப்பட்டிருந்தன. அத்துடன் நான்கு தேர்களும் சப்பறமும் கொத்தி எரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல கோடி ரூபா பெறுமதியான சொத்தழிவுகளைக் கண்டும் மனம் தளராத மஹாராஜஸ்ரீ அ.து.ஷண்முக நாதக் குருக்கள், அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் கொடுத்த நிதியினைக் கொண்டு தனது அயராத முயற்சியினால் திருப்பணிகளை ஆரம்பித்து ஆலயத்தை சீர்படுத்தினார்.

தற்போது ஆலய வேலைகள் புலம் பெயர்ந்து வாழும் அடியவர்கள், ஊரிலுள்ளோரின் நிதியுதவி பங்களிப்புடன் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. தற்போது 40 அடியில் துவார கோபுரம் அல்லது மொட்டை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அடுத்து 118 அடியில் இராஜ கோபுரம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்த புனருத்தாபன பணிகளுக்காக 30 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆலயத்தின் உள்வீதி வேலைகள் முற்றுப்பெறும் நிலையில் உள்ளன.

நிலவேலைகளே செய்ய வேண்டி உள்ளன. இரண்டாம் வீதியின் பாரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



வசந்த மண்டபம் பழனி ஆண்டவர் கட்டடத்தின் ஒரு பகுதி நிறைவடைந்த நிலையில் மண்டபம் அமைக்கும் பணியே உள்ளது. அடுத்த வருட வருடாந்த மஹோற்சவ காலத்தில் வசந்தமண்ப வேலைகள் முழுமையாக நிறைவு பெறும்.


தற்போது கொழும்பில் ஒன்றரை கோடி ரூபா செலவில் பெரிய தேர் கட்டும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இந்திய, உள்ளூர் சிற்பாசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். மிகுதியாக உள்ள மூன்று தேர்களும் புதிதாகவே கட்டப்பட வேண்டும்.

1996ஆம் ஆண்டு ஆலயத்திற்கு எம்மை அனுமதித்த போதிலும், விசேட தினங்கள், திருவிழாக் காலங்களில் விசேட பேருந்துச் சேவைகள் மூலம் மக்கள் வருவதற்கு அனுமதிக்கப்பட்டனர். 2011ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னரே மக்கள் முழுமையாக கோவிலுக்கு வந்துள்ளனர் எனத் விபரித்தார்.

தற்போது ஆலயத்தின் 39 வது குருக்களாக மகாராஜ சிறீ டி.எஸ்.ரட்ண சபாபதி குருக்கள் உள்ளார். ஆலயத்தில் காலை 6.00 மணி, 9.00 மணி 12.00 மணி, மாலை 6.00 மணி, மாலை 6.15 மணி, இரவு 7.00 மணியென ஆறு கால பூசைகளும் தினந்தோறும் தவறாமல் இடம் பெறுகிறது.

மாருதப்புரவீகவல்லியினால் பிரதிஷ்டை செய்யப்பட்டு மூலஸ்தான கந்தனை வணங்கி விட்டு வெளியேறும் போது, யுத்தத்தின் வடுக்கள் இன்னமும் ஆலயத்தில் இருப்பது மனவேதனையையே அளித்தது.

**சசி**



## மாவை ஆதீன வம்சாவழி

01. தீக்ஷிதர் பெரியமனத்துள்ளார்
02. தீக்ஷிதர் சிதம்பரம்
03. தீக்ஷிதர் சின்னமனதுதள்ளார்
04. தீக்ஷிதர் சி.பரமேஸ்வரன்
05. தீக்ஷிதர் ப.சுப்ரமண்யர்
06. தீக்ஷிதர் சு.சிதம்பரசுப்ரமணியர்
07. தீக்ஷிதர் சி.நடனசபாபதி
08. தீக்ஷிதர் ந.சிதம்பரநடேசன்
09. தீக்ஷிதர் சி.பரமேஸ்வரா
10. தீக்ஷிதர் ப.சபாபதி
11. தீக்ஷிதர் ச.வாமதேவர்
12. தீக்ஷிதர் ச.ஈசானசிவம் (தும்பியார்)
13. தீக்ஷிதர் நடராஜசுந்தரம்
14. தீக்ஷிதர் ந.சுவாமிநாதர்
15. தீக்ஷிதர் சு.சிதம்பரேஸ்வரர்
16. தீக்ஷிதர் சி.நடராஜசிவம் (தும்பியார்)
17. தீக்ஷிதர் சி.நடனசபாபதி
18. தீக்ஷிதர் சிவகாமசுந்தரி (மகள்)
19. தீக்ஷிதர் ஜம்பநாதர்
20. தீக்ஷிதர் ஜ.சபாநாயகர் (தும்பியார்)
21. தீக்ஷிதர் சுவாமிநாதர்
22. தீக்ஷிதர் சு.ஈசானசிவம்
23. தீக்ஷிதர் ஈ.பரமேஸ்வரன்
24. தீக்ஷிதர் ப.ஹேரம்பர்
25. தீக்ஷிதர் ஷேரம்பர்
26. தீக்ஷிதர் விஸ்வநாதர் சோமசுந்தர்
27. தீக்ஷிதர் கௌரிசங்கர்
28. தீக்ஷிதர் கௌ.சிவசங்கரநாதன்
29. தீக்ஷிதர் சி.சுவாமிநாதர்
30. தீக்ஷிதர் சு.சபாநாயகம்
31. தீக்ஷிதர் க.குமாரசாமி
32. தீக்ஷிதர் கு.சபாபதிக்குரு
33. தீக்ஷிதர் கு.சொக்கநாதக் குரு மகன்
34. தீக்ஷிதர் சபாபதிக்குரு மகன்
35. தீக்ஷிதர் வேதநாயகியம்பாள் சாமிக் குருக்கள்
36. தீக்ஷிதர் சா.சுப்பிரமணியக் குருக்கள்
37. தீக்ஷிதர் சு.துரைச்சாமிக் குருக்கள்
38. தீக்ஷிதர் து.ஷண்முகநாதக் குருக்கள்
39. தீக்ஷிதர் ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்

# சாகசம்



# காதலும் கடந்து போகும்


அட்டகத்தி, பிட்சா, சூதுகவ்வும், வில்லா (பிட்சா 2), மூண்டாசுப்பட்டி, இன்று நேற்று நாளை உள்ளிட்ட ஏராளமான வெற்றிப் படங்களை திருக்குமரன் என்டர்டெயின்மெண்ட் சார்பில் தயாரித்த சீ.வி.குமார், கே.ஈ.ஞானவேல் ராஜாவின் ஸ்டுடியோ கீரின் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் புதிய படம் காதலும் கடந்து போகும்.
சூதுகவ்வும் இயக்குனர் நலன் குமாரசாமி இந்தப் படத்தை இயக்குகிறார்.
இப்படத்தில் விஜய்சேதுபதி கதாநாயகனாகவும் மடோனா கதாநாயகியாகவும் நடிக்கின்றனர்.
சமுத்திரகனி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். சந்தோஷ் நாராயணன் இசையமைக்க, லியோஜான் பால் படத்தொகுப்பை மேற்கொள்கிறார். தினேஷ் கிருஷ்ணன் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.

# எங்க வீட்டு ராசாத்தி



தமிழ் சினிமாவில் இன்னும் பல பெண்களின் மனதில் எங்க வீட்டு ராசாத்தியாக வாழ்ந்து வருபவர் ஜோதிகா. அண்மையில் முன்னணி நகைக் கடை விளம்பரத்தில் நடிக்க ஜோதிகாவுக்கு அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்ற ஜோதிகா அந்த விளம்பரத்தில் நடிக்கவும் செய்துள்ளாராம். அதற்காக அவருக்கு சுமார் ரூ. 2 கோடி வரை சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஜோதிகாவுக்கு பல விளம்பரத்தில் நடிக்கவும் வாய்ப்பு வந்து கொண்டிருக்கிறதாம். ஜோதிகாவின் இந்த சம்பள விபரத்தை அறிந்த முன்னணி நாயகிகள் வாயடைத்துப் போயுள்ளனர்.

# மண் கோட்டை



கயல் படத்தில் அறிமுகமான ஆனந்தியை, குடும்ப குத்துவிளக்கு போல் இருக்கீங்க கோலிவுட்டில், நதியா, மீனா போல், குடும்பப் பாங்கான வேடமாக நடித்தால் ஒரு ரவுண்டு வரலாம் என, சிலர் யோசனை கூறினர். ஆனந்திக்கு, மனதுக்குள் பட்டாம்பூச்சிகள் பட படத்தன. கோலிவுட்டின் முன்னணி நடிகையாகி விடலாம். துளியும் கவர்ச்சியில்லாமல் இயக்குனராக ரோலாக நடிக்க வேண்டும் என, மனக் கோட்டை கட்டினார்.

ஆனால், த்ரிஷா இல்லனா நயன்தாரா படத்தின் மூலம் அவரது மனக்கோட்டை, மண் கோட்டையாகி விட்டது. படத்தில், தனக்கு தெரியாமல் ஆபாச வசனங்களை இயக்குனர் சேர்த்து விட்டதாகக் கூறி, என் பிழைப்பு போய்விட்டதே என, புலம்புகிறாராம் ஆனந்தி. பச்சை மண்ணுக்கு ஏம்பா, நஞ்சு ஊத்துறீங்க என, கோடம்பாக்கம் உச் கொட்டுகிறது.

# புலி



# கபாலி



# பெருமிதத்தில் தன்ஷிகா



பேராண்மை, மாஞ்சாவேலு, அரவான், பரதேசி, திறந்திடு சீசே, விழித்திரு என பல படங்களில் நடித்தவர் தன்ஷிகா.
கதாநாயகியாக இன்னும் ஒரு இடம் பிடிக்காத நிலையில், பரதேசியில் ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடித்த அவர் இப்போது கபாலியில் ரஜினியின் மகளாக நடிக்கிறார்.
மகள் கதாபாத்திரம் என்றாலும் ரஜினியின் மகளாக நடிப்பதால் இது எனக்கு கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு என்கிற பெருமிதத்துடன் கபாலியில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

# சிவாவை பிரிய விரும்பாத அஜித்

இயக்குநர் சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் 3 ஆவது முறையாக நடிக்கப் போகிறார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.


சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த வருடம் வீரம் திரைப்படத்தில் நடித்த அஜித் தற்போது மீண்டும் சிறுத்தை சிவா இயக்கத்தில் வேதாளம் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

2 படங்களிலும் சிறுத்தை சிவாவின் இயக்கம் மற்றும் கதை ஆகியவை அஜித்தை மிகவும் கவர்ந்து விட்டதாகவும், அதனால் இன்னொரு படத்தில் நாம் மீண்டும் இணையலாம் என்று அஜித் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.





# கதகளி கலைஞராக நயன்தாரா

'பாஸ்கர் த ராஸ்கல்' என்ற மலையாளப் படத்தில் மம்முட்டியுடன் நடித்தார் நயன்தாரா. இந்தப் படத்துக்குப் பிறகு தமிழில் கவனம் செலுத்திய அவர் மீண்டும் மலையாளப் படத்தில் நடிக்கிறார். ஏ.கே.சஜன் இயக்கும் இந்தப் படத்திலும் அவர் மம்முட்டி ஜோடியாக நடிக்கிறார். இதில் கதகளி நடனக் கலைஞர் வாசுகியாக நடிக்கிறார். இதற்காக அவர் கதகளி பயிற்சி பெற்று வருகிறார். இதுபற்றி சஜன் கூறும்போது, 'இதற்கு முன் நடித்திராத கதாபாத்திரத்தில் நடிக்கிறார் நயன்தாரா. வறுமை பின்னணி கொண்ட பிராமணப் பெண்ணாக வருகிறார். அவரது கதாபாத்திரம் பேசப்படுவதாக இருக்கும். மம்முட்டி, வழக்கறிஞராக நடிக்கிறார்' என்றார்.



# புதிய அவதாரம் எடுக்கும் சிவகார்த்திகேயன்



தமிழ் ஹீரோக்களில் திட்டமிட்டு காய் நகர்த்தி தன்னை வளர்த்துக் கொண்டு வருபவர் சிவகார்த்திகேயன். சம்பள விஷயத்திலும் சரி, கதை தேர்விலும் சரி தனது காலடியை மெதுவாக அளந்து எடுத்து வைக்கிறார். மெரீனா படத்தில் 50 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் நடிக்க ஆரம்பித்தவர். அடுத்தடுத்து தன்னை கொமெடி ஹீரோவாக முன்னிறுத்தினார். காக்கிச் சட்டை படத்தில் லேசாக ஆக்‌ஷனில் கால் பதித்தார். அதையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவே அடுத்துவர உள்ள ரஜினி முருகனில் ரொம்ப ஸ்டிரோங்கான ஆக்‌ஷனில் குதிக்கிறார்.

அடுத்து அவர் நடிக்கப் போகும் படத்தில்தான் முழுமையான கொமர்ஷியல் ஆக்‌ஷன் ஹீரோவாக தன்னை முன்நிறுத்தப் போகிறார் என்றாலும் ஆதார ஸ்ருதியாக கொமெடியையும் கையில் வைத்துக் கொள்கிறார். படத்தை அவரது நண்பர் ராஜா தயாரிக்கிறார். சுந்தர்.சி, அட்லியிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய பாக்கியராஜ் இயக்குகிறார். ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார், அனிருத் இசை அமைக்கிறார், ரசூல் பூக்குட்டி ஒலிப்பதிவு, ஐ படத்தில் பணியாற்றிய வீட்டா வேர்க்ஷொப் படத்துக்கு வேலை செய்ய இருக்கிறது. படத்தில் சிவகார்த்திகேயனுக்கு இரண்டு கெட்அப். ஒன்று வழக்கமான கொமெடி பையன். இன்னொன்றுதான் அதிரடி ஆக்‌ஷன் கெட்அப். அது கடைசி வரை இரகசியமாக வைக்கப்படும். படத்துக்கான முன் தயாரிப்பு வேலைகள் நடந்து வருகின்றன. படத்துக்கான பட்ஜெட் 50 கோடி என்கிறார்கள்.



இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,
ரஜினி சார் படத்தில் எல்லாம் ஒரு சீரியலில் நடிக்க சான்ஸ் கிடைக்காதா என்று நான் ஏங்கியதுண்டு.
ஆனால் இன்றைக்கு அவரது மகளாகவே அவருடன் இணைந்து நடிக்கிற பாக்கியம் கிடைத்துள்ளது.
இதைவிட பெருமை என்ன இருக்கிறது என்று கூறும் அவர் இந்தப் படத்துக்காக எனது தலைமுடியை கட் பண்ணி ஒரு வித்தியாசமான தலை அலங்காரத்துடன் என்னைக் காண்பிக்கிறார் டைரக்டர் ரஞ்சித். அந்த வகையில்,ஏற்கனவே நடித்து முடித்துள்ள விழித்திரு படத்திலும் ஒரு புதுமையான கெட்டப்பில் நடித்திருக்கும் என்னை, கபாலி படத்தில் வேறொரு புதிய கோணத்தில் ரசிகர்கள் எதிர்பார்க்கலாம் என்கிறார் தன்ஷிகா.



# இலங்கை அரசியலில் ...

ஸ்ரீவிக்கிரம இராசசிங்கனையும் அவனது மனைவிமார் குடும்பத்தினரையும், உறவினர்களையும் பிரிட்டிஷ் அரசு இந்தியாவிலுள்ள வேலூருக்கு தேசப்பிரஷ்டம் செய்தது. 1832 ஆம் ஆண்டு ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் வேலூரில் காலமானான்.

அந்தக் காலத்தில் கொழும்பு நகரில் செட்டிமார்களே செல்வாக்குள்ளவர்களாக இருந்தனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழரான குமாரசுவாமி முதலியாரின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைக் கண்ட கொழும்பு செட்டிமார் பொறாமை அடைந்தனர்.

அந்தக்காலத்தில் தலைநகரில் கிறீஸ்தவர் அல்லாத தமிழர்களின் தலைமைக்கான தேர்தல் 1830ஆம் ஆண்டில் நடைபெற இருந்தது. அந்த தேர்தலில் குமாரசுவாமி முதலியார் கலந்து கொள்ளக்கூடாது: அவ்வாறு கலந்து கொள்வதானால் அவரின் பூர்வீகம் விசாரிக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பினர்.

கொழும்புச் செட்டிமாரின் ஆட்சேபனைக்கிணங்க விசாரணை நடைபெற்றது. ஒல்லாந்தர்களின் ஆட்சிக்காலத்தின் 'தோம்பு'களை மையமாக வைத்தும், மற்றும் பிற சான்றுகளை மையமாக வைத்தும் ஆராயப்பட்டது. அந்த விசாரணையை அடுத்து குமார சுவாமி முதலியார் மற்றும் அவரது பரம்பரையினர் அப்பழுக்கற்றவர்கள் நல்ல மரபினர் என்று நிரூபணமாயிற்று.

உயர்கல்வி அறிவும் ஆற்றலும் கொண்ட குமார சுவாமி முதலியார் நடைபெற்ற தேர்தலில் பெரும் வெற்றி வாகை சூடினார். அன்றைய தேசாதிபதியான சேர் எட்வேட் பார்ண்ஸ், நடைபெற்ற தேர்தல் வெற்றியை அடுத்து "இத்தால் எல்லா மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் மதச்சார்பற்ற (அன்று கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கையற்றவர்களை அவ்வாறே பிரிட்டிஷார் குறிப்பிட்டனர்.) கொழும்புச் செட்டிமார்களின் தலைவர் ஆறுமுகநாதபிள்ளை குமாரசுவாமி முதலியாரேயாவர். எனவே இதை அங்கீகரித்து, அவரை மதித்து கீழ்ப்படிய வேண்டும் என்று 1830ஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி பிரகடனம் செய்தார்.

பிரிட்டிஷாரின் ஆட்சி ஆரம்பமான காலத்தில் இலங்கையில் மனிதர்களை மனிதர்கள் அடிமைகளாக வைத்திருந்த பழக்கம் நிலவி வந்தது. நிகழ்ந்த குத்துவெட்டு மதிப்பீட்டின்படி நாடுபூராவும் 28 ஆயிரம் கொத்தடிமைகள் இருந்தார்கள். அதில் 22ஆயிரம் கொத்தடிமைகள் யாழ்ப்பாணம், திருகோணமலைப் பிரதேசத்தில் இருந்தனர். இந்தக் கொத்தடிமைகள் அன்றைய காலத்தில் ஆடு மாடுகளைப்போல விற்கப்பட்டார்கள். ஆண் கொத்தடிமை ரூபா.17 இற்கும், பெண் கொத்தடிமை ரூபா.34 இற்கும் விலை போனதாக தஸ்தாவேஜீகள் மூலம் அறிய முடிகின்றது.

இந்தக் கொத்தடிமை முறையை நீக்க அன்றுள்ள தேசாதிபதி லெப்டினன்ட் கேர்ணல் பிரவுன்றிக் முயற்சி எடுத்தார். கொத்தடிமை முறையை இல்லாமல் செய்ய வேண்டுமென்று உழைத்த பிரமுகர்களில் குமாரசுவாமி முதலியாரும் இருந்தார் என்றும் 1853ம் ஆண்டில் வெளிவந்த இலங்கை சட்ட ஆவணங்கள் பதிப்பில் இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கையில் நிர்வாக அமைப்பை ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு இங்கிலாந்து நாட்டில் இருந்த காலனிகளுக்கான அமைச்சர் லெப்டினன்ட் கேர்ணல் டபிள்யூ.எம்.ஜி.கோல்புறூக், சார்ல்ஸ் ஹேய் கமரோன் ஆகிய இரு உறுப்பினர்கள் அடங்கிய ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அதன் பிரகாரம் இந்த ஆணைக்குழுவினர் 1829ஆம் ஆண்டு இலங்கை வந்து ஆராய்ந்து நாட்டின் நிர்வாகத்தை ஒருமைப்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்தார்கள். அதாவது அன்றுள்ள நிலையில் தமிழர் பிராந்தியங்கள் தனியான முறையிலும் சிங்கள கரையோரப் பகுதிகள் வேறு விதமாகவும் கண்டிப் பகுதி பிறிதோர் விதமாகவும் ஆட்சி நடாத்தப்பட்டு வந்தது. தமிழர்களின் தேச வளமையை மதித்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அதையடுத்து பிரிட்டிஷாரும் ஆட்சி நடாத்தி வந்தனர். தமிழர் பிரதேசம் இன்றுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்கள் மற்றும் அநுராதபுரம் உட்பட புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு வரை செறிந்திருந்தது.

இந்தக் கோல்புறூக் ஆணைக்குழுவினர் பிரிட்டிஷ் நிர்வாக வசதிக்கு ஏற்ற மாதிரி நிர்வாகத்தை ஒரு மையப்படுத்தி ஒரே சீரான நிர்வாக முறை அறிமுகப்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்தனர். இந்த சிபார்சுக்கு அமைய 1833ஆம் ஆண்டு இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்தியமாகாணம் என்பன. மேற்கு மாகாணத்துடன் பெரும் தொகையான தமிழர் நிலப்பரப்பு இணைக்கப்பட்டது. மேலும் 1845 ஆம் ஆண்டு வடமேல் மாகாணம் அமைக்கப்பட்டது. இந்த மாகாணம் அமைக்கப்பட்டவுடன் தழிழர் பிரதேசங்களான மதவாச்சி, அநுராதபுரம், ஹொரவபொத்தானை, செட்டிகுளம் போன்ற பகுதிகள் தமிழரின் பாரம்பரிய நிலப்பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டது. மேலும் 1873 ஆல் வடமத்திய மாகாணம் 1886ஆம் ஆண்டில் ஊவா மாகாணம் 1889 இல் சப்பிரகமுவா மாகாணம் ஆகியன அமைக்கப்பட்டு இறுதியில் நாடு 22 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட அதிபர்களிடம் நிர்வாக ஆட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டு, ஒருமுகப்படுத்தும் திட்டத்திற்கு கீழ் கொண்டு வரப்பட்டது.

மேலும் அதுவரை காலமும் தேசாதிபதிக்கு நிர்வாக நாட்டு விவகாரங்களை எடுத்து ஆலோசனை வழங்கவென்று ஓர் ஆலோசனை சபை அமைக்கப்பட்டிருந்தது. இந்த ஆலோசனை சபை உறுப்பினர்களை தேசாதிபதியே நியமிப்பார். எனவே அவர்களின் ஆலோசனைகளை அவர் கேட்க வேண்டும் என்ற நிர்பந்தம் இருக்கவில்லை.

கோல்புறூக் ஆணைக்குழுவின் பிறிதொரு சிபார்சினை அடுத்து நிரூபண சபை, சட்ட நிர்ருவாக சபை என இரண்டு சபைகள் அமைக்கப்பட்டன. நிரூபண சபையில் உயர் அதிகாரிகளே உறுப்பினர்களாக பதவி வழியில் நியமிக்கப்பட்டனர்.

சட்ட நிர்வாக சபையில் ஒன்பது பதவி வழி அரச உத்தியோகத்தர்களும் ஆறு உத்தியோகப்பற்றற்றவர்களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

உத்தியோகப்பற்றற்ற ஆறு உறுப்பினர்களில் மூன்று ஐரோப்பியர்கள் நியமனமானார்கள். அவர்கள் ஐரோப்பிய வர்த்தக சபை பெருந்தோட்ட சொந்தக்காரர்கள் அமைப்பு ஆகியவற்றின் சிபாரிசின் அடிப்படையில் சிபார்சு செய்யப்பட்டனர். மேலும் மூவர் இனரீதியில் நியமிக்கப்பட்டனர். இந்த சட்ட நிர்வாக சபைக்கு தேசாதிபதியே தலைமை வகித்தார். இங்கிலாந்திலிருந்த நாடாளுமன்ற விதிகளுக்கமைய இந்த நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

இலங்கை நாடாளுமன்ற ஆட்சிமுறைக்கு முன்னோடியாக இந்த சட்ட நிர்வாகசபை அமைந்தது. நாட்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் யாவுமே இந்த சபையில் ஆலோசிக்கப்பட்டே சட்டங்களாகின.

எனவே இந்த சட்ட நிர்வாக சபைக்கான உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களை அன்றைய தேசாதிபதியான சேர்வில் மட்ஹோட்டன் 1835 மே 30ஆம் திகதி நியமித்தார். குமாரசுவாமி முதலியார் முதன்முதலாக அமைக்கப்பட்ட சட்ட நிர்வாக சபையின் முதல் தமிழ் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பெருமையுடையவராவார்.

குமாரசுவாமி முதலியார் மானிப்பாயில் வசித்த வைரவநாத முதலியாரின் மகளான விசாலாட்சி அம்மையை மணந்து கொழும்பில் 'அம்மைத் தோட்டத்தில்' வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு ஓர் ஆணும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். ஆண் குழந்தையின் பெயர் முத்துக்குமாரசுவாமி. இவரே முதன்முதலாக இலங்கையில் பரிஸ்டர் பட்டம் படித்துப் பெற்றவராவார். மேலும் இங்கிலாந்தில் அன்றைய காலத்தில் ஆங்கிலேயரும் யூதர்களும் மட்டுமே பரிஸ்டர் பட்டத்துக்கு படிக்க அனுமதி பெற்றனர். இந்த விதியை எதிர்த்துப் போராடி மாற்றி பரிஸ்டர் பட்டம் வாங்கிய முதல் ஆசியரும் இவரே. 1862ஆம் ஆண்டில் இவர் இவரது மாமனாரான எதிர்மன்ன சிங்க முதலியாரை அடுத்து சட்ட நிர்வாக சபையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அன்றைய இங்கிலாந்து மகாராணியான விக்டோரியா மகாராணியாரின் நட்புக்கும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார். 'சேர்' பட்டம் இவரை நாடி வந்தது.

குமாரசுவாமி முதலியாரின் மகள் செல்லாட்சி அம்மை பொன்னம்பல முதலியாரை திருமணம் செய்தார். இவர்களுக்கு மூன்று சிங்கங்கள் பிள்ளைகளாகப் பிறந்தனர். அவர்கள் சேர் பொன்னம்பலம் குமாரசுவாமி முதலியார். சேர் பொன்னம்பலம் இராமநாதன். சேர் பொன்னம்பலம் அருணாசலம்.

குமாரசுவாமி முதலியார் முதலியாரின் குடும்பம் தமிழர்களின் நல்வாழ்வுக்கும் பெருமைக்கும் என்றே தமது வாழ்க்கையை அர்ப்பணித்த குடும்பம் என்றால் மிகையாகாது.

குமாரசுவாமி முதலியார் 1836 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அவரது 52ஆவது வயதில் காலமானார்.

தமிழர் பண்பாடு பாரம்பரியம் இந்து சமய வழி முறைகள் பிறழாது வாழ்ந்த பெரியார் இவர். இவரை அடுத்து புத்தளம் கல்பிட்டியைச் சேர்ந்த தமிழ் அறிஞரும் கல்விமானும் வழக் கறிஞருமான சைமன் காசிச் செட்டி முதலியார் 1838-1846 ஆம் ஆண்டு வரை தமிழர் பிரதிநிதியாக சட்ட நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டார்.

# கடுப்பாயிட்டேன்...

வீடும் துவங்கும். 'நாராயணா எனும் பாராயணம் எண்டு சீர்காழி அடிஎடுக்க, 'டங்கமாா ஊதாாரி' எண்டு பக்கத்து வீட்டு பெட்டி ஸ்பீக்கர் குழறும். முன்வளவு மாஸ்டர் மற்ஸ் ரியூசனுக்கு வந்த பிள்ளையள வச்சுக்கொண்டு முழியப் பிரட்ட, மூண்டாவது காணிக் கால' நானு முந்தன் உறவை... நாடி வந்த பறவை...' எண்டு இவங்களுக்கிடையில் மோதி.... எங்கட காதுக்குள்ள புயலடிக்கிற மாதிரி புதுப்புது கலவரத்தை மூட்டி கடவுள் தான் காப்பாத்த வேணும்.

'கடவுளே... இதுகள ஊமையாக்கு இல்லாட்டி என்ர உலக சமாதானத்துக்காக இப்பதான் ரெண்டு மூண்டு நாளைக்கு முன்னால ரெண்டு அமைப்புக்கள் கோயில் நிர்வாகத்தோட சேர்ந்து நிகழ்ச்சி செய்தவை. சமாதானம் எண்டு சொல்லி தன்னட்ட வாரம் பறந்து கொண்டிருந்த புறாக்களைப் பிடிச்சு அடைச்சு வச்சிட்டு, நிகழ்ச்சியில திறந்து விடுகிறது வழக்கம். இஞ்ச வந்தவையெல்லாம் பூசை நடந்த கோயில்ல புதிசா விளக்கேத்தி சமாதானத்தை நிலைநாட்டிச்சினம்.

இப்பிடி அரசியல்வாதியளும் சனம் என்னத்துக்கோ கூடி நிக்க அதுக்குள்ள கொண்டுவந்து விளக்க கொழுத்தி சமாதானத்தை ஏற்படுத்திச்சினம். சாமிபாவம்.

ஒருவர் வெளிநாட்டிலிருந்து தன்ர ஊர் பிள்ளையார் கோவிலுக்கு இருபத்தையாயிரம் நன்கொடை அனுப்பியிருந்தார். அதை லவுஸ்பீக்கரில ஒருவர் வாசித்தளித்தார். அதாவது

'திருவாளர்.... பிரான்சிலிருந்து ரூபா இருபத்தையாயிரம் அனுப்பியுள்ளார். அன்னாருக்கு பிள்ளையார் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைவிடுங்க, எங்கட அயல் கோயில்ல ஆறாம் திருவிழாவில அன்ன வாகனம். இப்ப நாளுக்கொரு வாகனத்தில சாமி வாறதுதான் பாஷனுங்கோ. அதுக்கு வரலாற்று ஆதாரமெல்லாம் தோடதையுங்கே கதையோட கதை நான் சொல்ல வந்ததை விட்டிட்டன் சுவாமி அன்ன வாகனத்தில் வெளிவீதி புறப்பட்டிட்டார். தெற்கு மூலை திரும்ப ஒரு அம்மையார் என்ர முதுகில தட்டி 'வாகனம் எப்பிடி? நல்லாயிருக்கோ?' எண்டா.. ஆரையா வாகனத்தைப் பார்த்து சாமியையும் ஐயரையும் மேளத்தையுந் தானே காணுறது. 'ம்... நல்லாயிருக்கு எண்டான். 'நாங்கதான் செய்துகுடுத்தது. எங்கட காசில....' என்டா சுவாமி ஆர் எண்டா செல்வத்துக்கே அதிபதியான லட்சுமிக்கு அதிபதி. ஸ்ரீமன் நாராயணன். அவனுக்கே........... நான்தான் வாகனங் குடுத்தன். எண்ட அம்மையார் சுவாமி இறக்கினாப்பிறகு கௌரவிக்கப்படுறார். ஐயா, குருக்கள் ஐயா, நாராயணாப் பெருமானுக்கு வாகனம் அளித்த... அம்மையார் குடும்பத்துடன் நலமுடன் வாழ ஆசீர்வதித்து கௌரவிப்பதுடன் அவருக்கு ஆலயத்தின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.' ஏதோ தட்டில பெரிய பூமாலை வச்சு மேளதாளத்தோட அவா கோயிலை சுத்தி வந்து அனைவரும் அறிய நிண்டா....

ச்சை...... நாங்கள் பேந்தேன் கோயிலுக்கு வாறம். கோயிலுக்கே சாமிக்கே கொடுக்கிற சக்தியுள்ளயைட்ட போய் எங்கட குறையள சொல்லலாமே..

ஆன்மீக அறிவு எண்டது பூச்சியத்தில நிக்குது. ஆடம்பரம் படாடோபம், ஆரவாரம் பணச்செருக்கு, போட்டி, எண்டதெல்லாம் கோயிலுகள்ள முன்னுக்கு நிக்குது. இன்னும் கோயில்கள் எல்லாத்திலும் குடும்ப ஆதிக்கமும் சாதி எதிர்ப்பும் விலகயில்ல. 'தேரில எளிய சாதி வடத்தை தொட்டிட்டான்' என்று ஒளி பெருக்கியில் கத்தினவனும், தொட்டவனை ரத்தம் பெருக அடிச்சவனும் ரெண்டு வருசத்துக்கு முதல் நாங்க பாத்த சம்பவம்.

கடவுள்களை கோயிலுக்க பூட்டாத ஊருகள் இன்னும் இருக்கு அங்கயெல்லாம் கோயில் திருவிழா எண்டா அது ஒவ்வொரு வீட்டுக்கும் திருவிழாதான். புத்தாடை அணியவும், தூர இருந்த குல தெய்வ வழிபாட்டுக்கு வரும் உறவினரை வரவேற்கவும் விருந்து கொண்டாடவும், புதிய சம்பந்தக்கலப்புக்களும் என்று கோலகலமாக உள்ளது.

எல்லா வீதிகளும் சுவாமியை வரவேற்க சுத்தமாக்கப்படுகிறதும் எல்லா கடவைகளும் தோரணங்கள் ஏறுவதும் இப்பவும் நடக்குது. பொறுங்கோ, சுதா கூப்பிடுறாள்.

'அம்மம்மா கோயிலுக்கு வெளிக்கிடேல்லயே.'

'போகத்தான் வேணும். சமைச்சிட்டு வாறன்'

'இண்டைக்கு கதிரவேலு கடைக்காறற்ற பூசைதானே' 'அதுக்கு....'

'அன்னதானம் நல்லாயிருக்கும் வடை பாயசமாம்..'

'அவன்ர பாவத்தை துலைக்க, அவன் அன்னதானங் குடுக்கிறான். நான் இருக்கிற துன்பங் காணாம... அதில பங்கு வாங்கிக் கொண்டரவே. விசரி நான் சமைச்சிட்டு வாறன்'

'அப் அன்னதானம் பிழையே'

'பசித்தவனுக்கு உணவு கொடுக்கிறது பிழையில்ல. இது புளிச்சல் ஏவறைக்காரருக்கு... ஏன்? கடுப்பேத்தாம போ.'

# மலரே வருக!

தினமொரு செய்தியென ஒரு மலரால் தொடுத்த
வாரமலர் மாலையாய் வரும் தினச்செய்தியே வருக!
பனையோடு தோன்றி யாழ் நகரின் பெருமையாய்
அனைத்துலகெங்கும் இணையத்தில் வலம் வந்தாய்



மக்களெல்லாம் உனை அணைத்ததனால் – இனி
மனைகள் தோறும் மலராய் தவழ்ந்திடுவாய்
தனங் கொண்ட மனிதர் சிந்தையில் உதித்தே – அவர்
மனங்கொண்ட மாமகளாய் பிரசவித்தாய்

இனங்கொண்ட தமிழினத்தின் இனிய இதழாய் – நீ
சினங்கொண்டோர் இதயங்கள் இனிமைபெற வருக!
கனங்கொண்ட இதழாய் கனிவுடன் வருக!
தினைகாத்த வள்ளிமணாளன் அருள்பெற்று வருக! வருக!

மோகன் உருவில்

# வெற்றி !

ஆசையின்றி வாழ்ந்தால்
இலட்சியத்தில் வெற்றி காண்பாய்
பொறாமையற்று வாழ்ந்தால் – நீ
பொறுமையை பெற்றிடுவாய்
இவற்றையெல்லாம் கடைப்பிடித்தால்
வெற்றியோடு நீ திகழ்ந்திடுவாய்
வெற்றியை நீ பெற்றிடவே
முயற்சி உனக்குத் தேவைதானே
முயற்சியின் பயனாலே
எழுந்ததுதான் இந்தக் கவிதையல்லோ!

– சாமி
உரும்பிராய்.


# எனக்கான...



உன் கண்களில்
எனக்கான விடியலைக் கண்டேன்
உன் வார்த்தையில்
எனக்கான வாழ்க்கையைக் கண்டேன்
உன் வருகையில்
எனக்கான வசந்தத்தைக் கண்டேன்
உன் மௌனத்தில்
எனக்கான கவிதையை கண்டேன்
உன் செய்கையில் இன்று – நான்
எனக்கான கல்லறையைக் கண்டேன்.

– ஜெனா
நீர்வேலி.

# கவிதை முற்றம்



## உருக்குலைந்த குழந்தை அவள்...


துள்ளி விளையாடும் குழந்தையைக் கண்டவுடன்
தன் துயர் மறக்கும் அன்னையர்கள் – இன்று
தன் கருவில் உருவாகும் பெண் குழந்தையை
பெற்றிட மறுப்பது ஏன் தானோ ...?

கள்ளமில்லா பாலகர்கள்
வாஞ்சையின்றி அனைவரையும்
நம்புவதன் பயன்தானா? – இந்த
பாலியல் வன்புணர்வு ...!

கண் இமைக்கும் நேரத்திலே
கயவர்களின் கொடூர இச்சைக்கு
இரையாகும் குழந்தைகள் – தான்
எத்தனை எத்தனை ...?

பாதகனின் செயலாலே
உருக்குலைந்த குழந்தையவள்
தன் உயிரை நீத்ததனால்
ஊமையாய் போனது பெண் குலமல்லவோ....?

– சுகுணா
யாழ்ப்பாணம்.



## மறக்க முடியவில்லை

இதயத்தில் அன்பு
வைத்தால் நான் – உன்னை
மறந்து விடத் தயார்
ஆனால்! உன் அன்பு தான்
என் இதயம் என்றால்
எப்படி உன்னை
மறந்துவிட முடியும்
சொல்லிவிடு...

– கவி –
தெல்லிப்பழை.

## இப்படியும் ஒரு வாழ்க்கை

நண்பனுடன் சிறிது நேரம் கதைப்பு
தோழியுடன் நலம் விசாரிப்பு
அவ்வப்போது கண்டவர்களுடன் சிலாகிப்பு
புன்னகையுடன் யாரோ சிலரிடம் ரசிப்பு
இப்படியே முழுதாய் அரைநாள் முடிந்திருந்தது.

விரல்கள் ஒவ்வொன்றாய் எண்ணி
முகம் கொள்ளாப் பூரிப்புடன் பேச எத்தனிக்கையில்
வேறு ஒரு தொலைதூர அழைப்பு..
எல்லோரையும் அரவணைத்து
பேசிக் கலந்து நீ முடிக்கும்போது
என் விரல்களின் நுனிகளில் எஞ்சியிருந்த
ஈரம் உலரவேயில்லை,
எனக்கென நீ ஒதுக்கிய ஒருநாள் தொடங்கவுமில்லை,


ஆயினும் – அந்தக் குறிஞ்சிப்பூ தினம் முடிந்து
உன் பயணத்துக்கான பேருந்து காத்திருந்தது
இன்று முழுக்க நீ காணாத என் விழிகளுக்குள்ளும்
ஒரு கேள்வி தொக்கியிருந்தது,

அந்தப் பேருந்தின் இந்தப் பயணத்தில்
எப்போதும் நிரம்பியிருக்கும்
உன் அலைபேசிக் கோப்பையை மீறி
என் எந்த நினைவுகளை நீ எடுத்துச் செல்கிறாய்?
என் நாட்குறிப்பில் வழக்கம்போல்
உன் மௌனத்தையும் கைபேசியையும்
நான் வரைந்துவைக்கிறேன்!

– அழுதா முருகேசன்

# இடிபாடுகளில் இருந்து

கவிதையின் வரிகளுக்கு இடையே
வெடிகுண்டு ஒன்றை வையுங்கள்
அவை வெடித்துச் சிதறட்டும்,
அந்த அதிர்வலைகளுக்கு இடையில்
கவிதையை
தொடர்ந்து எழுதுங்கள்
அந்தக் கவிதைக்குத் தேவையானவை அனைத்தும்
அந்த இடிபாடுகளில் இருந்தே கிளர்ந்து எழும்...



– கார்லோஷ் காஷரெங்

கவிஞரும் போராளியுமான கார்லோஷ் காஷரெங் குவாதமாலாவைச் சேர்ந்தவர். இவர் கொடுங்கோன்மைக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடியவர். இவரது கவிதைகள் சமூக அநீதிக்கு எதிராகப் போராடும் அனைவருக்கும் ஊக்கு சக்தியாகத் திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# குட்டீஸ் பக்கம்



# அம்மா


கடவுளின்
திருவுருவாய்
கன்னியவள்
திருமண பந்த
தேவதையாய்
துணைவனைக்
கண்ட பார்வதி
யாய் சிவனாக
வந்தகணவனுக்கு
என்னை
முத்தாக
முத்தமிட்டு
பத்து மாதம் சுமந்து
பெற்றெடுத்தவளே...
பாலாற்றில் நீராட விட்டு,
தேனாற்றில்
தேகம் தடவி,
பால் வர
நெல் தடவி,
இரத்தத்தை
பாலாக்கி
பருக
வைத்தவளே.
நிலவைக்
காட்டி
உணவூட்டி
தேய்ந்து
போக
நானழுவேன்
நீ கூறும்
பதிலில் தேய்ந்த நிலவை
உன் முகத்தில் கண்டேன்.
கண்ணீர்
துடைக்க காகிதமாய்
வருவாய்,
நித்திரை
கொள்ள
தாலாட்டாய்
வந்தாய்
அழுகையை
நிறுத்த
அன்பாய்
வந்தாய்
சிரிக்க வைக்க
நீயே
வந்தாய்.
நான் பாடும்
பாடல்
எல்லாம்
உனக்காக
பாடிடுவேன்
‘அன்பென்றாலே
அம்மா என்
தாய் போல்
ஆகிடுமா”
என நான்
பாட
கைகட்டி
அரவணைத்
தவளே.
உனை
தினம்
பாடுகிறேன்
உனக்காகவே
வாழ்கிறேன்.



செல்வி.சி.லாதுசா
தரம் - 08
அச்சுவேலி மத்திய கல்லூரி

# சூரியன்

எமக்கு வெயிலை கொட்டும்
சூரியனே
ஆனால் நன்மையையும்
தருவாய் தீமையையும்
தருவாய்




உன்னை நான் எப்படி
சொல்வது
தாவரங்களை வாட
வைப்பதும் நீயே
தாவரங்களை வளர
வைப்பதும் நீயே
நீரை உறிஞ்சுவதும் நீயே
நீரை தருவதும் நீயே
நான் உன்னை பார்க்க
ஆசை - ஆனால்
உன் அருகே வந்தால்
இறந்து விடுவேன்
நீ என் அருகில் வந்தால்
இவ் உலகமே மறைந்து
விடும்
நீ இல்லை என்றாலும்
இவ் உலகம் இருக்கிறது
நீ மிகவும் கறுப்பானவன்
- ஆனால்
உன்னில் நிறைந்த
வெப்பம் உண்டு
நீ வரட்சியையும் தருவாய்
நீ மழையையும் தருவாய்
நீ இவ்வுலகில் இல்லா
விட்டால்
இவ்வுலகமே இருண்டு
விடும்.



செல்வி.இ.நிருஜா
தரம் – 07
யாழ்.இந்துக் மகளீர் கல்லூரி

# வாரமொரு குறள்



அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி
பகவன் முதற்றே உலகு.

விளக்கம்

அகர எழுத்துகளுக்கு முதன்மை, ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

# வானவில்

வானிலே பெரிய
வீதியை
போட்டது போல்
ஏழு நிறங்களாக
காட்சியளிந்து
பார்ப்பவர் மனதில்
பெரிய வீதியை
போடுகின்றாய்
எப்போதும்
தோன்றுவதில்லை
- நீ
மழை வந்தால்
மட்டும் ஏன்
மெல்ல எட்டி
பார்க்கின்றாய்
இந்த பாரினிலே.
ஒரு போதும்
பிரியாமல்
காட்சியளிப்பாய்
உனை
பார்த்தவுடன்
பார்க்க வேண்டும்
என தோணுதடி.
நீ வந்து வந்து
போக அந்த
அலைகளினைப்
போல
மழை வந்தவுடன்
வந்திடுவாய்
கவிதையைப்
போல
மழை வரும்
போது
சினமாக இருக்கும்
நீ வந்தவுடன்
சினமே போகும்
அம்மா.
நீ வந்தவுடன்
வானத்திற்கு
பொட்டு வைத்தாற்
போல்
ஆகுதம்மா. நீ
போன பின்
வானமே விடிய
வில்லை அம்மா.
நீ வந்தபின்
வானமே
வட்டமாகுதே
நீ வந்தபின்
வானமே
வந்து போகுதம்மா.

செல்வி.வி.சுலக்சியா (தரம் – 08)
திருக்குடும்ப கன்னியர்மடம் அச்சுவேலி.

# பொறுமை

பல வருடங்களுக்கு முன் ஒரு நாட்டில் மிகப்பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் எல்லோரும் பட்டினியால் வாடினார்கள். சிறியவர்கள் எல்லாம் மிகவும் துன்பமான வாழ்வைச் சந்தித்தார்கள். இதே நேரம் அந்த நாட்டில் ஒரு செல்வந்தர் வாழ்ந்தார்.இவர் ஏழைகள் மீது மிகவும் இரக்கமுடையவர். சிறுவர்கள் கஷ்டமடைவதைக் கண்டு அவர் மனம் உருகினார். சிறுவர்கள் எல்லோரையும் ஒருநாள் தனது வீட்டிற்கு அழைத்தார். தனது சேவகர்களைக் கொண்டு மோதகம் செய்து ஒரு கூடையில் அவர்கள் முன் கொண்டு சென்று வைக்கச் சொன்னார். சேவகர்களும் பிரபுவின் சொல்லிற்கு ஏற்ப அவர்களும் மோதகங்களை கூடைக்குள் வைத்து அவர்கள் முன்கொண்டு சென்று வைத்தனர். வைத்ததுதான் தாமதம் பெரிய மோதகங்களை எல்லாச் சிறுவர்களும் எடுத்து விட்டார்கள்.



ஒரு மோதகம் மட்டும் தான் இருந்தது. ஒருசிறுமி மட்டும் தான் மோதகம் எடுக்காமல் நின்றாள். இறுதியாக இருந்த சிறிய மோதகத்தை எடுத்துச் சென்றாள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் நடந்தது. இதை ஒவ்வொரு நாளும் பிரபு கவனித்தார் ஒருநாள் இவ்வாறு நடந்தது. அவள் மோதகத்தைக் கொண்டு சென்று தனது தாயாரிடம் கொடுத்தாள். தாயார் மோதகத்தைப் பிரித்த போது அதற்குள் தங்க மோதிரம் இருந்தது. அதை எடுத்துச் சென்று கிரிசாம்பாள் பிரபுவிடம் கொடுத்தாள். பிரபு சிரித்து விட்டு இது நான் உனது பொறுமைக்கு கொடுத்த பரிசு எனக் கூறினார். கிரிசாம்பாள் சந்தோசமாக அதை எடுத்துச் சென்றாள். அத்துடன் பிரபுவிற்கும் நன்றி செலுத்தினாள் பொறுமைக்கு உதாரணமாக விளங்கியவள் கிரிசாம்பாள்.
“பொறுத்தார்பூமியாழ்வார்”

செல்வி.இ.நேமிகா (தரம் – 07)
புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

# உங்களுக்குத் தெரியுமா?

01. உலகின் மிகப் பெரிய கண்டம் - **ஆசியாக் கண்டம்**
02. உலகில் தீபகற்பம் என அழைக்கப்படும் கண்டம் - **ஐரோப்பா கண்டம்**
03. உலகின் மிகச் சிறிய கண்டம் - **அவுஸ்ரேலியாக் கண்டம்**
04. இதுவரை மனிதர்கள் குடியேறி வாழாத கண்டம் - **அந்தாட்டிக்கா கண்டம்**
05. எக்ஸிமோவர் வசிக்கும் கண்டம் - **ஆட்டிக் கண்டம்**
06. உலகின் மிகப் பெரிய சமுத்திரம் - **பசுபிக் சமுத்திரம்**
07. உலகின் மிகப் பெரிய நாடு - **ரஷ்யா**
08. உலகின் முகடு என அழைக்கப்படுவது - **எவரெஸ்ட் சிகரம்**
09. உலகின் மிக ஆழமான ஆழி - **மரியான ஆழி**
10. மணல் காணப்படாத பாலைவனம் - **தார்ப்பாலைவனம்**
11. பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்? - **அடம் ஸ்மித்**
12 ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு? - **ஜப்பான்**

செல்வன்.ப.கவிதாசன் – தரம் – 09 (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

# கருவேலம் மரத்தை அடியோடு ஒழிப்போம்

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வந்தவேளை வட பகுதியில் தமது தற்பாதுகாப்பிற்காக விதையிட்டு வளர்த்த கருவேலம் எனும் மரம், இன்று வேளாண் நிலங்களையும், பிற தாவரங்களையும் நாசமாக்குவதுடன், மனித வாழ்வுக்கும் உகந்தது அல்லவென்பது நிருபணமாகியுள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படையினரால் விதைக்கப்பட்ட கருவேலம், பார்த்தீனியம் என்பன இன்று வடபகுதியில் இல்லாத இடமே இல்லை எனும் அளவிற்கு பல்கிப்பெருகியுள்ளன. இவை மனிதனின் சுவாசத்திற்கு முற்றுமுழுதாக ஒவ்வாமையை ஏற்படுத்தும் ஒன்றாகவே மாறியுள்ளன.

குறிப்பாக வடக்கின் பல பகுதிகளிலும் பார்த்தீனியம் பல்கிப் பெருகியுள்ளதுடன், கோப்பாய் சந்தி, கேரதீவு, பூநகரி, மன்னார் செல்லும் ஏ-32 வீதியின் இருமருங்கிலும் கருவேல மரங்கள் காணப்படுகின்றன.

ஏற்கனவே, பார்த்தீனியம் விவசாய நிலங்களில் தாராளமாக வளர்ந்துள்ளதை அவதானிக்கும் அதேவேளை, கருவேல மரங்களும் விரைவில் ஆக்கிரமிக்கும் என்பதில் ஐயமில்லை.

பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஓரளவு இருந்தாலும், அதன் வளர்ச்சி வேகத்தால் அதனைக் கட்டுப்படுத்துவதென்பது இயலாத காரியமாகவே உள்ளது. ஆனால் கருவேலம் மரம் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லை என்றே கூறவேண்டும்.

எத்தனை வறண்ட பூமியிலும் சுமார் 12 மீற்றர் உயரம் வரை வளர்ந்து நிலைத்து நிற்கும் தன்மை



கொண்டது இந்த மரம். அமெரிக்க அரிசோனா மாகாணத்தில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் இம்மரத்தின் வேர் நீருக்காக 175 அடிவரை பூமியில் சென்றுள்ளமை கண்டறியப்பட்டது.

கடுமையான வறட்சியான காலப்பகுதியிலும், நிலத்தடி நீரை உறிஞ்சி தனது இலைகளையும் வளரவிடாமல் பார்த்துக் கொள்கிறது. சுயநலமுடைய கருவேலமரம் நிலத்தடி நீரை



தேவையான அளவிற்கு உறிஞ்சிவிடுவதனால் பூமி தானாகவே வறட்சியை எதிர்கொள்கிறது.

ஓட்சிசனை மிகக்குறைந்த அளவில் உற்பத்தி செய்யும் இம்மரங்கள் கரியமில வாயுவை அதிகளவில் வெளிவிடுகின்றன. இதனால் காற்று மண்டலம் மாசடைகின்றது. இவை மாசுபடுத்துகின்றன என்பதை விடவும் நச்சுத்தன்மைக்கு மாற்றமடைகின்றது என்பதே உண்மையாகும். எனவே, காற்றை மாசுபடுத்தும் தன்மை இந்த கருவேல மரங்களுக்கு உண்டு. இவை அனைத்தும் அறிவியல் ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட்ட தகவலாகும்.

அத்துடன் இம்மரங்களின் சல்லிவேர்கள் மழைநீரைப் பூமிக்குள் செலுத்தாமல் பூமியின் மேற்பரப்பிலேயே தேங்க வைத்துவிடுகின்றன. எனவே, இம்மரங்கள் வளர்ந்துள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்வளம் இருப்பதில்லை.

அமெரிக்க தாவரவியல் பூங்கா வளரக்கூடாத நஞ்சு மரங்கள் என ஒரு தனிப்பட்டியலையே வெளியிட்டுள்ளது. அதில் முன்னிலையிலிருப்பது இந்த கருவேலம் என்ற விஷமரம் தான்.

இம்மரங்களின் இலைகள் காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி பசுமையாக வளரக்கூடியவை. அந்தவகையில் இம்மரங்கள் காற்றின் நலனுக்கும், தட்பவெப்ப நிலைக்கும் கேடு விளைவிக்கின்றன. நிலத்தடி நீரை உறிஞ்சும் கருவேல மரங்களின் தாகம் அத்துடன் நின்று விடுவதில்லை. தன்னைச்சுற்றி தழுவவரும் காற்றிலுள்ள ஈரப்பதத்தையும் உறிஞ்சி விடுகின்றன. இதனால் வறட்சி என்பது தவிர்க்க முடியாததாகவும், நிலையானதாகவும் மாறிவிடுகின்றது.

அத்துடன் இந்த மரத்தின் இலை, காய், விதை என எதுவுமே எந்த உயிரினத்திற்கும் பயன்படாது என்ற விடயம் ஆச்சரியமாக இருந்தாலும் அது தான் உண்மை. இந்த மரத்தில் கால்நடைகளைக் கட்டிவைத்து வளர்த்தால் அவை மலடாகி விடும் என்பதுடன், சினை பிடிக்காமலேயே போகும் சாத்தியமும் உள்ளன. அதையும் மீறி கன்று ஈன்றாலும், அதுவும் ஊனத்துடன் தான் பிறக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இம்மரங்களில் பறவை இனங்கள் வாழ்வதற்கான எவ்விதமான சாத்தியப்பாடுகளும் இல்லை. ஏனெனில் பறவைகளுக்குத் தேவையான பழங்களோ, குளிர்ச்சியான விரிந்த இலைகளோ இல்லை. அத்துடன் கூர்மை மிக்க அடர்த்தியான முட்கள் உள்ளதனால் எந்தப்பறவையும் இம்மரங்களில் கூடுகட்டி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வதில்லை. இம்மரங்கள் அடர்ந்து பரந்து வளர்வதனால் பறவைகளின் வாழ்விடங்கள் சுருங்கி வருகின்றன. நீர்நிலைகளிலும் இம்மரங்கள் வளர்வதனால், நீர்ப்பறவைகள் இம்மரங்களில் மாட்டிக்கொண்டு உயிரிழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

குளங்கள், ஆறுகளில் இம்மரங்களின் இலைகள் உதிர்வதனால் அந்நீர்நிலைகள் மஞ்சள் நிறமடைந்து விஷத்தன்மையடைகின்றன. எனவே மீன்கள், தவளைகள் உட்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்வதுடன் அத்தகைய நீர் நிலைகளிலிருந்தும் அவை வெளியேறுகின்றன.

இந்த மரங்கள் உள்ள இடங்களில் வாழும் மனிதர்களின் மனதை மாற்றி இந்தமரம் அவர்களுக்கு வன்முறை எண்ணத்தைக் கொடுக்குமென ஆராய்ச்சியாளர்களும் கண்டுபிடித்துள்ளனர்.

உலகமே ஒட்டுமொத்தமாக வெப்பமயமாதல் (குளோபல் வோர்மிங்) குறித்து அச்சமடைந்து இருக்கும் இன்றைய நிலையில் மரங்களை நடுங்கள் என்ற கோஷம்தான் எங்கும் கேட்கிறது. ஆனால் மரங்களை வெட்டுங்கள் என்று கூறுவது முரணாகவே உள்ளது. கருவேலம் மரத்தை வெட்டி அகற்றினால் தான் மண்ணின் மாண்பைக் காப்பாற்றமுடியும் என்பதே விஞ்ஞானிகள் எமக்கு கொடுக்கும் எச்சரிக்கையாகும். இந்த வகையில் மரங்களை வளர்ப்போம் என்ற கோஷத்தில் கருவேலம் மரங்களை அகற்றுவோம் என்ற கோஷம் இணைக்கப்பட வேண்டும்.

எனவே, வடக்கில் பல்கிப்பெருகியுள்ள கருவேலம் மரங்களை இனம்கண்டு அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கையை அரசு துரிதமாக மேற்கொள்ளவேண்டும். இதற்காக விசேட குழுக்களை அமைத்து செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

இதன் மூலம் எமது மக்களையும், வேளாண் நிலங்களையும், பிற வாழ்வாதாரங்களையும் கொடிய அரக்கனான கருவேலம் மரத்திலிருந்து பாதுகாக்கமுடியும்.

ஆசிரியர்

# சலரோக நோயாளிகளின் பாதங்களைப் பாதுகாப்போம்

உள நலம்

சலரோகம் (Diabetes mellitus) இன்று எமது சமுதாயத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வளர்ந்தவர்களில் 10 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் இந்நோயினால் பாதிக்கப் படுள்ளார்கள். வருங்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம்.

சலரோகமானது முறையாகச் சிகிச்சை பெறப்படாது விட்டால் உடலிலுள்ள எல்லா உறுப்புக்களையும் பாதிக்கக்கூடியது. கண்கள், மூளை, இருதயம், ஈரல், சிறுநீரகங்கள், பாதங்கள் என இப்பட்டியல் நீண்டு செல்கின்றது.

சலரோகத்தினால் பாதங்களில் ஏற்படும் பாதிப்புக்களானவை பாரதூரமானவை. இதனால் சத்திரசிகிச்சை மூலம் கால்களை அகற்றவேண்டி ஏற்படலாம் (Amputatron) விபத்துக்களால் அல்லாத Amputatron இதற்கான பிரதான காரணம் சலரோகம் ஆகும்.

### சலரோகமானது எவ்வாறு பாதங்களைப் பாதிக்கின்றது?

இது மூன்று வகையான தாக்கங்களினால் ஏற்படுகின்றது.

1. காலிலுள்ள நரம்புகள் பாதிப்படைவதால் காலில் உணர்ச்சி குறைவாக இருக்கும். இதனால் சிறுகாயங்கள் ஏற்பட்டால் நோயாளிக்குத் தெரியாது. அது மட்டுமல்லாது நரம்புத் தாக்கத்தினால் காலிலுள்ள தசைகள் பலவீனமடைவதால் காலின் வடிவமைப்பு மாறுபடுகின்றது. இதனால் காலின் குதி, பெருவிரலின் அடிப்பகுதி, போன்ற இடங்களில் அதிக அழுத்தம் ஏற்பட்டு புண்கள் ஏற்படுகின்றன. இதைவிட காலிலுள்ள ஈரலிப்பு மற்றும் எண்ணைத் தன்மை குறைவடைவதால் தோல் வரண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டு கிருமித்தொற்று ஏற்படுகின்றது.

2. சலரோக நோயாளிகளின் கால்களிலுள்ள இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோல் அடைப்பு ஏற்படுகின்றது. இதனால் காலிற்குச் செல்லும் இரத்தோட்டம் குறைவடைவதால் இலகுவில் புண்கள் ஏற்படுகின்றன. அத்துடன் காயங்கள் சீக்கிரத்தில் ஆறுவதில்லை.

3. சலரோக நோயாளிக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைகிறது அத்துடன் அதிக குளுக்கோஸ் நோய்கிருமிகள் பெற ஏதுவாகிறது. இதனால் காலில் கிருமித் தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும்.

### சலரோக நோயாளியின் காலில் உள்ள பாதிப்புக்களை இனம் காண்பது எவ்வாறு?

சலரோக நோயாளிகள் குறிப்பாக காலில் நரம்புத்தாக்கம் உள்ளவர்கள் தினமும் தமது கால்களை காயங்கள், ஆணிக்கூர் என்பன உள்ளதா எனப்பரிசோதிக்க வேண்டும். கண்பார்வைக் குறைபாடுடையவர்கள் வீட்டிலுள்ள உறவினர்களைக் கொண்டு தமது கால்களைப் பரிசோதிக்க வேண்டும்.

காலில் எரிச்சல், விறைப்புத் தன்மை, கரண்ட அடிப்பது போன்ற நோ, என்பவை இருந்தால் அது கால்களில் சலரோகத்தினால் ஏற்படும் நரம்புத்தாக்கமாக இருக்கலாம் இது பற்றி உனடியாக வைத்தியரிடம் கலந்தாலோசிக்கவும்.

கால்களில் ஆணிக்கூர் (calosity) காயங்கள், புண்கள், வெடிப்புக்கள், பூஞ்சணம் (Fungus) போன்ற பாதிப்புக்கள் தோன்றினால் காலந்தாழ்த்தாது வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொள்வது சிறந்தது.



வருடத்திற்கு ஒரு முறையாவது வைத்தியரைக் கொண்டு கால்களைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

### சலரோக நோயாளிகள் கால்களைப்பராமரிப்பது எவ்வாறு?

முன்னர் குறிப்பிட்டதுபோல் தினமும் இரவில் படுக்கும்முன் பாதங்களை பரிசோதியுங்கள் அடிப்பாதங்களை கண்ணாடியின் உதவியுடன் பார்க்கலாம்.

கால்களில் ஏற்படும் வறட்சித் தன்மை வெடிப்புக்கள் ஏற்பட்டு கிரு மித்தொற்று ஏற்பட ஏதுவாகின்றது.

இதனைத்தடுப்பதற்கு கால்களின் மேற்புறத்தில் நல்லெண்ணெய் போன்ற எண்ணெய் ஈரலிப்பைத் தரும் Aquoas cream, emoderm என்பவற்றைத் தடவலாம். ஆனால் எண்ணெயையோ , கிறீமையோ கால்விரல்களுக்கிடையில் தடவக்கூடாது. இதனால் Fungus தாக்கம் ஏற்படுத்தக்கூடும்.

உங்கள் கால்களை தினமும் இளஞ்சூட்டுநீரில் அல்லது சாதாரண நீரில் நன்றாக கழுவிய பின் ஒத்தித்துடைக்க வேண்டும். விசேடமாகக் கால் விரல்களுக்கிடையில் ஈரலிப்பு இருந்தால் பங்கஸ் வளர ஏதுவாகும் கால்களை அதிக நேரம் நீரில் ஊறவிடாதிர்கள். கால்விரல்களுக்கிடையே Talcom powder ஐ போடலாம்.

கால்களில் இரத்தோட்டத்தைச் சீராக்குவதற்கு இருக்கும் போது கால்களை stool ஒன்றில் உயர்த்தி வையுங்கள் விரல்களையும் பாதங்களையும் மேலும் கீழுமாகக 5 நிமிடங்களுக்கு அசையுங்கள். இவ்வாறு ஒரு நாளைக்கு 2 – 3 தரம் செய்யுங்கள். கால்களை ஒன்றுக்கு மேல் ஒன்றைப் போட்டு உட்காராதீர்கள்.

### நகங்களைப் பராமரிப்பது எவ்வாறு?

நகங்களை காலத்திற்குகாலம் வெட்டிச்சுத்தம் செய்ய வேண்டும். நகங்களை வெட்டும் போது குறுக்காக நேராக வெட்டவும். மூலைகளில் அதிகமாக வெட்டக்கூடாது. மூலைகளில் அதிகம் வெட்டினால் நகம் தோலிற்குக்கீழ் வளர்ந்து நோவை ஏற்படுத்தும். குளித்த பின் நகங்கள் மென்மையாக உள்ளபோது நகம் வெட்டுவது இலகுவாகும்.

### ஆணிக்கூர் (Callosity and carns) களை என்ன செய்வது?

சலரோக நோயாளிகளுக்கு ஆணிக்கூர் ஏற்படுவது மற்றவர்களை விட அதிகமாகும். இதனால் மாறாதபுண் ஏற்படலாம். ஆணிக்கூர் ஏற்பட்டால் வைத்தியரின் உதவியுடன் அகற்றலாம். கடையில் விற்கும் கிறிம்களையோ, Corn Plaster களையோ பயன்படுத்த வேண்டாம். அவை தோலில் புண்ணை ஏற்படுத்தலாம். ஆணிக்கூர் ஏற்படுவதைத் தடுக்க விஷேட பாதணிகளும் பாதணிகளில் காலிற்கு கீழ் வைக்கக்கூடிய தட்டுக்களையோ பயன்படுத்தலாம். இவற்றை யாழ்ப்பாணத்தில் Jaipur Rehabilitatraon Centre , ஊாரனெரமரடை இல் பெற்றுக்கொல்லளாம்.

### பாதணிகளைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?

சலரோக நோயாளிகள் பாதங்களில் உணர்ச்சிகுறைவாக இருப்பதால் பாதணிகளை உபயோகிப்பது அவசியம். விட்டிற்கு வெளியே என்றால் அத்தியாவாசியமாகவும் உள்ளே என்றால் கூடுமானவரைக்கும் பாதணிகளை அணியுங்கள். பாதணிகளை வாங்கும் போது முழுவதும் மூடிய, சௌகரியமான பாதணிகளை வாங்குங்கள். அதாவது ளயனெடநள, silippers ஐ விட shoos (சப்பாத்துக்கள்) தான் சிறந்தவை. மேலும் நுனி அகலமாகவும் தட்டையான பாதணிகள் கூரான, உயர்ந்த பாதணிகளை விட சிறந்தவை. leather அல்லது canvas ஆல் ஆன பாதணிகளைத் தேர்ந்தெடுங்கள். பாதணிகளை வாங்கும் போது மாலை நேரத்திலேயே வாங்கப்படவேண்டும். மாலை வேளையில் காலையை விட பாதங்கள் வீக்கமடைவதால் அந்நேரம் வாங்கும் பாதணிகளே அளவாக அமையும். மேலும் பாதணிகளை வாங்கும்போது விரல் நுனியைவிட ½ அங்குலம் முன்னால் இடைவெளி உள்ளதா எனப்பார்த்து வாங்குங்கள்.


பாதணிகளை அணியும்போது காலுறைகளையும் கட்டாயமாக அணியவேண்டும். காலுறைகளும் இறுக்கமாக இருக்கக்கூடாது. Cotton, wool போன்ற இயற்கையான இழைகளினாலானவை Nylone ஆல் ஆனவற்றை விட நல்லவை. அவற்றைத் தினமும் தோய்த்து அணியுங்கள்.

முடிவாக சலரோக நோயாளிகள் தமது பாதங்களை முகம் போல பராமரிக்க வேண்டும். காலத்திற்குகாலம் வைத்தியரிடம் சென்று கால்களை பூரணமாக பரிசோதித்துக்கொள்வது நல்லது.

புகைப்பிடித்தல் கால்களுக்கு இரத் தோட்டத்தைக் குறைப்பதால் முற்றாகத் தவிர்ப்பது நல்லது. சலரோகத் தினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்பல முறையாகவும் ஒழுங்காகவும் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறுவதன் மூலமும் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

Dr.S. கேதீஸ்வரன் MBBS, MD
பொதுவைத்திய நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை.

## அறிய வேண்டிய குறிப்புகள்



காய்கறிகளை சமைக்கும் போது அவற்றில் பச்சை நிறம் போகாமலிருக்க, அவற்றை நறுக்கியதும் உப்பு கலந்த வெந்நீரில சிறிது நேரம் போட்டு வைத்துவிட்டுப் பிறகு ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு வேகவிட்டு எடுக்கவும்.

மெழுகுவர்த்தி ஸ்டான்டினுள் மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பதற்கு முன்பாக கொஞ்சம் எண்ணெய் தடவி வைத்து விடுங்கள். மெழுகு எரிந்து முடிந்ததும் அதை நீக்குவது சுலபமாக இருக்கும்.

கை விரல்களில் ஏதேனும் இரும்புத் துகளோ, கண்ணாடித்துகளோ புகுந்து கொண்டு விட்டதா? அந்த இடத்தில் முதலில் கொஞ்சம் ஃபெவிகாலைத் தடவுங்கள். அது காய்ந்ததும் உரித்தெடுங்கள். அத்துடன் சேர்ந்து விரலினுள் மாட்டிக் கொண்ட துகளும் வந்து விடும்.

## மேக்கப் போடுவது எப்படி?



மேக்கப் போடுவது ஒரு தனிக் கலை

எல்லோருக்கும் தெரிந்தது தான் பவுண்டேஷன், ஐலைனர், பவுடர் ஆகியவை. ஆனால் அதன் திறமையான உபயோகம் ஒருவர் தோற்றத்தையே மாற்றக் கூடியது என்பது பலருக்கும் தெரியாத ஒன்று. உங்களை அழகாகவும் இளமையாகவும் தோன்ற வைக்கக் கூடியதும் மேக்கப்தான்.

கீழ்வரும் எளிய குறிப்புகள் சிறந்த முறையில் மேக்கப் போட உங்களுக்கு உதவும்.

***பவுண்டேஷன்:***

இதை லேசாகப் பயன்படுத்துவது நல்லது. அதிகப்படியான மேட் பவுண்டேஷன் முகத்தின் கோடுகளை வெளிப்படுத்திக்காட்டும். மேலும் முகத்தில் சுருக்கங்கள் இதன் அதிகப்படியான உபயோகத்தின் பின் விளைவு ஆகும்.

***கண்களில் ஒளியை ஏற்படுத்துங்கள்:***

நல்ல "ஐ ஷேடோவை" அடிப்படையாக பயன்படுத்துவதால் கண்களுக்கு அதிகப்படியான ஒளி கிடைக்கிறது. பளபளக்கும் வெளிர் நிறங்களைப் பயன்படுத்தி பாருங்கள். உங்கள் கண்களின் ஒளியையும் அதிகரிக்கும்.

***"ஹைலைட்டர்" உபயோகியுங்கள்:***

வெளிர் நிற அல்லது பளபளக்கும் ஐ ஷேடோ அல்லது கிரீம் ஹைலைட்டரை" கண்ணங்களின் மேற் பகுதியில், இமைகளுக்கு மேல் எலும்புப் பகுதியில் மற்றும் உதட்டின் மேற் பகுதியில் தடவினால் முகத்தின் பளபளப்பு அதிகமாகும்.

## குக்கரைப் பற்றி அறிவோம்



பொதுவாக குக்கர் என்மபது நமது நேரத்தையும், எரிபொருளையும் மிச்சம் பிடிக்க வந்த ஒரு பாத்திரம் என் று கூற வேண்டும். குக்கரை சரியாகப் பயன்படுத்தினால் நல்ல ருசியான சமையலையும், சிக்கனமான குடும்பத் தலைவி என்ற பெயரையும் எடுக்கலாம்.

சில சமயம் சமைக்கும் போது வெயிட் வால்வு வழியாக அதிக அளவு கஞ்சி வெளியேறும். இது ஏன் என்பது பலருக்கும் தெரிவதில்லை. சமையலுக்கு தேவையானதை விட தண்ணீரின் அளவு அதிகமாகி விட்டால், அதிதகமான நீரை இந்த வெயில் வால்வு வெளியேற்றுகிறது.

மேலும், குக்கருக்குள் ஒரு பாத்திரம் வைத்து சமைக்கும் படிதான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நாம் சில நேரங்களில் உள்பாத்திரம் இல்லாமல் நேரடியாக சமையல் செய்யும் போதும் இப்படி நீர் வெளியேறும்.

நெருப்பின் அளவு மிக அதிகமாக இருந்தாலும், குக்கருக்குள் இருக்கும் நீர் வெளியேறும்

## குளிர்சாதனப் பெட்டியின் இரகசியம்



குளிர்சாதன பெட்டியில் உள்ள ப்ரீசரில், ஐஸ்கட்டிகள் தோன்றாமலிருக்க கல் உப்பை உட்பகுதியில் தடவவும்.

சிலர் இரவு நேரங்களில் அல்லது வெளியில் செல்லும் பேது குளிர்சாதன பெட்டியை நிறுத்திவிட்டு பேய்விடுவார்கள். இது தவறு.

அவ்வப்போது மின்சாரத்தை நிறுத்தி வைப்பதை விடதொடர்ந்து மின்சாரம் சென்று கெண்டிருப்பதே சிக்கனம்தான்.

## சமையலறை சுத்தம்



முதலில் கைப்பிடித் துணியைக் கசக்கித் தினம் ஒரு துணியை மாற்ற வேண்டும்.

மேலும் குப்பைத் தொட்டியை அவ்வப்போது கழுவி விட்டு சுத்தமாகப் பயன்படுத்த வேண்டும்.

வோஷ்பேசின், சிங்க் முதலியவைகளுக்குள் பாத்திரத்தை மலை போல் குவிக்காமல் அவ்வப்போது அலம்பி வைப்பது. இதனால் சிங்கில் துற்நாற்றம் வராமல் தடுக்க முடியும்.

## வாழைப்பழ பாயாசம்



**தேவையான பொருட்கள்:**

அரிசி : 100 கிராம்
சர்க்கரை : 200 கிராம்
தேங்காய் : 1.˙.2
ஏலக்காய் : 5
முந்திரி : சிறிதளவு
மஞ்சள் வாழைப்பழம் : 2 (மிக சிறிய துண்டாக நறுக்கியது)

**செய்முறை:**

அரிசியை நன்றாக சுத்தம் செய்து 1 மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய அரிசியையும் தேங்காயையும் மையாக அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த அரிசி, தேங்காய் கலவை அடுப்பில் வைத்து கிளறவும். அடுப்பை மிக சிறியதாக எரியவிடவும்.

மா பிரியாமல் சேர்த்து கொதித்து அரிசி கலவை நன்றாக வேக வேண்டும். எல்லாம் சேர்ந்து கொதித்தபின் வாழைப்பழத்தைப் போட்டு 2 நிமிடம் கிளறி இறக்கவும். நெய்யில் வறுத்த முந்திரியையும், ஏலக்காய் தூளையும் போட்டு இறக்கவும்.

## லிப்ஸ்ரிக்ஸ் சந்தேகங்கள்



லாங் லாஸ்ட்டிங் லிப்ஸ்டிக்குகள் 5 முதல் 8 மணி நேரம் நீடிக்கும். ஆழமான நிறத்தைத் தரும், எளிதில் அழிந்துவிடாது. ஆனால் உதடுகளை உலர வைக்கும். இதனைப் பயன்படுத்தும் போது உதடுகள் உலர்ந்துவிட்டதைப் போல் தோன்றினால் கன்டிஷனர் தடவலாம்.

திரவ வடிவில் இருக்கும் இந்த லிப்ஸ்டிக்குடன் அதைத் தடவ சிறிய பிரஷ் இருக்கும். நீண்ட நேரத்திற்கு அழியாமல் இருக்கும்.

பளபளப்பு தேவையென்றால் இதன் மேல் லிப் கிளாஸ் தடவலாம். இது விரைவில் உலர்ந்துவிடுவதால் இதைப் பயன்படுத்தும் போது கவனம் தேவை.

லிப் பென்ஸில் உதடுகளை மேலும் அழகாக்குகிறது. லிப்ஸ்டிக்கின் நிறத்தை அதிகமாக்க, லிப்ஸ்டிக் தடவுவதற்கு முன் லிப் பென்ஸில் தடவலாம்.

லிப் பென்ஸிலால் தடவுவதால் லிப்ஸ்டிக் உதடுகளை விட்டு வெளியே பரவாமல் இருக்கும்.

# ஆரோக்கியத்தை அள்ளித் தரும் நடைப்பயிற்சி



இன்றைய நவீன உலகில், ஓடி ஓடி வேலை செய்தாலும் அவ்வப்போது எம்மை சோம்பலும், மறதியும் மற்றும் நோய்த் தாக்கமும் சூழ்ந்து கொண்டு விடுகிறது. அதில் இருந்து தப்பிக்க ஒரே வழி நடைப் பயிற்சியே சிறந்தது.

உடல் உழைப்பு, விளையாட்டு, உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் ஈடுபட முடியாதவர்களுக்கு அற்புதமான வாய்ப்புத்தான் நடைப் பயிற்சி. எமக்கு, கராத்தே, யோகா, உடற் பயிற்சிகள், ஓட்டம், பல்வேறு விளையாட்டுக்கள் போன்றவைகளை விட நடைப் பயிற்சி மிகவும் எளிது.

நல்ல நடைப் பயிற்சி, மன இறுக்கம், மன அழுத்தத்தைப் போக்குகிறது. மனதிற்கு மகிழ்ச்சி தரும், நலம் தரும் ஹோர்மோன்களை சுரக்கச் செய்யும். உடல் செயற்பாடுகள் மேம்படும். நன்றாகப் பசி எடுக்கும். நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உடல் சோர்வைக் குறைத்து, வலிமை தருகிறது. யாரும் எங்கும் நடக்கலாம், எந்த வயதிலும் நடக்கலாம். எப்போதும் நடக்கலாம்.

குறிப்பாக, பெண்கள் மற்றும் நோய்த் தாக்குதலில் மீண்டு வருபவர்களுக்கு மிகவும் எளிமையானது.

தினசரி நடைப் பயிற்சி மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் இதோ...

உடல், மனச்சோர்வைக் குறைக்கிறது.

முதுகு நரம்புகளை உறுதியாக்குகிறது.

கண் பார்வையை கூர்மைப்படுத்துகிறது.

நரம்பு மண்டலம் சுறு சுறுப்படையும்.

நாளமில்லாச் சுரப்பிகள் புத்துணர்ச்சி பெறும்.

அதிகப்படியான கலோரிகளை எரிக்க உதவுகிறது.

அடிவயிற்றுத் தொப்பையைக் குறைக்கிறது.

மூட்டுகளை இலகுவாக்குகிறது.

எலும்புகளுக்கு உறுதியளிக்கிறது.

கால்களையும், உடலையும் உறுதியான அமைப்பில் வைக்கிறது.

நல்ல தூக்கம் வர உதவுகிறது.

'கொலஸ்ட்ரோல்' அளவைக் குறைக்கிறது.

மாரடைப்பு, சர்க்கரை நோய் அபாயத்தைக் குறைக்கிறது.

தினமும் சுமார் 30 முதல் 45 நிமிடங்கள் நடைப் பயிற்சி மேற்கொண்டால் போதும். ஆரோக்கியம் எம்முடன் எப்போதும் இருக்கும். விரட்டினால் கூட போகாது. அந்த அளவு நன்மை தருகிறது நடைப் பயிற்சி.

எனவே, இன்றே தொடங்கலாம் நடைப் பயிற்சியை. ஏற்கனவே, தொடங்கி பயிற்சி மேற்கொண்டவர்கள் மகிழ்ச்சியோடு இன்னும் சில நிமிடங்கள் அதிகப்படுத்தலாம். இயற்கை கொடுத்துள்ள அற்புதவரம் தான் நடைப் பயிற்சி.

# நடைப் பயிற்சி போவது எப்படி?



நடைப்பயிற்சி எப்படிச் செல்ல வேண்டும் என்றும் விதிமுறை இருக்கிறது.

அவரவர் உடல் பருமனுக்கு ஏற்ப நடக்கும் வேகத்தைக் குறைக்க வேண்டும் அல்லது அதிகரிக்க வேண்டும்.

நடந்தால் போதும் என்று அவரவர் இஷ்டப்படி நடக்கிறார்கள்.

இதனால் பிரச்சினைகள்தான் உருவாகின்றன. பொதுவாக நடைப் பயிற்சி செல்லும் ஒருவர் நிமிடத்திற்கு 100 அடிகள் எடுத்து வைப்பதே நல்லது.

இதுதான் மிதமான உடற்பயிற்சி. இந்த வேகத்தில் தினமும் 30 நிமிடங்கள் நடப்பது சரியான உடற்பயிற்சியாக அமையும் என்கிறது ஆய்வு முடிவுகள்.

# உலக சாதனைப் புத்தகம் உருவான கதை

1951 ஆம் வருடம் ஒரு நாள் மாலைப்பொழுது, அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'கின்னஸ் வாட் சாலை என்ற அமைப்பிற்கு நிர்வாக இயக்குநராக இருந்தவர் 'சர்க்யூ பீவர்'. இவர் வேட்டையாடுவதற்காக ஒரு நதிக் கரையோரம் சென்று கொண்டிருந்தார். அப்போது ஆகாயத்தில் ஒரு நீண்ட கோடு போல ஏராளமான பறவைகள் பறந்து சென்று கொண்டிருந்தன. அவர், உடனே அவற்றை சுட




எண்ணி, தன்னிடமிருந்த துப்பாக் கியை எடுத்தார். ஆனால் அந்தப் பறவைக்கூட்டம் கண்ணுக்கே தெரியாத தொலைவுக்குச் சென்று விட்டதை அறிந்தார். வியப்பில் உறைந்து போனார். என்ன ஒரு வேகம்! 'கோல்டன் பிளவர்' என்ற பறவையினம் அவை. அப்போதுதான் அவருக்கு ஒரு சிந்தனை பளிச்சிட்டது. ஒருவேளை உலகிலேயே மிகவும் வேகமாகப் பறக்கும் பறவையினம் இவையாகத்தான் இருக்குமோ என்று எண்ணினார். பலரிடம் பல புத்தகங்களிலும் விடை தேடினார். பலன்தான் இல்லை. இது குறித்து நாமே ஒரு புத்தகம் வெளியிட்டால் என்ன என்று யோசித்தார். அவர் உடனே லண்டன் சென்றார். அங்கு அரசாங்கத்திற்காக புள்ளி விவரங்கள் சேகரிக்கும் நோரிஸ் மைக் வைக்ட்டர், ரோஸ் மைக் வைக்ட்டர் என்ற இரட்டைச் சகோதரர்களைச் சந்தித்தார். தனது புதிய புத்தக யோசனையை தெரிவித்தார். அவர்களும் ஒத்துழைப்புதர முன்வந்தனர். மூவரின் உழைப்பில் பிறந்தது தான் கின்னஸ் புத்தகம். முதல் கின்னஸ் புத்தகம் 1955 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27இல் 198 பக்கங்களுடன் அவர்களால் வெளியிடப் பட்டது.

உலகிலேயே மிகவும் பெரியது. மிகவும் சிறியது ஆகிய விபரங்கள் இதில் அடங்கியிருந்தன. மேலும் அவ்வாண்டு வெளியான புத்தகங்களில் அமோக விற்பனையான புத்தகம் என்ற பெருமையும் கின்னஸ் புத்தகத்திற்கு கிடைத்தது. அன்று தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளோடு புத்தகம் வெளிவந்தது. தொடர்ந்து ஆண்டுதோறும் வெளிவரும் கின்னஸ் புத்தகம் இடையில் 1957, 1959 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் வெளிவரவில்லை.

இதற்கான காரணம் தெரியவில்லை. தனிப்பட்ட நபரின் எந்த ஒரு புதிய சாதனையையும் கின்னஸ் புத்தகத்திற்கு அனுப்பலாம். இதற்கான தகுந்த ஆதாரங்களைக் காட்டவேண்டும் எப்படி? என பார்ப்போம். சாதனையாளரின் சாதனை பற்றிய பத்திரிகைச் செய்திகள், பார்வையாளர்களாக இருந்த பொறுப்பானவர்களின் கையெழுத்துத் தொகுப்பு, இவை உண்மை தான் என்று ஒரு பொறுப்பான நிறுவனத்தின் தலைவர் வழங்கும் உறுதிமொழி.

இவ்வளவும் அனுப்ப வேண்டும். புதிய சாதனை முந்தைய சாதனையை முறியடிப்பதற்காக இருந்தால் அந்தச் செய்தியும் சாதனையாளர் பற்றிய தகவலும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும். கின்னஸ் புத்தகத்தில் சாதனை நிகழ்ச்சிகளை வெளியிடுவார்களே தவிர, யாரையும் சாதனை புரியத் தூண்டமாட்டார்கள். கின்னஸ் புத்தகம் பற்றிக் கூட கின்னஸ் புத்தகத்தில் 1974 இல் இடம்பெற்றது. அது உலகிலேயே அதிகமாக விற்பனையான புத்தகம் என்ற வரிசையில் தான். முதலில் ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவந்த புத்தகம் விரைவிலேயே 35 மொழிகளில் வெளியிடப் பட்டது.

# முடி வளர்வதற்கான உணவு முறை



பெரும்பாலும் முடி கொட்டுவதைத் தவிர்க்க ஷம்புவை மாற்றுவோம் அல்லது பல்வேறு கலவைகளை எமது தலையில் தேய்த்து குளிப்போம்.

இவை எல்லாமே மேல் வேலைகள்தான். எவ்வளவுதான் செடிக்கு தண்ணீர், உரம்



போட்டாலும், வேரில் தானே விடயம் இருக்கிறது.

அதுபோலத்தான், உங்கள் உடல் நலனில் தான் முடி வளர்ச்சியும் அடங்கியுள்ளது.

அதிகமாக முடி கொட்டுபவர்கள் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறுவது நல்லது.

ஏனெனில் எமது உடலில் சுரக்க வேண்டிய சில ஹோர்மோன் பற்றாக் குறையாலும் முடி கொட்டலாம் என்கிறது மருத்துவம்.

ஹோர்மோன் சுரப்பிகளை சரி செய்ய எமது உணவிலேயே மருந்து உள்ளது.

புரதம் நிறைந்த பருப்பு, கீரை, கரட், பீட்ரூட், கறிவேப்பிலை, செங்கீரை, இரும்புச்சத்து நிறைந்த பனைவெல்லம், கேழ்வரகு, பால்,

அசைவ உணவு சாப்பிடுபவர்கள் எலும்பு சூப் மாதிரியான சமச்சீரான உணவுகளை சாப்பிட்டு வந்தால் முடி உதிர்வதைத் தடுக்கலாம் என்கிறது மருத்துவ வட்டாரம்.

# ஐ.நா. தீர்மானம் தமிழருக்கு ஏமாற்றம்

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு ஐ.நா மூலம் தீர்வு கிடைக்குமென தமிழ்மக்கள் நம்பியிருந்த வேளையில் அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளதாக வவுனியா- மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

"தினச்செய்தி"க்கு அவர் பிரத்தியேகமாக அளித்த பேட்டியில் மன்னார் ஆயரின் உடல்நலம், நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல், ஐ.நா. தீர்மானம் தொடர்பாக மேலும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:-

**கேள்வி:** வவுனியா - மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் எப்போது சிங்கப்பூர் சென்றார். அவரின் உடல்நிலை தற்போது எப்படியுள்ளது?

**பதில்:** ஆம்! அவருக்கு சிங்கப்பூரில் இயன் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அவர் சிங்கப்பூர் சென்று 40 நாட்கள் ஆகிவிட்டன. அவருக்கு கொழும்பிலும் இயன் மருத்துவ சிகிச்சைதான் வழங்கப்பட்டு வந்தது. ஆனாலும் சிங்கப்பூரில் தான் இயன் மருத்துவ சிகிச்சை சிறப்புப் பெற்றுள்ளது. எனவே அங்கு கொண்டுசென்று சிகிச்சை அளித்து வருகின்றோம். முன்னர் அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படாத நிலையிலும் உரையாடல்களும் யாருக்கும் விளங்குவதில்லை. ஆனால் தற்போது ஓரளவுக்குப் பேசுவதுடன் கை கால்களில் அசைவு ஏற்பட்டுள்ளதுடன் நலமடைந்து வருகின்றார்.



**கேள்வி:** ஆயர் இராயப்பு ஜோசேப் புக்குப் பதிலாக வவுனியா - மன்னார் மறை மாவட்டத்திற்கென புதிய ஆயர் நியமிக்கப்படவுள் ளாரா?

**பதில்:** எமது ஆயர் இராயப்பு ஜோசப்பிற்கு வயது 75 அவருக்குப் பதிலாக புதிய ஆயரை நியமிப்பது தொடர்பில் வத்திக்கான் பாப்பரசர் தான் முடிவுகளை அறிவிக்க வேண்டும். ஏனெனில் ஆயர்களைத் தெரிவு செய்வது பாப்பரசர்தான்.

**கேள்வி:** நடைபெற்று முடிந்த தேர்தல்கள் தொடர்பில் தங்களது அபிப்பிராயம் என்ன?

**பதில்:** நடைபெற்று முடிந்த தேர்தல் புதிய அரசியல் கலாசாரத்திற்கு வித்திடுகின்றது. அதற்குரிய முறையில் தான் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

அதேபோல் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி தமிழர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றே தமிழர்களாகிய நாம் தேர்தலை எதிர்கொண்டோம்.

**கேள்வி:** ஐ.நா தீர்மானம் குறித்து உங்களின் கருத்து என்ன?

**பதில்:** கடந்த முதலாம் திகதி ஐ.நா தீர்மானத்தைப் பற்றி குறிப்பிடுகையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான விசாரணையைத்தான் தமிழ் மக்களாகிய நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை மேன்மைப்படுத்தியுள்ளார்கள். அது தமிழ் மக்களாகிய எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளகபொறிமுறையை விட சர்வதேச முறைதான் எமக்கான தீர்வாக அமையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் விரும்பத்தக்க ஒன்றாகவும் உள்ளது என்றார்.

**ஆசிரியர் குறிப்பு:-**

**ஆயரை நியமிக்கும் பொறுப்பு பாப்பரசரிடம் தான் உள்ளது. கடந்த 9 வருடமாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வராகப் பணியாற்றும் அருட்தந்தை விக்ரர் சூசைக்கு மன்னார் ஆயர் பொறுப்பு வழங்குவதற்கு வாய்ப்புள்ளது.**

## வெளிநாட்டு வரனுக்கு ...

குழந்தையும் பிறந்தது. அவரும் வருடத்துக்கு ஒருக்கா தவறாம வந்திட்டுப் போவார். ஆனால் 4 வருடங்களாக அவர்களை அங்கு கூட்டிச்செல்வதாக இல்லை. கேட்டால் ஏதாவது ஒரு சாட்டு. பிள்ளை முன்பள்ளிக்குச் செல்ல ஆரம்பிக்கவே பெற்றோரும், பெண்ணும் விழித்தெழ ஆரம்பித்தனர்.

இதுக்கப்புறம் விழிச்சுத்தான் என்ன பயன். சரி பாப்பம் என்னதான் நடந்த தெண்டு...

பெற்றோர் மாப்பிள்ளைபற்றி இப்பதான் விசாரிக்க ஆரம்பிச்சிருக்கினம். அவையளுக்கு அங்க காத்திருந்தது அதிர்ச்சி மட்டுமல்ல, இடியும்தான்! என்ன? இவள் எங்களைக் குழப்பிறாள் எண்டு என்னக் குறை சொல்லிப் போடாதையுங்கோ! நான் உண்மையைத் தான் சொல்லுறன்.

அங்க காத்திருந்த அதிர்ச்சி என்ன தெரியுமா? இவர் ஏற்கனவே வெளிநாட்டில கலியாணம் செய்து 3 பிள்ளையள் இருக்குது. முதல் மனைவியோ வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர். இதனால் பெற்றோருக்குப் பிடிக்கவில்லை. அவர்களின்ர கட்டாயத்துக்கும், விருப்பத்துக்கும் யாழ்ப்பாணம் வந்து இங்கு கலியாணம் செய்து ஒரு பிள்ளைக்கும் அப்பாவாயிட்டார். இவர்கள அங்கு கெண்டு செல்ல முடியாததால அங்குமிங்குமாக அவர் தாவித்திரிகிறார். பார்த்தீங்களா? இவரது வாழ்க்கைய. இந்த வாழ்க்கை தேவைதானா?

சரி அவர் எப்பிடி எண்டாலும் வாழட்டும். எங்ட கட யாழ்ப்பாணத்துப் பிள்ளையின்ர வாழ்க்கையைப் பாத்திங்களா? இப்ப என்ன செய்யிற தெண்டு தெரியாம அழுதுதான் என்ன பயன்? வெளிநாடு.... வெளிநாடு ... அங்க என்னதான் இருக்குது. இது ஒருவர் மட்டுமல்ல இப்படிப் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

எனவே வெளிநாட்டு மோகத்தைத் தவிர்த்து ஆற அமர சிந்தித்து, விசாரித்து, மாப்பிள்ளை பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல மாப்பிள்ளை பார்க்கும் போதும் அவசரம் தேவையில்லை. ஏனென்றால் திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதை பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றோரும் கவனத்தில் எடுத்து கரிசனையோடு வாழ வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பது கூற்று மட்டுமல்ல அது நிதர்சனமான வாழ்க்கையும் கூட.

## ஒரு நிமிடக் கதை ...

# அன்பளிப்பு

சம்பத் தனியார் நிறுவனம் ஒன்றில் குமாஸ்தாவாக உள்ளவர். சக ஊழியர்களின் வீட்டு விசேஷங்கள், பணி நிறைவு விழாக்களுக்கு அன்பளிப்பு செய்துவிட்டு, அவர்கள் தனக்கும் திருப்பி செய்து விட எதிர்பார்ப்பார்.

ஒரு முறை சக ஊழியரின் மகள் திருமணத்துக்கு அவரிடம் மற்றவர்கள் மொய் செய்ய கேட்டபோது, "அவனுக்கு நான் மொய் செய்ய மாட்டேன். சென்ற முறை இருநூறு ரூபாய் எழுதினேன். ஆனால் அவன் என் வீட்டு கிரகப்பிரவேசத்துக்கு ஒன்றும் செய்யவில்லை" என்று மறுத்துவிட்டார்.

வீட்டில் ஒரு நோட்டு போட்டு யாருக்கு, எந்த திகதியில் எவ்வளவு மொய் செய்திருக்கிறோம் என்று எழுதி, அதற்கு நேர் எதிரில் தன் வீட்டு கிரகப் பிரவேசம், மகள் திருமணம், பேத்தியின் காது குத்து போன்றவற்றுக்கு அவர்கள் திருப்பிச் செய்திருக்கிறார்களா என்று கணக்கு வைத்துக்கொள்வார்.

சம்பத்தின் கடைசி மகன் தருணுக்கு திருமணம் முடிவானது. தருண் பன்னாட்டு நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிகிறான்.

"தருண் உன் கல்யாணம்தாண்டா நம்ம வீட்டுல கடைசி விசேஷம் ... இதுல தான் நாம மத்தவங்களுக்கு செஞ்சது எல்லாம் திரும்ப வரணும்" என்றார் சம்பத். தருண் அமைதியாக இருந்தான்.

தருணின் திருமண வேலைகள் நடந்து கொண்டிருந்தன. தருண் தனது திருமண அழைப்பிதழை அச்சடித்து கொண்டு வந்து சம்பத்திடம் நீட்டினான்.

ஒரு பத்திரிக்கையை எடுத்து படிக்க ஆரம்பித்த சம்பத்தின் முகம் மாறியது. "என்னடா... இப்படி அடிச்சிருக்கு... ப்ரூப் கூட சரியா இருந்துச்சே... அவன் தப்பா அடிச்சுட்டானா? என்று கர்ஜித்தார்.

சம்பத் காட்டியது பத்திரிக்கையின் கீழே "தயவு செய்து அன்பளிப்புகளை தவிர்த்து, உங்கள் வாழ்த்துக்கள், ஆசிகளை மட்டும் தரவும்" என்று போட்டிருந்ததைத் தான்.

"நான்தானப்பா அப்படி அடிக்கச் சொன்னேன்" என்றான் தருண் பவ்யமாக.

"ஏன்டா உனக்கு என்ன கிறுக்கு பிடிச்சிருக்கா? வர்ற அன்பளிப்பு யாராவது வேண்டாம்னு சொல்லுவாங்களா?" என்றார் சம்பத்.

"உண்மைதான் அப்பா. அன்பளிப்பு எல்லோருக்குமே பிடிக்கும் தான். அது அன்பின் அடையாளமா பெறுவது. அதுக்கு எல்லாம் உங்கள மாதிரி வரவு, செலவு கணக்கு வைக்க முடியாது. அவங்க தகுதி, சூழ்நிலைக்கு ஏத்த. மாதிரி அன்பளிப்பு பண்ணுவாங்க. அதுல நாம அதிருப்திபட்டுகிட்டா, அடுத்த முறை அவங்கள நேர்ல பார்க்கிறப்போ இவங்க நமக்கு குறைச்சலா பண்ணாங்கன்னு, முழு மனசோட பழக முடியாது" என்றான் தருண்.

"அதைவிடு. என்ன போட்டிருந்தாலும் நமக்கு மொய் பண்றவங்க பண்ணாமலா போய்டுவாங்க? " என்றான். அப்படியும் அன்பளிப்பு இருக்கா என்றார் சம்பத்.


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly NewspaperAdvertisement Rate Card**

| PagesSizes | (col/cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 30000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 15000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 7500 . 00 | 12500 . 00 |
| Per col/cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front strip ad | 8x5 | 5000 . 00 | 8000 . 00 |
| Front height ad | 3x15 | 6000 . 00 | 9000 . 00 |
| Per col/cm | 1x1 | 120 . 00 | 200 . 00 |
| Ear space advertisements | 6x6 cm | 1500 . 00 | 2500 . 00 |
| **Back page** | | | |
| Ear space back page | 6x6 cm | 1000 . 00 | 2000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black & White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

**Per col/cm 1x1 Black & White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்

**T.P : 021 7539300**
**Fax : 021 2242139**
**E-mail : thinacheithiadvt@gmail.com**
**Web : www.thinacheithi.com / lk**

# இன்னும் ஆசையுண்டு

அற்புதமான கிரிக்கெட் வீரர் கெவின் பீட்டர்சன். திட்டமிட்டே இங்கிலாந்து அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார் என்பதுவே எல்லோரதும் கருத்து. தற்போது பீட்டர்சன் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடர் வென்றதையிட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து அணிக்குள் மீண்டும் நுழைந்து ஆஷஸ் தொடரில் விளையாடக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அன்ரூ ஸ்ரோஸ் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முகாமையாளராக பொறுப்பேற்றதும் அந்த எண்ணம் இல்லாது போயிற்று. இதற்கு காரணம் அன்ரூஸ்ரோசுக்கும், கெவின் பீட்டர்சனுக்கும் ஒருபோதும் ஒத்துப்போகாத நிலையே இருவரும் அணியில் விளையாடும்போது காணப்பட்டது. அதன் தொடர்ச்சியே கெவின் பீட்டர்சனின் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டமைக்கு காரணம் என்றும் ஊகிக்கப்பட்டது.



அதெல்லாம் ஒருபுறம் இருக்க தன் நண்பர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஆஷஸ் தொடரை வென்றதற்கு தனது பாராட்டை தெரிவித்துள்ளதோடு தனக்கு டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாடவே மிகுந்த விருப்பம் இன்னமும் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தற்போது இங்கிலாந்து கவுன்ரி மற்றவகை ஆட்டங்களில் இவர் திறம்பட விளையாடிக் கொண்டிருந்தாலும் தனது முதல் விருப்பம் டெஸ்ட் போட்டிகள் தான் என்று கூறுகிறார். இருபதுக்கு இருபது போட்டிகள் வித்தியாசமான ரசிகர் கூட்டத்தைக் கொண்டு வருவது உண்மைதான். இருந்தாலும் டெஸ்ட் போட்டிகளே எனக்கு விருப்பம். டெஸ்ட் போட்டியின் அந்த முதல் மணித்தியாலம், அந்த முதல் செசன் ஆட்டம் முடிவுறும் வேளை ஆட்டத்தின் முன்பான ஒரு மணித்தியாலம், ஆட்டம் முடிந்த பின்பான ஒரு மணித்தியாலம் என்று டெஸ்ட் கிரிக்கெட்டை அணுஅணுவாக ரசிக்கிறார். மேலும் டெஸ்ட் வீரர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும். அவர்கள் நன்கு கவனிக்கப்படுகிறார்கள் என்று டெஸ்ட் வீரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் டெஸ்ட் போட்டிகளே பிரதானம் அது அற்புதமானது. எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடுவேன் என்று கூறி முடிக்கிறார் இந்த அற்புதமான வீரர்.

# புதிதாய்* பிறக்*கிறது

பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 4 முதல் 24ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்சின் சார்ஜா மற்றும் துபாயில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளிலும் ஐ.பி.எல் மற்றும் வேறு இதைப்போன்ற சுற்றுப்போட்டிகள் போல வெளிநாட்டு வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் வீரர்கள் பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகளில் விளையாட சம்மதம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. இதிலும் இலங்கையின் வீரர்களாக ஏஞ்சலோ மத்தியூஸ், லசித்மலிங்க இருவரும் இணைந்து கொள்வார்கள் என தற்போதைக்கு அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சன், லூக்ரைட், மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ்கெய்ல், கெய்ரோன்பொலாட், அன்ரீரஸல், டுவைன் பிராவோ, சுனில்நரைய்ன், பங்களாதேஷின் ஷாகிப் அல்ஹசன், ஆகியோரையும் பாகிஸ்தான் சுப்பர் லீக் ஆட்டங்களில் காணலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் நவம்பர் நடுப்பகுதியில் அணி உரிமையாளர்கள் பற்றித் தீர்மானிக்கப்படும் எனவும் அதன்பின் வெளிநாட்டு வீரர்கள் அணிக்குள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



பாகிஸ்தான் சுப்பர்லீக் ஆட்டங்களில் 5 அணிகள் பங்குகொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பத்திற்கு மேற்பட்ட தரப்பினர் இந்த அணிக்கான உரிமையாளர்களாக போட்டியிடுவதாகத் தெரிய வந்துள்ளது. பங்குகொள்ளும் 5 அணிகளும் தலைநகர் இஸ்லாமாபாத், குவெட்டா ,லாகூர், கராச்சி மற்றும் பெஷாவர் மாகாணங்களைச் சார்ந்தவையாக இருக்குமென தெரிய வந்துள்ளன.

மேலும் இந்த சுற்றுப்போட்டிகள் ஒரு மாத காலத்திற்குள் முடிவடையும் விதத்தில் திட்டமிடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் மொத்தமாக 24 ஆட்டங்களே இருக்கும் எனவும் ஒரு அணி இன்னொரு அணியை இரண்டு தடவைகள் எதிர்கொள்வதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கரிபியன் பிறிமியர் லீக் பாணியிலேயே இப் போட்டிகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வீரர்கள் பிளாட்டினம், டயமன்ட், கோல்ட், சில்வர், வளர்ந்து வரும் வீரர் என்ற அடிப்படையில் வகைப்படுத்தப் படுவரெனவும் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என பாகுபாடு காட்டப்படமாட்டாதெனவும் ஒவ்வொரு அணியிலும் குறைந்தது பன்னிரண்டு உள்ளூர் வீரர்களும், நான்கு வெளிநாட்டு வீரர்களும் உள்வாங்கப்படுவார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புணமே சரணம்



மே.கிந்திய தீவுகள் அணியினர் ஒரு சில வாரங்களில் இலங்கைக்கு எதிரான கிரிக்கெட் தொடருக்காக இங்கு வந்து இறங்கப் போகிறார்கள். எப்பொழுதுமே ஒரு சர்வதேச சுற்றுப் போட்டியொன்றில் இலங்கையை அடுத்து எம்மவர் ஆதரவு தெரிவிக்கும் அணி என்றால் அது மே. இந்திய அணிதான் என்கிறார் ஒரு கிரிக்கெட் விமர்சகர். அது உண்மையும் கூட மே. இந்திய முன்னாள் தலைவர்கள் ஜோண்கொடாட், ஜெப்ஸ்ரொல் மேஜர், சேர்.பிராங்க்வொரல், சேர்.காபீல்சோபர், றோகன்கனாய், கிளைவ்லொயிட், விவியன் றிச்சட்ஸ் என்றும் வேகப் பந்து வீச்சாளர்கள் என்ற வரிசையில் அன்டிரொட்ஸ், ஜோல்கார்னல், கொலிஞ்ஹுரொப்ட், மெல்கம் மார்ஷல், கோட்லி அம்புறோஸ்.... என்று வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். ஆனால் அன்றைய மேற்கிந்திய இந்திய அணி போல் இன்றைய அணி அப்படிப் பலமானதாக இல்லை. எனவே இங்கு வரப்போகும் அணியும் பலம் குறைந்த அணியே என்பது அடிப்படை.

இதற்கொரு காரணமாக ஐ.பி.எல் போட்டிகளைக் குற்றம் சாட்டுபவரும் உண்டு. ஏனெனில் கிரிக்கெட் சபைகளின் விதிமுறைகளைக் கண்டுகொள்ளாமல் தமது நாட்டுக்காக விளையாடும் சந்தர்ப்பத்தை புறம்தள்ளி வேறு சர்வதேச போட்டிகளில் விளையாட வீரர்கள் சென்று விடுகிறார்கள். அதுவும் ஐ.பி.எல் சுற்றுப் போட்டிகள் போன்றவற்றில் என்று கூறப்படுகின்றது.

இலங்கை மேற்கிந்திய கிரிக்கெட் அணியில் கிறிஸ்கெய்ல் இல்லை என்பதையும் இந்த வகையில்தான் பார்க்க வேண்டிய நிலையுள்ளது. அவர் விளையாடுவதைப் பார்க்கவே பல்லாயிரம் பேர் மைதானத்தில் கூடுவார்கள். அவர் தமது அணியுடன் இலங்கைக்கு வராமைக்கு எதிர்வரும் அவுஸ்ரேலிய பிக்பேஷ் ருவென்ரி 20 சுற்றுப்போட்டிக்கும் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் பாகிஸ்த்தான் சுப்பர் லீக் சுற்றுப் போட்டிக்கும் தன்னை தயார்படுத்திக் கொள்ளத்தான் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை தேசிய அணிகளில் விளையாடும் வீரர் ஒருவர் வருடம் 1,50 000 அமெரிக்க டொலர் பெறும் அதே வேளை ஐ.பி.எல்.இல் விளையாடினால் இருபது இலட்சம் அமெரிக்க டொலர்கள் (இரண்டு மாதங்களில்) சம்பாதித்து விடுவார். ஆகவே வீரர்கள் எதற்கு முன்னுரிமை கொடுப்பார்கள் என்பதை ஊகிப்பது ஒன்றும் அவ்வளவு கடினமல்ல.

இந்தநிலை மே.இந்திய கிரிக்கெட் அணிக்கு மட்டுமல்ல. சகல சர்வதேச அணிகளும் இந்த இக்கட்டை எதிர்கொள்கின்றன. ஐ.பி.எல், பங்களாதேஷ் பிறிமியர் லீக், கரிபியன் பிறிமியர் லீக், பிக்பேஷ் - ஈ.சி.பி ருவென்ரி 20 (இங்கிலாந்து) போட்டிகளுடன் புதிதாக பாகிஸ்தான் சுப்பர் லீக்கும் தொடங்குகின்றது.

எனவே இவர்களோடு எல்லாம் போராடி தேசிய அணிகளில் அதிசிறந்த வீரர்களை தக்க வைத்துக் கொள்வது என்பது எந்தளவிற்குச் சாத்தியம். மேற்சொன்ன எல்லாம் ருவென்ரி 20 வகையைச் சார்ந்தவை. அப்படி என்றால் பாரம்பரிய டெஸ்ட் போட்டிகளின் நிலை தான் என்ன?

ஏன் ஒருநாள் போட்டிகள் கூட தள்ளாடும் நிலை ஏற்படும்போலத்தான் தெரிகிறது. இன்றைய விளையாட்டு உலகம் தொழில்சார் விளையாட்டு உலகம் கிரிக்கெட்டும் அதற்குள் ஒன்று. எனவே எதன் பக்கம் வீரர்கள் சாய்வார்கள் என்பது சொல்லாமலே புரியும்.

ஜோசப் கிருஷ்ணா


விவியன் றிச்சட்ஸ்

# வடக்கில் வல்லவனுக்கு வல்வையில் பெருவிழா





கடந்த ஒரு மாத காலமாக வல்வெட்டித்துறையில் மாபெரும் திருவிழா ஆம் வடக்கின் வல்லவன் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான பெருவிழா. 47 அணிகள் முட்டி மோதிய பெருஞ் சமர் அது. பெரும்பாலும் மின்னொளியிலேயே இச்சமர் இடம்பெற்றுள்ளது.

தினச்செய்தியின் அனுசரணையுடன் நெற்கொழு விளையாட்டுக் கழகம் நடாத்திய மாபெரும் உதைபந்தாட்டத் திருவிழா கடந்த 01.08.2015 அன்று மிகவும் கோலகலமாக ஆரம்பமானது. இந்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் அநுர டி.சில்வா பிரதம விருந்தினராகவும், தினச்செய்தி பிரதம ஆசிரியர் கே.ரி. இராஜசிங்கம் இந்திய துணைத்தூதரக அதிகாரி செல்வம், வடமாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அனந்தி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



ஆரம்ப முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டித் தொடரில் வடமாகாணத்திலிருந்து 47 அணிகள் பங்குகொண்டன. ஒரு மாத கால திருவிழாவாக நடைபெற்ற இப் போட்டியைக் கண்டுகளிக்க பல்லாயிரக் கணக்கானோர் கூடினர். இதனால் வல்வெட்டித்துறையே விழாக் கோலம் பூண்டது. 47 அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என போட்டி போட்டு மோதிக் கொண்டன. இறுதியில் மன்னார் கில்லரி, நாவாந்துறை சென்மேரிஸ் அணிகள் இறுதிப் போட்டியில் சமராடத் தெரிவாகின.


கடந்த 26.09.2015 சனிக்கிழமை இறுதிப் போட்டிக்கான நாளும் வந்தது. இரவைப் பகலாக்கும் மின்னொளியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்களின் ஆரவாரத்துடன் இறுதிப் போட்டி ஆரம்பமானது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் எந்த அணி கோலைப் பெற்றுக் கொள்ளும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் மேலோங்கிய போதிலும் முற்பாதி ஆட் டம் இரு அணிகளாலும் கோல் எதுவும் பெறப்படாமலேயே நிறைவு பெற்றது. இதனால் பிற்பாதி ஆட்டத்திற்கான எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கிடையே அதிகரித்தது.

தொடர்ந்து ஆரம்பமான பிற்பாதி ஆட்டத்தில் 58 ஆவது நிமிடத்தில் கில்லரிக்கு கிடைத்த அரிய தண்ட உதை வாய்ப்பினை அற்புதமாகப் பயன்படுத்திய அவ்வணி வீரர் ரஞ்சன் அதனை கோலாக்கி பரபரப்பை ஏற்படுத்தினார். இதனால் ஆட்டத்தில் சூடு பறந்தது. தொடர்ந்து சென்மேரிஸ் வீரர்கள் தமது அணிக்காக கோலொன்றைப் பெற்றுவிடும் முனைப்பில் ஈடுபட்ட போதிலும் கில்லரி பின்கள வீரர்களின் சிறப்பான செயற்பாட்டால் அது தடுக்கப்பட்டது. ஆனால் ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடமே இருக்கையில் சென்மேரிஸ் அணித் தலைவர் ஜெக்சன் அந்த அதிசயத்தை நிகழ்த்தினார். தனக்கு கிடைத்த வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்தி தனது அணிக்கான கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் 1:1 என ஆட்டம் சமநிலையானது.

இதனால் வடக்கின் வல்லவனைத் தெரிவுசெய்ய சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் இரு அணி வீரர்களும் கோல்களை சிறப்பாகப் போட்ட போதிலும் சென் மேரிஸ் கோல் காப்பாளர் துல்லியமாக ஒரு கோலினைத் தடுத்ததனால் 5:4 என்ற கோல்கள் அடிப்படையில் இவ் வருடத்திற்கான வடக்கின் வல்லவனாக நாவாந்துறை சென் மேரிஸ் மகுடம் சூடியது. இப் போட்டியில் ஆட்ட நாயகனாக சென் மேரிஸ் அணித் தலைவர் ஜெக்சன் தெரிவானார்.

இந்த இறுதிப் போட்டி நிகழ்வில் இந்திய துணைத்தூதரகத்தின் தூதுவர் ஆநடராஜன், இலங்கை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் அநுர டீ.சில்வா தினச்செய்தி பிரதம ஆசிரியர் கே.ரி. இராஜசிங்கம், நெற்கொழு விளையாட்டுக் கழகத் தலைவர் சதீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கின் வல்லவனாக சென்மேரிஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் வழங்கினார். சுழற்சிக் கேடயத்தை திருமதி.இராஜசிங்கமும் இரண்டு இலட்சம் ரூபா பணப் பரிசையும் இராஜசிங்கம் தம்பதியினரும் வழங்கி வைத்தனர்.




இரண்டாமிடம் பிடித்த கில்லரி அணிக்கு வெற்றிக்கிண்ணத்தை அநுர டீ.சில்வா வழங்கி வைத்தார். ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசை திருமதி. இராஜசிங்கம், நெற்கொழு தலைவர் சதீஸ் இணைந்து வழங்கினார். அத்துடன், மூன்றாமிடம் பிடித்த அணிக்கு 50 ஆயிரமும் நான்காமிடம் பிடித்த அணிக்கு 25 ஆயிரம் ரூபாவும் சுப்பர் எட்டு சுற்றில் மீதமிருந்த 4 அணிகளுக்கும் தலா பத்தாயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன.

இத்துடன் ஒரு மாத கால உதைபந்தாட்ட திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

இவ்வாறான போட்டிகள் நடாத்தப்படுவது வீரர்களுக்கு சிறந்த பயிற்சியை அளிப்பதுடன் அவர்கள் தேசிய அணியில் இடம்பெறவும் வாய்ப்புக்கள் கிடைக்குமென விளையாட்டு ஆர்வலர்கள் கருத்து தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிருட்சி

# தினச் செய்தி வாரப்பத்திரிகை மேலும் ஒளி வீச வாழ்த்துகின்றேன்



இலங்கையில் வாசிப்பு திறன் அதிகமாக காணப்படும் ஒரு காலகட்டத்தில் தினச்செய்தி என்னும் வாரப் பத்திரிகை வெளிவருவது காலத்தின் தேவையாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பத்திரிகைத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் பல பத்திரிகை களுக்கு மத்தியில் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களின் குரலாக தினச் செய்தி வெளிவருவது வரவேற்புக்குரியதும், பாராட்டுக்குரியதும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தளத்தின் மூலம் அதிகமான வாசகர்களை தன்னகத்தே கொண்டு இன்று உலகளாவிய தமிழ் பேசும் மக்களிடத்தில் ஜனரஞ்சக ஸ்தானத்தை எட்டியுள்ள இந்த தினச்செய்தி இணையத்தின் ஆசிரியரின் உள்ளார்ந்த சிந்தனைகளும், உணர்வுகளும் அச்சு வாகனத்தின் மூலம் வாரப் பத்திரிகையாக வெளிவருகின்றமை மிகவும் வரவேற்புக்குரியதாகும்.

பத்திரிகை வரலாற்றில் ஒரு பதிவாக தங்களது பத்திரிகை புடம் போட வேண்டும் என்ற ஆசிர்வாதத்தினையும், இந்த பத்திரிகை தினந்தோறும் வெளிவரும் தினச்செய்தியாக மாறுவதற்கு தமது ஆசிகளை தெரிவிக்கின்றேன் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.









இப் பத்திரிகை கே.ரி.இராஜசிங்கம் என்பவரால் சுன்னாகத்திலுள்ள அவரது அலுவலகத்தில் பதிக்கப்பெற்று யாழ்ப்பாணம் கரிகணன் அச்சகத்தினரால் அச்சிட்டப்பட்டு ஒக்.04,2015 அன்று வெளியிடப்பெற்றது.